
கல்கி
KALKI
6.4.1975
60
காசு
அடுத்த இதழில்:
தீவுகள்
தொடர்
கதை
ஆரம்பம்



காயங்களால் தொற்று நோய் பரவக்கூடும்
புதிய
பாண்டு-எய்ட்
பிராண்ட்
டிரஸ்ஸிங்
பயன்படுத்தி அவற்றைப் பாதுகாருங்கள். காயங்களை விரைவில் ஆற்ற இப்போது மெர்க்கியூரோக்ரோம் மருந்து கலக்கப்பட்டுள்ளது.
BAND-AID
MEDICATED
WITH
புதிய
பாண்டு-எய்ட்*
*TRADEMARK
J & J

சமையலுக்குப் பெருந்துணை

ஓய்வில்லா தாய்மார்கள் சுவையான சமையல் செய்ய சுலபமான வழி! இந்த 3 பெருந்துணைகளைப் பின்பற்றி, பல்வேறு இன்பமூட்டும் தின்பண்டங்களைத் தயாரித்து மகிழுங்கள்!......



பிரவுன் & போல்ஸன்
கார்ன்ஃப்ளவர்

கபாப், சமோசா, பட்டீஸ் ஆகியவற்றை அதிமெல்லியதாகவும் மொரமொரப்பாகவும் ஆக்குகின்றது. குழைவான சுவைமிகு சூப், கிரேவி ஆகியவற்றைக் கெட்டியாகத் தயாரிக்க உதவுகிறது.

பிரவுன் & போல்ஸன்
வெரய்ட்டி
கஸ்டர்டு பவுடர்

6 இனிமையான சுவை வகைகள்! குடும்பத்தினரை மகிழ்விக்க புடிங், பாயசம், ரப்டி ஆகிய பல்வேறு இன்சுவையுள்ள பண்டங்கள் தயாரிக்க சாலச் சிறந்தது.





ரெக்ஸ்
பேகிங் பவுடர்

கேக், பிஸ்கோத்து, பக்கோடா, பூரி, குலாப் ஜாமூன் ஆகியவற்றை கவைபட அதிமென்மையாகத் தயாரிக்க உதவுகிறது. சிறிதளவே சிறப்பாகச் செய்து முடிக்கிறது!

உங்கள் சமையல் உன்னதமாய் இருக்க
உயர்ந்த சாமானையே உபயோகியுங்கள்
பிரவுன் & போல்ஸன் மற்றும் **ரெக்ஸ்**
தரமுயர்ந்த தயாரிப்புகள்
அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்தோடு
பக்குவப்படுத்தப்பட்டவை—கிடைப்பனவற்றிலேயே சிறந்தவை.

கார்ன் பிராடக்ட்ஸ் கோ. (இந்தியா) பிரைவேட் லிட்.
ஸ்ரீநிவாஸ் ஹவுஸ், எச். ஸோமானி மார்க்,
பம்பாய் 400 001.

OBM 3886 TM

கல்கி

ஆனந்த பங்குனி, 23 ★ ஏப்ரல் 6, 1975

"கல்கியில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே! சம்பவங்களும் கற்பனையே.




அடுத்த வாரம் : சித்திரைச் சிறப்பிதழ்

புதிய அம்சங்கள்:

கடைசிப் பக்கம்: கண்ணதாசன்

கதை, கட்டுரை, கவிதை முதலிய எந்த உத்தியேனும் கையாண்டு சமூக, அரசியல், ஆன்மீக விஷயங்களை அலசுகிறார்.



நிவுகள்
இந்திரா பார்த்தசாரதி

மர்மக் கதை, சமூகச் சித்திரம், இலக்கியத் தரமுள்ள இனிய நாவல் என்று எப்படி வர்ணித்தாலும் பொருந்தும்.



கட்சி மாறும் பட்சி (சித்திரத் தொடர்)

பட்சி ராஜன் கட்சி மாறத் தொடங்கவும் என்னவெல்லாம் வேடிக்கைகள் நிகழ்கின்றன !



சிறப்புச் சிறுகதைகள்

திரை உலக எழுத்தாளர்கள் வழங்கும் புதுமைக் கருத்துக்கள் விறுவிறுப்பான சிறுகதைகளாக மலர்கின்றன.

மந்திரி மாணிக்கம்

வாரம் ஒரு ஜோக்கை அமைச்சர் அவிழ்த்து விடும்போது வயிறு குலுங்காமல் இருக்குமா ?



சந்தா விவரம்					
இந்தியா	ஒரு வருடம்	ரூ. 30-00	ஆறு மாதம்	ரூ. 15-00
இதர நாடுகள்	,,	ரூ. 67-50	,,	ரூ. 33-75
இலங்கை (இலங்கை நாணயம்)	,,	ரூ. 44-00	,,	ரூ. 22-00

இயற்கை உங்களுக்கு அளித்துள்ளது எழில்மிகு கேசம்...
அதனை அவ்வண்ணமே வைத்திருப்பீர்
ஹேலோ கேச பராமரிப்புமூலம்



ஹேலோ ஷாம்பூக்கள் மட்டுமே சீரான, சிறந்த உத்தியின்படி
தயாரிக்கப்படுகின்றன–உங்கள் கேசத்தின் பராமரிப்பிற்கெனவே

ஹேலோ காஸ்மெடிக் ஷாம்பூ:
இந்த விசேஷ ஷாம்பூவை உபயோகித்து, உங்கள் கேசம் எவ்வளவு மெதுவென்றும், மிருதுவாகவும் இருக்க கூடும் என்பதைக் கண்டு கொள்ளுங்கள்.

ஹேலோ எக் ஷாம்பூ:
விசேஷ போஷாக்கு மிக்க இந்த ஷாம்பூவில் உள்ள ஊட்டமிக்க முட்டைப் புரதத்தின் பயனுக உங்கள் கேசம் கட்டுக்–கோப்புடன், கவர்ச்சியாகத் திகழ்கிறது



ஹேலோ லெமன்–ஃப்ரெஷ் ஷாம்பூ:
உங்கள் கேசத்திற்கு இயற்கையான தூய்மையான பளபளப்பைத் தருகிறது.

ஹேலோ கான்ஸென்–ட்ரேட் ஷாம்பூ:
சாதாரணமான துளியளவின் மூலம் உங்கள் கேசத்தை மென்மையாகவும், கட்டுக்கடங்கியும் வைத்திருக்க சிறிதளவே போதும்.

இயற்கை ஆரோக்கியத்துடன் கூடிய கேசத்திற்கு–இன்றே உபயோகிக்கத் தொடங்குவீர் ஹேலோ

கல்வித் தரம் குறைந்ததா?

கல்கி

மலர் 34
இதழ் 36

"கல்வித்தரம் குறைந்துவிட்டது என்று குற்றம் சாட்டு கிறார்கள். அது எப்படிக் குறைந்துவிடும்? எப்போதும் ஒரே நிலையில் தான் இருக்கும். கல்வி கற்பவர்கள், கல்வி போதிப்பவர்கள் ஆகி யோர் தரம் குறைந்துவிட்டது என்பதுதான் உண்மை." வித்யோ தயா பள்ளியின் ஆண்டுவிழாவில் தலைமை வகித்த அமைச்சர் திரு நெடுஞ்செழியன் மேற்கண்டவிதமாகச் சொல்லிவிட்டுத் தொடர்ந்து பேசியது சிந்தனைக்கு உரியதாய் இருந்தது.

வருஷம் 365 நாட்களில் பள்ளி திறந்திருப்பதே இருநூற்று சொச்சம் நாட்கள்தாம். அதிலும் அறுபது சதவீதம் நாட்கள் பள்ளிக்கு வந்தால் போதும். அந்த அளவுக்குக்கூட வராமல் இருந் தாலும் துணைவேந்தரிடம் பரீட்சையில் அமர விசேஷ அனுமதி பெற்றுக் கொள்ளலாம். பரீட்சைக்கு வருஷம் முழுவதும் படிக்க வேண்டாம்; கடைசியில் ஒரு மாதம் படித்தால் போதும். அதுவும் எல்லாப் பாடங்களையும் படிக்க வேண்டாம். மாடல் கேள்வித் தாள்களை வைத்துக் கொண்டு விடைகள் தயாரித்துப் படித்தால் போதும். அதிலும்கூட போன வருஷம் அதற்கு முன் வருஷம் கேட்கப்பட்ட கேள்விகளை அநேகமாக மீண்டும் கேட்க மாட் டார்கள் என்று ஒதுக்கிவிடலாம். பாக்கி இருக்கிற கேள்விகளிலும் உபாத்தியாயர்கள் 'க்ளு' கொடுக்கிறார்கள்; அவற்றுக்கு மட்டும் பதில்கள் தயாரித்தால் போதும். பதில்களைப் பாடப் புத்தகத்தில் தேடிக் கொண்டிருக்க வேண்டாம். நோட்ஸ் இருக்கிறது; நோட் டம் விட்டால் போதும். அப்படிப் படித்து நூற்றுக்கு எண்பது தொண்ணூறு என்று வாங்க வேண்டாம், முப்பத்தைந்து வாங்கினால் போதும் என்று இந்த ரீதியிலே பயிலுகிற கல்வி எந்த அளவுக்குப் பயன் தரும் என்று கேட்டார் அமைச்சர்.

பெற்றோரின் கண்டிப்பான கண்காணிப்பும் மாணவனுக்குச் சிரத்தையும் இருந்தால் எதையும் சாதிக்கலாம் என்றார் அமைச்சர். ஒரு பள்ளியின் மிகச் சிறந்த செல்வம் அதற்குள்ள கட்டிடங் களோ அதில் உள்ள விஞ்ஞான உபகரணங்களோ அல்ல, அதன் ஆசிரியர்கள்தாம் என்று அமைச்சர் சொன்னது பொன்னான கருத்து.

அமைச்சர் கூறியவற்றில் பெருமளவு உண்மை இருப்பினும் நமது கல்வி முறை காரணமாகப் பள்ளிகளும் கல்லூரிகளும் குமாஸ் தாக்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளாகவே இருக்கின்றன என்பதையும் மறுப்பதற்கில்லை. இந்நிலை ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் இருந்தது. சுதந்திரம் பெற்று இருபத்தெட்டாண்டு காலம் ஆனபிறகும் நீடிக்கிறது.

மாணவர்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் விவ சாய, தொழில் வளர்ச்சியிலும் நேரடித் தொடர்பு கொள்ள வேண்டும். அவ்விதம் பங்கேற்பதில் பெருமையடையும் மனப் பான்மையை அவர்களிடம் வளர்க்க வேண்டும்.


கிராமப்புறங்களில் உள்ள பள்ளி மாணவர்களுக்குப் படிப்புடன் கூடத் தொழில்களும் பயில வசதிகள் ஏற்பட வேண்டும். அப்படிச் செய்தால் படிப்பு முடிந்ததும் அவர்கள் வேலை தேடி நகரை நோக்கி ரயிலேற மாட்டார்கள். அங்கேயே உபயோகமான தொழில்களைச் செய்ய வாய்ப்புக்கள் ஏற்படும். கிராமப் பொருளாதாரம் மேம்படும்.

கிராமப்புறங்களில் மாணவர்களுக்கு நவீன விவசாய முறை களைக் கற்றுத் தரலாம். டிராக்டர், சைக்கிள், மோட்டார் சைக்கிள் இவற்றைப் பழுதுபார்க்கக் கற்றுத் தரலாம். டிரான்ஸிஸ்டர் ரேடியோ தயாரிப்பு பற்றிச் சொல்லித் தரலாம். இப்படி எத் தனையோ பல தொழில்களில் ஊக்குவிக்கலாம். கிராமங்களில் மட்டுமின்றி நகரங்களிலும் கூட இத்தகைய தொழில் தொடர் புடைய கல்வியைத்தான் காந்திஜி ஆதரித்தார். அதுதான் வேலை யில்லாத் திண்டாட்டம் பெருகாமல் காக்கும் சஞ்சீவி.

கல்விச் சீர்திருத்தம் பற்றி ஆராய அமைந்த தேசியக் குழு (NCERT) இம்முறையைச் சிபாரிசு செய்திருக்கிறது.

சிபாரிசுகளை ஊறுகாய் ஜாடியில் போட்டு வைக்காமல் மத்திய, மாநில அரசுகள் விரைவாகச் செயல்படுத்தட்டும்.

தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்



விவசாயி
லெவி
வறட்சி
ஏதோ கை எலும்பு ஒடியறாப் போலிருக்கே சார்
வர்த்தக நட்பு
ருஷ்யா

கடத்தல் மன்னனின் வெற்றி!

கள்ளக் கடத்தல்காரர்கள் மீது போர் தொடுக்கிறேன் என்று ஆரம்பித்தார் இந்திரா காந்தி. அரைகுறை மனசுடன் ஒரு நாடகம் நடத்தி முடிந்தாயிற்று. இன்று மீண்டும் கள்ளக் கடத்தல் வியாபாரம் வெகு மும்முரமாக நடக்கிறது. பம்பாயில் பலவிதமான அயல்நாட்டுப் பொருள்களையும் தாராளமாக வாங்க முடிகிறது. யு. என். ஐ. செய்தி ஸ்தாபனம் நடத்திய ஓர் ஆராய்ச்சியின் முடிவு, கள்ளக் கடத்தல்காரன் அரசை வென்று விட்டான் என்பது!

ஆட்சியாளர்கள் மனித இயல்புகளைப் புரிந்து கொண்டு ஆள வேண்டும் என்றார் ராஜாஜி. எங்கே பர்மிட், லைசென்ஸ், கோட்டாக்கள், கண்ட்ரோல்கள் என்று பலவிதமான கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றனவோ அங்கே கள்ளக் கடத்தல், கள்ளச் சந்தை, லஞ்ச ஊழல் எல்லாம் தலைவிரித்தாடும். இந்த அடிப்படையைப் புரிந்து கொண்டு சுதந்திரப் பொருளாதாரத்துக்கு வழிவகுத்தாலன்றி விமோசனம் இல்லை. போட்டா போட்டி முறையில் உற்பத்தி, வர்த்தகம், வியாபாரம் எல்லாம் நடக்க அனுமதித்தால் பொருளாதாரம் வளமடைவதோடு கள்ளக் கடத்தல், கள்ளச் சந்தை, லஞ்ச ஊழல் போன்றவற்றுக்குச் சாவுமணி அடித்ததாகவும் ஆகும்.

கரடியாகக் கத்தினாலும் ஆட்சியாளர் காதில் ஏறினால்தானே? அப்படி ஏறினாலும் அரசியல் சுயநலம் அதை மற்றொரு காது வழியாக வெளியேற்றி விடுகிறது.

நிறைவான வாழ்க்கை

நிறைவான வாழ்க்கை கண்ட முசிறி நம்மிடமிருந்து மறைந்து விட்டார்.

வயதிலும் நிறைவுதான்; சாதனைகளிலும் நிறைவு கண்டவர்தான். கர்நாடக சங்கீத உலகின் ஒரு ஜாம்பவான் என்று கூறலாம்.



அமரர் 'முசிறி'

நற்பணிகள் பலவற்றிலும் தம்மையும் தமது சங்கீதத்தையும் ஈடுபடுத்திக்கொண்டவர் முசிறி. தேசிய இயக்கத்துக்கும் தமிழிசை இயக்கத்துக்கும் ஆதரவு தந்தவர். நற்பணிகளுக்காக மலேயா, இலங்கை ஆகிய நாடுகளில் கச்சேரிகள் செய்து நிதி திரட்டியவர்.

'தேவியைத் தோட்டத்திலே' என்ற பாட்டை ஆதிநாளில் பாடிப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார் என்றால் 'திருவடி சரண'த்தைச் சமீப நாள்வரை பாடி இதயத்தை நெகிழவைத்துக் கொண்டிருந்தார்.

பக்தி வளர்க்கும் பணியில் கருத்துக் கொண்டு துக்காராம் திரைப் படத்திலும் நடித்தார். சென்னை கர்நாடக இசைக் கல்லூரியின் முதல்வராகப் பதினைந்தாண்டுகள் பணியாற்றி அதனைச் சிறப்பித்தார்.

பலப்பல பட்டங்களையும் விருதுகளையும் கௌரவங்களையும் பெற்றுச் சங்கீத உலகின் அரியாசனத்தில் வீற்றிருந்த போதிலும் எளியவருக்கு எளியவராய் யாரிடமும் சிரித்துப் பேசி மகிழ்வார். அப்பழுக்கற்ற குணவானாகத் திகழ்ந்தார்.

சுருதியைக் கூடுதலாக வைத்துக் கொண்டு பாடுவதிலும் விளம்ப காலத்தில் உணர்ச்சி பூர்வமாக சாஹித்யத்தின் அர்த்த பாவத்தில் தம்மைக் கரைத்துக் கொண்டு பாடுவதிலும் தனித் தன்மை காட்டினார்.

முசிறி மறைந்தாலும் முசிறி பாணி இன்றும் நாளையும் இருக்கும். வழிவழியாக அவரது சிஷ்யர்களிடம் அது பிரஞ்ஜீவித் தன்மை பெற்றுத் திகழும்.

எல்லார்வி மணிவிழா

தமிழ்ப் பத்திரிகை உலகில் நீண்ட நெடுங்காலமாகச் சக்கைப்போடு போட்டுக்கொண்டு வருகிறவர் எல்லார்வி என்ற புனைபெயருக்குள் ஒளிந்து கொண்டிருக்கும் எல். ஆர். விசுவநாத சர்மா. அவரால் எழுதப்பட்டுப் பத்திரிகை வாசகர்களை மகிழ்வித்த சிறுகதைகள், நாவல்கள் ஏராளம்.


ராஜாஜி சிந்தனை

ஐந்தாம்படை எழுத்து!

காமமானது தன்னிடத்தில் மனிதனின் முழுக் கவனத்தையும் ஈர்த்து மற்ற எல்லாவற்றையும் மறக்க அடிக்கிறது. எனவே ஆசையும் மோகமும் தேசிய உணர்வுகளுக்கு ஊறு விளைவிப்பவை. நாட்டுப் பற்றுடன் செய்ய வேண்டிய காரியங்களுக்கான சக்தியை அழிப்பவை. பிரும்மச்சரியமே தேசத்துக்கும் தனி நபருக்கும் சக்தி தரும் புனல்.

ஆகவே ஆபாச எழுத்து நாட்டின் வளர்ச்சிக்கும் தேசத்தின் பாதுகாப்புக்கும் தீங்கு செய்யும் ஐந்தாம் படையாகும். இது விஷயமாக அறிவு பூர்வமாய்ச் சம்பந்தப்பட்டவர்கள் சிந்திக்க ஏதேனும் செய்தாக வேண்டும். சுதந்திரத்தைத் துஷ்பிரயோகம் செய்வதைத் தடுத்தாக வேண்டும்.

சுயராஜ்யா நவம்பர் 16, 1963.



திரு எல்லார்வி கற்பனை இலக்கியம் தவிர இசை உலகுக்கும் தம் எழுத்தின் மூலம் அருந் தொண்டாற்றி யிருக்கிறார். இசை வல்லுனர்கள் பலருடன் நெருக்கமான தொடர்பு கொண்டு அவர்களின் வாழ்க்கை வரலாறுகளைச் சுவைபடப் பல நூல்களாக எழுதி வெளியிட்டுள்ளார்.

இளம் வயதிலேயே வேதம், சாஸ்திரம் முதலியவற்றில் தேர்ந்த அவர், இன்று ஸ்ரீவித்யா உபாசகராகவும் விளங்குகிறார். இத்தனை சாதனைகளுக்குப் பிறகும் அன்பும் பண்பும் மாறாமல் சகலரிடத்தும் அடக்கமும் எளிமையும் மிளிரப் பழகுவார்.

பல்வகைச் சிறப்புக்கள் பெற்ற எழுத்தாளர் எல்லார்வியின் மணிவிழாவைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்ற நோக்கில் கலைமகள் ஆசிரியர் திரு கி. வா. ஜகந்நாதன் அவர்களைத் தலைவராகக் கொண்ட மணி விழாக் குழு அமைக்கப்பட்டுள்ளது. 'கல்கி' ஆசிரியர் பொருளாளராகப் பொறுப்பேற்றுள்ளார்.

எல்லார்வி மணிவிழா நிதிக்கு நன்கொடை வழங்க விரும்புகிறவர்கள், கி. ராஜேந்திரன், பொருளாளர், எல்லார்வி மணிவிழா, கல்கி காரியாலயம், சென்னை—31 என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்.

கம்யூனிஸக் கயமை

சீனனை நம்பினாலும் கம்யூனிஸ்டை நம்பாதே என்ற புதுமொழி வியட்நாம் விவகாரத்துக்கு மிகவும் பொருந்தும்.

அமெரிக்கத் துருப்புக்கள் வியட்நாமை விட்டு எப்போது வெளியேறும் என்று காத்துக்கொண்டிருந்தவர்கள் போல் பாரிஸ் ஒப்பந்தத்தைக் காற்றில் பறக்க விட்டு விட்டுக் கம்யூனிஸ்டுகள் தெற்கு வியட்நாமைக் கபளீகரம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

ஜனாதிபதி தியூ திறமை குறைவுள்ளவராகவே இருக்கட்டும், மக்களின் அபிமானத்தைப் பெருமளவில் பெறாதவராகவே இருக்கட்டும், எதிர்க் கட்சியினரை ஏமாற்றத்துக்கு உள்ளாக்கியவராகவே இருக்கட்டும் — இவையே கம்யூனிஸ ஆக்கிரமிப்புக்கு லைசென்ஸ் தந்ததாக ஆகிவிடாது.

அமெரிக்கா மீண்டும் நேரடியாகப் போரில் ஈடுபடுவதை அமெரிக்க மக்கள் விரும்பவில்லை; எனவே அந்த வல்லரசு போர்த் தளவாடங்களை வழங்குவதுடனும் யோசனைகளைக் கூறி உதவுவதுடனும்தான் நிற்கும் என்ற நிலை கம்யூனிஸ்டுகளுக்குத் துணிச்சலை அளித்திருக்கிறது. தலைநகரத்தைத் தாக்கச் சமயம் பார்த்திருக்கிறார்கள்.

ஸைகான் வீழ்ந்தால் அது கம்யூனிஸ வெற்றியாகாது; கம்யூனிஸக் கயமையின் வெற்றியாகும்!

இரட்டிப்புத் தோல்வி


வியட்நாமின் இன்றைய நிலை கிஸ்ஸிஞ்சரின் சமாதான முயற்சிக்குத் தோல்வி என்றால் மேற்கு ஆசிய நிலை இரட்டிப்புத் தோல்வியாக முடிந்திருக்கிறது. உலக சமாதானத்தை விரும்பும் அனைவருக்கும் இது பேரிடி. எந்த விதமான சமரச உடன்பாடும் இஸ்ரேல்—எகிப்து நாடுகளிடையே ஏற்படவில்லை.

இஸ்ரேல் தான் போரில் கைப்பற்றிய அராபியப் பிரதேசங்களைப் பெருந்தன்மையுடன் திருப்பித் தந்து விடுவதாகச் சொல்லி அந்த அடிப்படையில் நிரந்தர சமாதான ஒப்பந்தம் கோரினால் உலகின் நோக்கில் அதன் பெருமை வானளாவ உயர்ந்திருக்கும்.

பங்களா தேச விடுதலைப் போரின் முடிவில் மேற்கு எல்லையில் நாம் கைப்பற்றியிருந்த பாகிஸ்தானியப் பிரதேசங்களை உடனடியாகத் திருப்பிக் கொடுத்து நேசக் கரம் நீட்டினோம் அல்லவா? அத்தகைய கௌரவமான; கண்ணியமான போக்கை இஸ்ரேலும் கையாண்டால் உலகின் பெருமதிப்புக்குப் பாத்திரமாகும்.

ஆனால் இஸ்ரேல், எகிப்து மீண்டும் தாக்கும் என்று அஞ்சுகிறது. ஸூயஸ் கால்வாயைத் தன் உபயோகத்துக்கு அனுமதிக்காது என்று கருதுகிறது. ஒருவரையொருவர் சந்தேகக் கண்கொண்டு பார்க்கிற நிலை நீடிக்கும்வரையில் சமாதான ஒப்பந்தம் எப்படி சாத்தியமாகும்?

அராபியப் பிரதேசங்கள் இஸ்ரேலின் ஆளுகைக்கு உட்பட்டு இருக்கும்வரை எகிப்தின் போர்க் குமுறல் அடங்காது என்பதை இஸ்ரேல் உணர்வது அவசியம்.




"இந்தாப்பா! டிக்கெட் எங்கே?"


"என் பாம்புப் பெட்டிக்குள்ளே பத்திரமா இருக்கு. நீங்களே எடுத்துப் பார்த்துக்குங்க!"

"ஹலோ! போலீஸ் ஸ்டேஷன்தானே! சீக்கிரம் துப்பறியும் நாயுடன் வருகிறீர்களா?"

"என்ன திருடு போச்சு?"

"இரும்பு பீரோவை உடைத்து வெள்ளிக் கூஜாவில் நான் வச்சிருந்த தண்ணியை மட்டும் எவனோ குடிச்சிட்டு ஓடிட்டான்...!"





"ஃபுட்போர்டிலே நின்னு கொண்டு பிரயாணம் செய்தால்தானே தப்பு?"

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்



முருகப்பெருமான் (4)

ஆசாரியாளிடம் தன் தோல்வியை ஒப்புக் கொண்டுவிட்டான் அமரசிம்மன்.

அதற்கப்புறம் அவனுக்குத் தான் எழுதிய புஸ்தகங்கள் எல்லாம் ஏன் இனிமேலும் இருக்க வேண்டும் என்ற எண்ணம் வந்தது. அத்வைதபரமாக ஆசார்யாள் எவ்வளவு எழுதியிருந்தாரோ அவ்வளவு இவனும் ஜைன சம்பந்தமாக எழுதியிருந்தான். இப்போது தன் சித்தாந்தம் தோற்றுப் போனதாக ஒப்புக் கொண்டபின் இந்தப் புஸ்தகங்களை மற்றவர்களுக்காக விட்டு வைப்பது சரியாகாது என்று நினைத்தான்.

எந்த மதஸ்தரானாலும், நேர்மை, சத்தியம் உள்ளவர்கள் எதிலேயும் இருப்பார்கள். ஜைனர்களுக்கு சத்தியம், நேர்மை மிகவும் அதிகம். இப்போது அமரசிம்மனுக்குத் தப்பாக நிரூபணமாகிவிட்டதன் சித்தாந்தங்கள் லோகத்தில் இருக்க வேண்டியதில்லை என்ற எண்ணம் வந்துவிட்டது. எனவே, பெரிதாக நெருப்பை மூட்டி, தான் எழுதியிருந்த சுவடிகளை ஒவ்வொன்றாக அதிலே போட்டுப் பஸ்மமாக்கினான். சரஸ்வதியின் அனுக்கிரகம் பெற்று, எத்தனையோ காலம் பரிசிரமப்பட்டு எழுதினதை யெல்லாம் இப்போது ஒரு கொள்கைக்காகத் தன் கையாலேயே அக்னியில் போட்டு எரித்தான்.

இதை ஆசார்யாள் கேள்விப்பட்டார். ஆனால் துளிக்கூடச் சந்தோஷப்படவில்லை. மாறாக மிகுந்த துக்கம் கொண்டார். அவர் அமரசிம்மனிடம் ஓடோடி வந்தார். ''அடடா, என்ன காரியம் செய்து கொண்டிருக்கிறாய்? லோகம் என்று ஒன்று இருந்தால் நாநா விதமான அபிப்பிராயங்கள் இருக்கத்தான் செய்யும். பல அபிப்பிராயங்கள் இருந்து ஒன்றுக்கொன்று ஒப்பிட்டுப் பார்த்து, சர்ச்சை பண்ணுவதுதான் பல நிலைகளில் இருக்கிற மக்களுக்கு அறிவைத் தெளிவுபடுத்தும். நீ எந்த மதஸ்தனாகத்தான் இருந்துவிட்டுப் போ; ஆனாலும் நீ மகா புத்திமான் என்று நான் உன்னைக் கௌரவிக்கிறேன். உன் கொள்கைகளைப் புத்தி விசேஷத்தால் எத்தனை நன்றாக எடுத்துச் சொல்ல முடியுமோ, அத்தனை நன்றாகச் செய்து எழுதிக் காட்டியிருக்கிறாய். உண்மையில் பரமதத்வம் இதற்கு மாறாக இருந்தாலும் இருந்துவிட்டுப் போகட்டும். உன் புத்தியளவில் நீ இந்தச் சித்தாந்தங்களுக்கு எப்படி ஆதரவு காட்டியிருக்கிறாயோ அதிலேயே ஓர் அழகு, புத்தியின் பிரகாசம் இருக்கிறது. இதையெல்லாம் லோகத்தில் இல்லாமல் செய்யலாமா?'' என்று ஆசாரியாள் அவனிடம் சொல்லி, அவன் கையைப் பிடித்து அவன் கடைசி கடைசியாக அக்னியில் போட இருந்த புஸ்தகத்தைப் போடவொட்டாமல் தடுத்தார்.

அப்போது அவன் கையிலிருந்ததுதான், 'அமரகோசம்'. ஆசாரியாள் தடுத்திருக்காவிட்டால் அதுவும் ''ஸ்வாஹா''வாகியிருக்கும். ஆனாலும் துரதிருஷ்டவசமாக, சமய சம்பந்தமான அவனுடைய புஸ்தகங்கள் எல்லாம் போயே போய்விட்டன. இந்த அகராதி, நிகண்டு மட்டுமே நம் ஆசார்யாள் கருணையால் பிழைத்தது. 'அமரம்' என்ற பெயருக்கேற்றபடி இதை மட்டும் அவர் அழியாமல் அமரமாக்கிவிட்டார்.

அகராதியில், அதை எழுதியவன் சமயம் முதலான எந்தச் சொந்தக் கொள்கைக்கும் பட்சபாதம் காட்டக் கூடாது. பர மதங்களைச் சேர்ந்த வார்த்தைகளானாலும் இங்கே அகராதியில் அவற்றை ஆட்சேபிக்காமல், அவற்றுக்கு அந்தந்த மதஸ்தர்கள் என்ன அர்த்தம், என்ன பெருமை என்று நினைக்கிறார்களோ அதைத்தான் கொடுக்க வேண்டும். வேண்டுமானால், 'இப்படி இன்னாருடைய நம்பிக்கை (belief)' என்று பட்டும் படாமலும் சேர்க்கலாமே தவிர, கண்டனம் ஒன்றும் பண்ணக் கூடாது. எல்லா வார்த்தைகளுக்கும் அர்த்தம் கொடுக்கத்தான் வேண்டும் — அது எந்தக் கட்சியாரின் கொள்கை என்று பார்ப்பது அகராதிகளின் வேலை இல்லை.

இந்த நியாயத்துக்குக் கட்டுப்பட்டுத்தான் அமரசிம்மன் ஜைனனாக இருந்தபோதே இந்த அமரகோசத்தை எழுதியிருக்கிறான் — இன்றைக்கும் சகல ஸம்ஸ்கிருத மாணவர்களும் நெட்டுருப் போடுகிற மாதிரி பொது நோக்கோடு எழுதியிருக்கிறான்.

'அகராதியையா, நெட்டுருவா?' என்று கேட்பீர்கள். ஆமாம், அமரகோசம் அழகான சுலபமான ச்லோகங்களாக அப்படியே நெட்டுருப் போட வசதியாகத்தான் இருக்கிறது. அதை மனப்பாடம் செய்வதே வழக்கமாகிவிட்டிருக்கிறது.

அந்தக் காலத்தில் எல்லா சாஸ்திரங்களும் —வேதாந்தம், வைத்தியம், சங்கீதம், டிக்ஷனரிகூடத்தான் — ச்லோகங்களாகத்தான் செய்யப்பட்டன. காரணம் என்ன? அப்போது அச்சுப் போட்டுப் புத்தகம் தயாரிக்கத் தெரியாது. எனவே கடைக்குப் போய் விலை கொடுத்து எத்தனை பிரதி வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம் என்றால் முடியாது. அத்தனை வித்யார்த்திகளுக்கும் ஏட்டுச் சுவடியில் எழுதிக் கொடுப்பது என்றால் அதற்கே பலருடைய ஆயுசுக் காலம் போதாது. எனவே எதையும் மனப்பாடம் பண்ணுகிற மாதிரிக் கொடுப்பதே யுக்தம் என்று கண்டார்கள். சந்தம், எதுகை மோனை முதலானவைகளோடு சேர்த்து செய்யுளாக வந்துவிட்டால் மனப்பாடம் செய்து மனசில் மறக்காமல் பதித்துக் கொள்ளலாம். இதனால்தான் எந்த சாஸ்திரத்தையும் ச்லோகங்களாகச் செய்து உருப்போட வைத்தார்கள்.

(தொடரும்)



ஹால் டிக்கெட் எங்கே?

ஜெயந்தி

"ஹல்லோ, கமலாவா? வசந்தி பேசறேன்!"

"என்ன வசந்தி? இந்த நேரத்திலே நீ பேசறது அபூர்வமாச்சே? அடுப்படிக் காரியமெல்லாம் முடிஞ்சுடுத்தா?"

"அது கிடக்குடி; எனக்கு உடனே யார் கிட்டேயாவது சொல்லிக்கணும் போலிருந்தது. மூணு பத்துப் பைசாக்களைத் தேடி எடுத்துண்டு வந்தேன். உன்னை விட்டா யார் கிடைப்பா நான் பொலம்பற கதையைக் கேட்க?"

"அப்படி என்னடி நடந்து போச்சு இப்போ? ஒரேயடியா அலுத்துக்கறே?"

"அதைச் சொல்லத்தானே ஃபோன் பண்ணினேன். பாலு மெட்ரிக் பரீட்சை எழுதறானோ இல்லியோ...!"

"ஆமாம், நன்னாப் படிச்சிருக்கேன்னு இரண்டு நாள் முன்னாடி கேட்டப்போ சொன்னானே."

"நன்னாத்தான் படிக்கிறா. அப்புறம் நேத்து ராத்திரிலே எழுந்து உட்கார்ந்துண்டு 'ஓ'ன்னு அழறா! என்னடான்னு கேட்டா, 'எல்லாம் மறந்து போச்சு, பரீட்சையில் ஃபெயில் ஆயிடப் போறேன்'னு சொல்லிட்டு விசும்பி விசும்பி அழறா."

"அழகுதான் போ; தூக்கத்திலே சொப்பனம் கண்டிருப்பா."

"அதென்னவோ தெரியலே. அப்புறம் தைரியம் சொல்லித் தூங்கப் பண்ணினேன். காலம்பற எழுந்து புத்தகங்களை மறுபடியும் புரட்டிப் பார்த்துண்டா."

"தைரியம் பிறந்துடுத்தாக்கும்."

"உம்... வழக்கமா ஸ்கூலுக்குத் தானாகவே போயிடுவா. இப்போ பரீட்சை ஸெண்டருக்குப் போகணுமே. 'முதல் நாளைக்கு நீ கொண்டு விட்டுடும்மா. நாலையிலிருந்து நானே போயிக்கிறேன்'னு. சரின்னு புறப்பட்டேன்."

"அந்த வேலை வேறே உனக்கு வந்து சேர்ந்ததா?"

"வாசல்லே இறங்கினப்போ அவன் ஃப்ரெண்ட் ஜிதேன் சிவா கண்ணிலே தென்பட்டா. அவாளும் அதே பரீட்சை எழுதறவா. 'நாங்க சேர்ந்து போயிக்கறோம் மாமி; உங்களுக்கு எதுக்குச் சிரமம்'ன்னு. நான் உடனே பாலுவிடம், 'சரி, நீ ஃப்ரெண்டுகளோடு போ. நான் உன் பாட்டியைப் பார்த்துட்டு வந்துடறேன்'னு சொல்லிவிட்டுப் பிறந்தகத்துக்குப் போனேன்."

"உன் அம்மாவுக்கு உடம்பு தேவலையா?"

"ஏதோ இருக்கா. என் கையாலே அரை டம்ளர் ஹார்லிக்ஸ் கரைச்சுத் தருவதற்குள்ளே 'ஓ'ன்னு புலம்பிண்டு பாலு வந்து நிக்கறது!"

"ஏன்? ஏன்? என்ன ஆச்சு?"

"'ஹால் டிக்கெட்டை மறந்துட்டேனம்மா. என்ன பண்ணுவேன்? பரீட்சைக்கு லேட் ஆயிடும்; உள்ளே விட மாட்டாளே. ஒரு வருஷம் வீணாப் போச்சே'ன்னு கதறித் தீர்த்துட்டா!"

"அட கடவுளே!"

"உடனே பதறி அடிச்சுண்டு தெருவுக்கு ஓடி. அங்கே போயிண்டிருந்த ஓர் ஆட்டோவைக் கைதட்டி நிறுத்தினேன். புக்காத்து விலாசத்தைச் சொன்னேன். அவனோ கிட்டத்திலேதானே இருக்கு, நான் வரமாட்டேங்கறான்! அப்புறம் 'பணம் வேணும்னா கூடுதலா வாங்கிக்கோப்பா, ரொம்ப அவசரம்'னு அவன் காலைப் பிடிக்காத குறையாக் கெஞ்சி...."

"அழகுதான்! உன் தலையிலே என்ன இப்படி எழுதியிருக்கான் பிரும்மா?"

"அதோடு விட்டதா கமலா, சொச்சத்தையும் கேளு!"

"இன்னும் இருக்கா ராமாயணம்?"

"இப்பத்தானே அயோத்தியா காண்டம் முடிஞ்சிருக்கு!"

"சிவசிவா! உம்... அப்புறம்?"

"ஆட்டோவிலே ஏறிண்டு வீட்டுக்கு விடச் சொன்னேனா? வாசல்லே வண்டியை விட்டு இறங்கிப் பார்த்தாப் பூட்டுத் தொங்கறது!"

"அட ராமா!"

"ராமர் மட்டுமென்ன? குருவாயூரப்பன்லே இருந்து ஜகந்நாதன் வரை அத்தனை பேரையும் உதவிக்கு அழைச்சுட்டேன் அப்போ! ஆத்துக்காரர் காலமயே ஆபீஸுக்குப் போயிட்டார். நானும் பானுவும் படி இறங்கினதும் மாமியாரும் வீட்டைப் பூட்டிண்டு கிளம்பியிருக்கா!"

"ஐயையோ!"

"நல்லவேளை! பக்கத்தாத்துப் பரிமளம் வாசல் பக்கம் அப்போ எட்டிப் பார்த்திருக்கா. அவகிட்ட என் மாமியார், 'ஒருவேளை வசந்தி வந்தா நான் கோயிலுக்குப் போயிருக்கேன்னு சொல்லு. உங்காத்திலேயே ரெண்டு பேருமா பேசிண்டிருங்கோ. வந்துடறே'ன்னு சொல்லிவிட்டுப் போயிருக்கா."

"எந்தக் கோயில்னு நீ போய் அவளைத் தேடுவே?"

"அதுதானே வேடிக்கை! 'கற்பகாம்பாளைத் தரிசனம் பண்ணிட்டு வந்துடறேன்னு' சொல்லியிருக்கா பரிமளத்துக்கிட்டே. ஆனாலும் பாரு கமலா, அறுபத்து மூவர் உற்சவம் நடக்கிறது. அந்தத் திருவிழாக் கூட்டத்திலே நான் மாமியாரை எப்படித் தேடறது? எனக்கு எப்படி இருந்திருக்கும்? பக்கத்திலே பானுவானா உடம்பெல்லாம் வெட வெடன்னு நடுங்க நிக்கறா. , ஆட்டோக்காரன் அவசரப்படுத்தறான்!"

"அடப் பாவமே! அப்புறம் என்னதான் பண்ணினே?"

"என்ன பண்ணறது? பிள்ளையாரப்பா! குழந்தையைக் காப்பாத்து. தேங்காய் உடைக்கிறேன்னு பிரார்த்தனை பண்ணிண்டு பானுவையும் அழைச்சுண்டு அதே ஆட்டோவிலேயே கபாலீசுவரர் கோயிலுக்குப் போனேன்!"

"மாமியார் அகப்பட்டாளா?"

"என்ன ஆச்சரியம் பாரு! கூட்டத்தை விலக்கிண்டு விடுவிடுன்னு நடந்து கோபுரத்தைத் தாண்டி இரண்டு அடி எடுத்து வைச்சேன். சாட்சாத் மாமியாரே எதிரே வந்துட்டா!"

"கடவுளே பிரத்தியட்சம் ஆன மாதிரி இருந்துதாக்கும்!"

"அவசரம் அவசரமா சாவியைக் கேட்டு வாங்கிண்டு பானுவையும் இழுத்துண்டு ஓடி, கொஞ்ச தூரத்திலே நிறுத்தியிருந்த ஆட்டோவிலே ஏறிண்டு..."

"வீட்டுக்கு வந்து ஹால் டிக்கெட்டை எடுத்துண்டு மறுபடியும் அதே ஆட்டோவிலே ஏறிப் பானுவோடே பரீட்சை சென்டருக்குப் போய்ச் சேர்ந்தியாக்கும்! உள்ளே விட்டாளா அவளை?"

"ஐந்து நிமிஷம் லேட். போனால் போகட்டும்னு விட்டுட்டான. அவ உள்ளே போய் நாற்காலியிலே உட்காருவதைப் பார்த்தப் புறம்தான் எனக்கு நெஞ்சு படபடப்பு அடங்கியது...."

"அது சரி. வசந்தி! எதுக்கு இப்போ நீ அழறே? எல்லாந்தான் நல்லபடியா முடிஞ்சு போச்சே... இதோ பார்! ஏய்! சூச்சூச்சூ! நிறுத்து அழுகையை! அசடு!"


"அதில்லே கமலா, காலமே ஒன்றரை மணி நேரம் நான் பட்ட பாடு இருக்கே, அப்போ அழக்கூட அவகாசம் இல்லே!"

"விட்டுத் தள்ளு சொல்றேன். சோதனை பண்ணறப்போக்கூட பகவான் கருணையும் காட்டறார். பானு காலமே எட்டரை மணிக்கே படி இறங்கினதாலே தப்பிச்சா. ஒன்பது மணிக்குப் புறப்பட்டிருந்தான்னு வைச்சுக்கோ என்ன ஆகியிருக்கும்? பரீட்சையே எழுத முடியாமப் போயிருக்கும் இல்லையா? அதை நினைச்சு ஆண்டவனுக்கு நன்றி செலுத்து. நான் சாயங்காலமா நேரில் வந்து பார்க்கறேன்."

"சரி கமலா. இத்தனை பொறுமையா கேட்டுண்டியே. ரொம்பத் தாங்க்ஸ்!"

(இது நடந்த கதை! பெயர்கள் மட்டும் கற்பனை).





இந்த
ஆட்சியில்
இதுவும்
நடக்கும்
இன்னமும்
நடக்கும்!

விடாதே பிடி!

ராஜா

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

இப்பவும் எங்களது கிராமமாகிய குப்பம்பட்டியில் கோழித் தீவனங்கள் சரிவரக் கிடைப்பதில்லை. கண்ட கண்ட தீவனங்களை வைப்பதால் கோழிகள் சரிவர முட்டையிடுவதில்லை. எனவே, ஜீவனத்துக்குக் கோழி முட்டைகளையே நம்பியுள்ள என் வருவாய் பாதிக்கப்படுகிறது. அரசு உடனடியாகத் தக்க நடவடிக்கைகள் எடுத்து, கோழித் தீவனங்கள் சரிவரக் கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். பிச்சைமுத்து

இந்தக் கடிதம் ஒரு தினசரிப் பத்திரிகையின் 'ஆசிரியருக்குக் கடிதங்கள்' பகுதியில் பிரசுரமாகிய பத்து நாட்களுக்கெல்லாம் ஓர் அதிகாரி பிச்சைமுத்துவைத் தேடிக் கொண்டு வந்தார். அவர் வந்த சமயம் பிச்சைமுத்து கோழி முட்டைகளை எண்ணி, கூடையில் அடுக்கிக் கொண்டிருந்தார்.

''நீர்தானே பிச்சைமுத்து?''

''ஆமாம்.... நீங்க யாரு ?''

அதிகாரி அதற்குப் பதில் சொல்லாமல் கேள்விகளைத் தொடர்ந்தார்.

''இந்த முட்டைகளெல்லாம் உங்கள் கோழிகள் இட்டவையா ?''

''ஆமாம்....''

''நீர் வரி கட்டினீரா ?''

''வரியா ? எதுக்குங்க?''

''கோழி முட்டை உற்பத்தி செய்கிறீரே, அதற்குத்தான்..... எக்ஸைஸ் தீர்வை என்று கேள்விப்பட்டதில்லையா ? அது கட்டியாக வேண்டுமே !''



''கோழி முட்டையை நான் எங்கே உற்பத்தி செய்கிறேன்? கோழிங்க இடுது.... அவ்வளவுதான்.... இது என்னங்க புதுசா வரி ?..... அநியாயமா இருக்குதே !''

''நியாயம் – அநியாயம் என்றெல்லாம் பேச வேண்டாம்.... நிதி மந்திரி சி. சுப்பிரமணியத்தைப் போய்க் கேளும்.... விற்பனைக்கென்று தயாராகிற எந்தப் பொருளுக்கும் எக்ஸைஸ் தீர்வை உண்டென்று அவர்தான் சமீபத்திய பட்ஜெட்டில் சொல்லியிருக்கிறார். எடும், உம்ம கோழி முட்டை விற்பனைக் கணக்கை !''

பிச்சைமுத்து தம்முடைய வீட்டுச் சுவரில் பென்சிலால் குறித்து வைத்திருந்த முட்டைக் கணக்கைக் காட்டினார். ஒரு முட்டைக்கு 1.8 காசு வீதம் அவர் எக்ஸைஸ் தீர்வை கட்ட வேண்டும் என்று அங்கேயே கணக்குப் போட்டுச் சொல்லிவிட்டு, ஒரு மாத அட்வான்ஸாக நூறு ரூபாய் வாங்கிக் கொண்டு போனார் அதிகாரி.

இதற்கு இரண்டு நாட்களுக்கெல்லாம் இன்னோர் அதிகாரி வந்தார்.

''வாரும், உம்முடைய தொழிற்சாலையைப் பார்வையிடலாம்.....''

''தொழிற்சாலையா ?''

''அதான்யா உம்ம கோழிப் பண்ணை.... அங்கேதானே முட்டை உற்பத்தி பண்ணுகிறீர் ?....''

''பண்ணை – கிண்ணை இல்லீங்க... பதினெட்டே கோழி... இந்தக் கூண்டுக்குள்ளே தான் போட்டு அடைப்பேன்.....'' என்று பழைய பிரம்புக்கூட்டைத் தூக்கிக் காட்டினார் பிச்சைமுத்து.

''நோ.... நோ.... இதுமாதிரி அடைபட்டால் தொழிலாளர்களின் ஆரோக்கியம் என்னாவது ?... நான் தொழிற்சாலை இன்ஸ்பெக்டராக்கும்!.... அடுத்த தடவை நான் வருவதற்குள் இந்தக் கூண்டைத் தூக்கி எறிந்துவிட்டு, புதிதாகக் கட்டடம் நிர்மாணித்தாக வேண்டும் நீர்..... புரிந்ததா?''

பிச்சைமுத்து தமது நண்பர் ஒருவரிடம் கடன் வாங்கி, கோழிகளுக்கென சின்னஞ்சிறு அறை ஒன்றைக் கட்ட முனைந்திருந்தபோது, மூன்றாவது அதிகாரி வந்து சேர்ந்தார்.

''நன்றாகக் கேட்டுக் கொள்ளும் ஐயா....! உம்ம கோழித் தொழிலாளர்களை ஒரு நாளைக்கு எட்டு மணி நேரத்துக்கு மேல் வேலை வாங்கக் கூடாது.... எட்டு மணி நேரத்துக்கு மேலே வேலை செய்தால் ஓவர் டைம் கொடுக்கணும்.....''

''கோழிகளுக்கு ஓவர்டைமா ?''

''ஆமாய்யா.... அதோடு நாற்பத்தெட்டு மணி நேரம் ஒரு கோழி வேலை செய்தால் ஒரு நாள் வாராந்தர விடுமுறை கொடுக்க வேண்டும்.....''

''அப்படீங்களா ?''

''ஆமாம்.....தொழிலாளர் ஆஜர்ப்பட்டியல் எங்கே ?''

''ஆஜர்ப்பட்டியல் போடலீங்க....''

''போடணும்..... கோழிகளுக்கு டோக்கன் நம்பர் கொடுக்கணும்.....ஆஜர்ப்பட்டியல்லே அவைகளைக் கையெழுத்துப் போடச் சொல்லணும்!''

''அது எப்படிங்க, முடியும்?''

''ரொம்ப சுலபம்!... கோழி காலிலே இங்கைத் தடவி, ஆஜர்ப் பட்டியலிலே பதிய வைக்கணும்.... அவ்வளவுதான்!''

அடுத்த வாரம் கோழிகளுக்கான ஆஜர்ப் பட்டியலில் கோடுகள் போட்டுக் கொண்டு பிச்சைமுத்து உட்கார்ந்திருந்த போது இன்னோர் அதிகாரி வந்தார்.

''போன வருஷம் உம்ம தொழிலாளர்களுக்கு எத்தனை சதவிகிதம் போனஸ் கொடுத்தீர்கள்?''

'' கோழிகளுக்குப் போனஸ் வேறு கொடுக்க வேண்டுமா, என்ன?''

''பின்னே இல்லையா...? நீர் நடத்துவது தொழிற்சாலை..... பதினெட்டு ஊழியர்கள் வேலை பார்க்கிறார்கள்..... குறைந்தபட்ச போனஸாக 8.33 சதவிகிதமாவது கொடுக்க வேண்டாமா?....''

'' சரி, கொடுத்து விடுகிறேன்!''

ஒரு வாரம் கழித்து, அதிகாரிகளின் ஆணைப்படி தமது முட்டைத் தொழிற்சாலைக்கென வாங்கி வந்திருந்த சங்கைத் தொழிற்சாலைக் கட்டடத்தில் நிறுவிப் பரீட்சார்த்தமாக ஒரு முறை ஒலித்துப் பார்த்தார் பிச்சைமுத்து. சங்கின் ஓலத்தைக் கேட்டுப் பயந்து கொண்டு எல்லாத் தொழிலாளர்களும் — மன்னிக்க, கோழிகளும்— தெருவைப் பார்க்க ஓடின. துரதிர்ஷ்டவசமாக அப்போது தெருவில் டிராக்டர் ஒன்று வரவே, அதன் சக்கரத்தின் அடியில் சிக்கி மூன்று கோழிகள் ஸ்தலத்திலேயே மண்டையைப் போட்டன.

பிச்சைமுத்து இறந்த கோழிகளைப் புதைத்து விட்டு, ஆஜர்ப்பட்டியலிலிருந்து அவற்றை நீக்கம் செய்தார். மூன்று நாட்களுக்கெல்லாம் புதிதாக ஓர் அதிகாரி வந்து சேர்ந்தார்.

''உம்ம தொழிற்சாலைத் தொழிலாளர்கள் மூன்று பேர் விபத்தில் இறந்து போய்விட்டார்களாமே?'' என்று விசாரித்தார்.

''ஆமாம்'' என்றவர், விபத்து பற்றிச் சுருக்கமாகக் கூறினார்.

''கோழிகளின் குடும்பத்துக்கு உரிய நஷ்டஈட்டுத் தொகை கொடுத்தீரா இல்லையா?''

''என்ன ஸார் இது, பேத்தலாக இருக்கிறது.....! ஏதோ போனால் போகிறதென்று சர்க்கார் அதிகாரியாகிய உங்கள் கோமாளித்தனங்களுக்கெல்லாம் ஈடு கொடுத்து வந்தால் இப்படி அநியாயம் பண்ணுகிறீர்களே?....'' என்று சத்தம் போட்டார் பிச்சைமுத்து.

பிறகு இந்த ஆட்சியில் தமக்குத் தண்டனை கிடைத்தாலும் கிடைக்கக் கூடும் என்ற பயத்தினால், பிச்சைமுத்து அன்றிரவே தலைமறைவாகி விட்டார்.

இப்போது அஞ்ஞாதவாசத்திலே இருந்து கொண்டிருந்தாலும் பிச்சைமுத்து தினசரிப் பத்திரிகைகளைப் படிக்கத் தவறுவதில்லை. ஆனால் ஒரே ஒரு பகுதியைக் கண்டால் அவருக்குக் குலை நடுக்கமாக இருக்கிறதாம். அது தான் — 'ஆசிரியருக்குக் கடிதங்கள்'!



சிவகாமியின் சபதம்

ஐம்பத்தைந்தாம் அத்தியாயம்

கத்தி பாய்ந்தது!

மாமல்லர் முதலியோர் சென்ற பக்கத்தைச் சிவகாமி ஒருகணம் வெறித்து நோக்கினாள். மறு கணம் படீரென்று பூமியில் குப்புற விழுந்தாள்.

அவளுடைய தேகத்தை யாரோ கட்புலனாகாத ஒரு மாய அரக்கன் முறுக்கிப் பிழிவது போல் இருந்தது. உடம்பில் உள்ள எலும்புகள் எல்லாம் நறநற வென ஒடிவது போலத் தோன்றியது.

அவளுடைய நெஞ்சின் மேல் ஒரு பெரிய மலையை வைத்து அமுக்குவதுபோல் இருந்தது.

அவளுடைய குரல்வளையை ஒரு விஷ நாகம் சுற்றி இறுக்குவது போலத் தோன்றியது.

ஒரு கணம் சுற்றிலும் ஒரே இருள் மயமாக இருந்தது.

அமரர் கல்கி





மறுகணம் தலைக்குள்ளே ஆயிரமாயிரம் மின்னல்கள் பாய்ந்தன.

வீடும் விளக்கும் அவளைச் சுற்றிக் கரகரவென்று சுழன்றன.

கீழே கீழே கீழே இன்னும் கீழே அதல பாதாளத்தை நோக்கிச் சிவகாமி விழுந்துகொண்டிருந்தாள். ஆகா! இப்படி விழுவதற்கு முடிவே கிடையாதா? என்றென்றைக்கும் என்றென்றைக்கும் கீழே கீழே போய்க் கொண்டிருக்க வேண்டியதுதானா?

"சிவகாமி! சிவகாமி!" என்று எங்கேயோ யிருந்து யாரோ அழைத்தார்கள். அது மாமல்லரின் குரல் அல்ல; நிச்சயம்.

முகத்தின் அருகே நாகப் பாம்பு சீறுவது போல் சத்தம் கேட்டது; உஷ்ணமான மூச்சு முகத்தின் மீது விழுந்தது.

சிவகாமி கண்களைத் திறந்தாள். ஐயோ! படமெடுத்தாடும் சர்ப்பத்தின் முகம்! தீப்பிழம்பாக ஜொலித்த பாம்பின் கண்கள்!

இல்லை; இல்லை! நாகநந்தி பிக்ஷுவின் முகம். அவர் மூச்சுவிடும் விஷக் காற்றுத்தான் தன்னுடைய முகத்தின் மேல் படுகிறது.

சிவகாமி ஒரு பெரும் பிரயத்தனம் செய்து பளிச்சென்று எழுந்து உட்கார்ந்தாள். பிக்ஷுவை விட்டு விலகிச் சற்றுத் தூரத்துக்கு நகர்ந்து சென்றாள். அவள் தேகமெல்லாம் படபடத்து நடுங்கியது.

நாகநந்தி அவளைக் கருணையுடன் பார்த்து, ''பெண்ணே! உனக்கு என்ன ஆபத்து விளைந்தது? ஏன் அவ்வாறு தரையில் உணர்வற்றுக் கிடந்தாய்? பாவம்! தன்னந்தனியாக இந்தப் பெரிய வீட்டில் வசிப்பது சிரமமான காரியம்தான். உன்னுடைய தாதிப் பெண்ணைக் கூடக் காணோமே? எங்கே போய் விட்டாள்?'' என்று கேட்டவண்ணம் சுற்று முற்றும் பார்த்தார்.

அப்போது அவர் பார்த்த திக்கில் மாமல்லர் போகும் அவசரத்திலே விட்டு விட்டுப் போன தலைப்பாகையும் அங்கவஸ்திரமும் கிடப்பதைச் சிவகாமி பார்த்துப் பெருந் திகிலடைந்தாள். நாகநந்தி அவற்றைக் கவனியாமல் திரும்பிச் சிவகாமியின் அருகில் வந்து, ''பெண்ணே! நான் சொல்வதைக் கேள் உன்னுடைய நன்மைக்காகவே சொல்கிறேன்!'' என்று சொல்லியவண்ணம் சிவகாமியின் ஒரு கரத்தைத் தம் இரும்பையொத்த கரத்தினால் பற்றினார்.

அப்போது சிவகாமியின் உடம்பு மறுபடியும் நடுங்கிற்று. கொடிய கண்களையுடைய நாக சர்ப்பம் படமெடுத்துத் தன்னைக் கடிக்க வருவது போன்ற பிரமை ஒரு கணம்



ஏற்பட்டது. சட்டென்று சமாளித்துக் கையை வெடுக்கென்று எடுத்துக் கொண்டாள்.

"ஆ! சிவகாமி! ஏன் இப்படி என்னைக் கண்டு நடுங்குகிறாய்? உனக்கு நான் என்ன தீங்கு செய்தேன்? உன்னிடம் உண்மையான அபிமானம் கொண்டதல்லாமல் உனக்கு நான் ஒரு தீங்கும் செய்யவில்லையே! உன் தந்தையின் உயிரைக் காப்பாற்றியதன்றி வேறோர் அபசாரமும் உனக்குச் செய்யவில்லையே? ஏன் என்னை வெறுக்கிறாய்?" என்று பிக்ஷு கனிவு ததும்பும் குரலில் கேட்டார்.

"சுவாமி! தங்களைக் கண்டு நான் பயப்படவும் இல்லை. தங்களிடம் எனக்கு வெறுப்பும் இல்லை. தாங்கள் எனக்கு என்ன தீங்கு செய்தீர்கள், தங்களை நான் வெறுப்பதற்கு? எவ்வளவோ நன்மைதான் செய்திருக்கிறீர்கள்!" என்றாள் சிவகாமி.

"சந்தோஷம், சிவகாமி! இந்தமட்டும் நீ சொன்னதே போதும். உன்



தேகம் அடிக்கடி நடுங்குகிறதே, அது ஏன்? உடம்பு ஏதேனும் அசௌக்கியமா?" என்று வினவினார்.

"ஆம், அடிகளே! உடம்பு சுகமில்லை!" என்றாள் சிவகாமி.

"அடடா! அப்படியா? நாளைக் காலையில் நல்ல வைத்தியனை அனுப்புகிறேன். ஆனால், இப்படி உடம்பு அசௌக்கியமாயிருக்கும்போது உன்னை விட்டு விட்டு உன் தாதிப் பெண் எங்கே போனாள்? எங்கேயாவது மூலையில் படுத்துத் தூங்குகிறாளா, என்ன?" என்று அங்குமிங்கும் சுற்றிப் பார்த்தார் பிக்ஷு.

சற்றுத் தூரத்தில் தூணுக்குப் பின்னால் கிடந்த தலைப்பாகையும் அங்கவஸ்திரமும் இப்போது அவருடைய கண்களைக் கவர்ந்தன.

"ஆ! இது என்ன? இங்கே யாரோ வந்திருக்கிறார்கள் போல் இருக்கிறதே?" என்று அருகில் சென்று உற்றுப் பார்த்தார்.

திரும்பிச் சிவகாமியை நோக்கி, "சபாஷ்! சிவகாமி! அதற்குள்ளே இங்கே உனக்குக் காதலர்கள் ஏற்பட்டுவிட்டார்களா? உள்ளூர் மனிதர்கள் தானா? அல்லது வெளியூர்க்காரர்களா?" என்று பரிகாசச் சிரிப்புடன் கேட்டார். சிவகாமி மௌனமாய் நின்றதைப் பார்த்துவிட்டு, "நல்லது; நீ மறுமொழி சொல்ல மாட்டாய். நானே போய்க் கண்டு பிடிக்கிறேன்!" என்று கூறி வாசலை நோக்கிச் சென்றார்.

அப்போது சிவகாமிக்கு, "இவன் புத்த பிக்ஷுவிடம் நம்மைக் காட்டிக் கொடுக்கப் பார்க்கிறான்!" என்று மாமல்லர் சொன்னது நினைவுக்கு வந்தது. பளிச்சென்று பிக்ஷு அவர்களைக் கண்டுபிடிப்பதால் நடக்கக் கூடிய விபரீதங்கள் எல்லாம் நினைவுக்கு வந்தன.

சிவகாமி துடிதுடித்து அங்குமிங்கும் பார்த்தாள். இளவரசரின் அங்கவஸ்திரத்துக்கு அடியில் ஏதோ பளபளவென்ற ஒரு பொருள் தெரிந்தது.

சிவகாமியின் கண்களில் விசித்திரமான ஒளி தோன்றியது.

பாய்ந்து சென்று அந்தப் பொருளை எடுத்தாள். அவள் எதிர்பார்த்தது போல் அது ஒரு கத்திதான்.

சிவகாமி அடுத்த கணம் அந்தக் கத்தியைப் புத்த பிக்ஷுவின் முதுகை நோக்கி எறிந்தாள்.

பிக்ஷு 'வீல்' என்று சத்தமிட்டுக் கொண்டு விழுந்தார்.

முதுகில் கத்தி பாய்ந்த இடத்திலிருந்து இரத்தம் கசிந்தது.

சிவகாமியைப் பிக்ஷு திரும்பிப் பார்த்து, இரக்கம் ததும்பிய குரலில், "பெண்ணே! என்ன காரியம் செய்தாய்? உன்னை உன் காதலன் மாமல்லனிடம் சேர்ப்பித்து விடலாம் என்று எண்ணியல்லவா அவசரமாகக் கிளம்பினேன்?" என்றார்.

ஐம்பத்தாறும் அத்தியாயம்

மகேந்திரர் கோரிக்கை

மாமல்லர் பரஞ்சோதி முதலியவர்கள் காஞ்சிக்குத் திரும்பிவந்தபோது மகேந்திர பல்லவரின் தேகநிலை முன்னைவிடக் கேவலமாகி யிருந்தது. அவர்கள் சிவகாமியை அழைத்து வரவில்லை என்று தெரிந்த பிற்பாடு அவருடைய உடம்பு மேலும் நலிவடைந்தது.

இந்தக் கோடையில் வேர்க்குரு எங்கு தாக்கும்?



வேர்க்குரு எங்கு தாக்கினாலும், அதை முறியடிக்க உபயோகியுங்கள் ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர். ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடரில் மட்டுமே நிருபணம் பெற்ற மருந்துக் கலவை அடங்கியுள்ளது. அது மூன்று வழிகளில் செயலாற்றுகிறது.

- வியர்வை உறிஞ்சுகிறது; சருமத் துவாரங்கள் அடைபடுவதைத் தடுக்கிறது.
- பாக்டீரியா கிருமிகளை பெருகுவதைத் தடுக்கிறது.
- சுகமும் குளுமையும் தந்து, உடனடி நிவாரணம் அளிக்கிறது.

ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடரைக் குளித்தவுடனும், படுக்கும் முன்பும் உடம்பின்மீது தாராளமாகத் தூவுங்கள். உடனடியாக வேர்க்குருவைத் தடுக்கும் மருந்து கலந்த வேர்க்குரு பவுடர் இது ஒன்றுதான்!



சந்தன மணத்திலும் கிடைக்கிறது.

ஜான்ஸன்ஸ்* ப்ரிக்லி ஹீட் பவுடர் மட்டுமே உடல் எரிச்சலை நிறுத்துகிறது; அரிப்பிலிருந்து நிவாரணமளிக்கிறது உடனடியாக.

Johnson & Johnson*

OBM-4317 TM

படுக்கை வேளையில் பல் துலக்க நீங்கள்
மறந்திடும் ஒவ்வொரு நேரமும்...



உலகமெல்லாம் பரவிப் பெருகியுள்ள நோயால் பீடிக்கப்படும் அபாயத்துக்கு உள்ளாகிறீர்கள்!

படுக்கை வேளையில் நீங்கள் பல் துலக்கத் தவறும்போது, பற்களைச் சிதைக்கும் கிருமிகள், இரவு நேரத்தில் உங்கள் வாயில் தங்கும் உணவுத் துகள்கள் மூலம் வளர்ச்சி அடைகின்றன. இதனால் நூற்றுக்கு 95 பேரைப் பாதித்து, வலிதரும் சொத்தையாக மாறி, அவதி தரும் பற்சிதைவு நோய் பீடிக்கிறது.

பினாகா ஃப்ளோரைட் பற்சிதைவுக்கு எதிராக நீடித்த பாதுகாப்பளிக்கிறது

பற்சிதைவை 50 சதவிகிதம் வரை ஃப்ளோரைட் குறைக்கிறது என விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன. ஆகவே தவறாமல் பினாகா ஃப்ளோரைடினால், நாள்தோறும் காலையிலும், மீண்டும் படுக்கை வேளையிலும் பல் துலக்குங்கள். இதன் தனிப்பட்ட, நீடித்து நிற்கும் ஆற்றல், இரவு பூராவும் உங்கள் வாயைச் சுத்தமாக வைத்திருக்கிறது. பற்களைச் சிதைக்கும் கிருமிகளின் வளர்ச்சியையும் வலிதரும் சொத்தையையும் தடுக்கிறது.



**பல்லுக்கு உறுதி,
பற்சிதைவுக்கு எதிரி—**

பினாகா ஃப்ளோரைட்

U–BF/28/75 Tam

திருவெண்காட்டு நமசிவாய வைத்தியர் எவ்வளவோ திறமையாக வைத்தியம் செய்தும், தேகநிலைமையில் அபிவிருத்தி ஏற்படவில்லை.

மகேந்திர பல்லவர் ஒருநாள் தம் புதல்வர் மாமல்லரையும் மந்திரி மண்டலத்தாரையும், படைத் தலைவர்களையும், கோட்டத் தலைவர்களையும் அழைத்து வரச் செய்தார்.

படுக்கையில் படுத்தபடியே சுற்றிலும் சூழ்ந்து நின்றவர்களைச் சக்கரவர்த்தி பார்த்தார். எல்லோருடைய கண்களிலும் கண்ணீர் கசிந்திருப்பதையும், எல்லோருடைய முகத்திலும் பக்தி விசுவாசம் ததும்பிக் கொண்டிருப்பதையும் கவனித்தார்.

மகேந்திர பல்லவரின் பழைய சிம்ம கர்ஜனைக் குரலைக் கேட்டிருந்தவர்கள், இப்போது அவருடைய மெலிந்த ஈனஸ்வரமான குரலைக் கேட்டுத் திடுக்கிட்டார்கள். தங்களுடைய உணர்ச்சியை வெளிக் காட்டாமல் தடுத்துக்கொள்ள முயன்றார்கள்.

மகேந்திர பல்லவர் சொன்னார்: ''நான் இந்தப் புகழ் பெற்ற பல்லவ சிம்மாசனத்தில் ஏறி இன்றைக்கு இருபத்தைந்து வருஷம் ஆகிறது. இவ்வளவு காலமும் நீங்கள் காட்டிய பக்தியும் விசுவாசமும் இணையற்றவை. காஞ்சியின் புகழ் பாரத நாடெங்கும் ஓங்கி நின்ற காலத்தில் நீங்கள் என்னிடம் பக்தி விசுவாசத்துடன் நடந்துகொண்டீர்கள். என்னுடைய விருப்பமே கட்டளையாகவும், என்னுடைய வார்த்தையே சட்டமாகவும் பார்த்து வந்தீர்கள். அது பெரிய காரியமல்ல. நான் தவறுக்கு மேல் தவறாகச் செய்து வந்த காலத்திலும் காஞ்சியின் புகழ் மங்கி வந்த நாளிலும் படையெடுத்து வந்த பகைவர்களை முன்னேறவிட்டுப் பின்வாங்கி வந்த காலத்திலும், காஞ்சிக் கோட்டைக்குள் நாம் மறைந்திருக்க வேண்டி வந்த காலத்திலும் என்னிடம் இடைவிடாத விசுவாசம் காட்டி வந்தீர்கள். சளுக்க மன்னன் புலிகேசியை உங்களுடைய விருப்பத்துக்கு மாறாக நான் விருந்துக்கு அழைத்ததையும் அதனால் விளைந்த விபரீதங்களையும் நீங்கள் பொறுத்துக்கொண்டிருந்தீர்கள். எனக்கு அந்திய காலம் நெருங்கியிருக்கும் இந்தச் சமயத்தில் உங்களுக்கெல்லாம் என் மனத்தில் பொங்கிக் கொண்டிருக்கும் எல்லையற்ற நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் செய்த தவறுகளுக்காகவும் என்னால் உங்களுக்கெல்லாம் நேர்ந்த கஷ்டங்களுக்காகவும் என்னை மன்னிக்கும்படியாக ரொம்பவும் கேட்டுக் கொள்ளுகிறேன்.''

இவ்விதம் மகேந்திர பல்லவர் பேசிய போது சபையிலே சிலர் விம்மி அழுதார்கள்.

முதன் மந்திரி ஓர் அடி முன்னால் வந்து, ''பிரபு! இப்படியெல்லாம் பேசக் கூடாது என்று பிரார்த்திக்கிறேன். எங்களிடம் தாங்கள் மன்னிப்புக் கேட்பது எங்களைத் தண்டிப்பதேயாகும். தங்கள் மேல் இல்லாத குற்றங்களையெல்லாம் சுமத்திக் கொண்டு எங்களை வேதனைக்கு ஆளாக்குகிறீர்கள். நடந்ததெல்லாம் விதிவசத்தினால் நடந்தது. சென்று போன காரியங்களைப் பற்றிச் சிந்திப்பதில் பயனில்லை!'' என்றார்.



மகேந்திர சக்கரவர்த்தி மேலும் கூறினார்:

''சாரங்க தேவபட்டரின் மொழிகள் என்னை மேலும் உங்களிடம் நன்றிக் கடன் பட்டவனாகச் செய்கிறது. இன்று உங்களையெல்லாம் நான் அழைத்ததன் காரணத்தைச் சொல்கிறேன். என் வாழ்நாளின் இறுதி நெருங்கி விட்டது. இன்னும் சில நாளைக்கெல்லாம் இந்த மெலிந்து நைந்த தேகத்திலிருந்து என் ஆவி பிரிந்து போய்விடும். என் அருமைக் குமாரன் நரசிம்மன் வேத விதிப்படி இறந்துபோன தந்தைக்குச் செய்ய வேண்டிய உத்தரக் கிரியைகளைச் செய்வான்'' என்று சக்கரவர்த்தி சொன்ன போது மாமல்லர் தாங்க முடியாத துக்கமும் ஆத்திரமும் பொங்க, ''அப்பா! அப்பா!'' என்று அலறினார்.

மகேந்திர பல்லவர் அருகில் நின்ற மகனை அன்புடன் தழுவிக்கொண்டு உச்சி மோந்து, ''குழந்தாய்! நான் சொல்ல வேண்டியதைச் சொல்லித்தான் ஆகவேண்டும். உனக்குக் கேட்பதற்குக் கஷ்டமாக இருந்தால் சற்று

வெளியே போய் இருந்து விட்டு அப்புறம் வா!'' என்றார். ஆனால், அவ்விதம் மாமல்லர் வெளியேறவில்லை. மறுபடியும் மந்திரி பிரதானிகளைப் பார்த்துச் சக்கரவர்த்தி கூறினார்:

''என் அருமை மகன் எனக்கு உத்தரக் கிரியைகளைச் செய்வான். நீங்களும் காலஞ்சென்ற சக்கரவர்த்திக்குரிய மரியாதைகளைச் செய்வீர்கள். ஆனால், இதனாலெல்லாம் என் ஆன்மா சாந்தி அடையவே அடையாது. இப்போது நான் உங்களிடம் கேட்டுக் கொள்ளப் போகும் கோரிக்கையை நிறைவேற்றி வைத்தால் என் ஆத்மா சாந்தி அடையும். இல்லாவிட்டால் சொர்க்கத்திலே இருந்தாலும் என் ஆவி நிம்மதி அடையாது.''

''பிரபு! சொல்லுங்கள். தங்களுடைய ஆக்ஞை எதுவானாலும் அதை



நிறைவேற்றி வைப்பதாக இங்குள்ளவர் அனைவரும் சபதம் செய்ய ஆயத்தமாயிருக்கிறோம்!'' என்று முதல் அமைச்சர் கூறினார்.

''என்னுடைய அஜாக்கிரதையினாலும், சளுக்க மன்னனின் வஞ்சகத்தினாலும் பல்லவ வம்சத்துக்குப் பெரிய அவமானம் நேர்ந்து விட்டதை நீங்கள் அறிவீர்கள். அறுநூறு வருஷத்து வீரப் புகழுக்கு என் காலத்தில் பங்கம் நேர்ந்து விட்டது. அந்த அவமானத்தை என்னாலே துடைக்க முடியவில்லை. இழந்து விட்ட பல்லவ வம்சத்துப் புகழை நிலைநாட்டாமலே நான் உங்களிடம் விடைபெற்றுக் கொள்ளுகிறேன். நான் செய்ய முடியாமற்போன காரியத்தை நீங்கள் நிறைவேற்றி வைக்க வேண்டும். பல்லவ சைனியம் படையெடுத்துச் சென்று சளுக்கரை வென்று புலிகேசியைக் கொன்று வாதாபி நகரை அழித்துத் தீ வைத்து எரிக்க வேண்டும். வாதாபி நகரம் இருந்த இடத்தில்

நடு செண்டர்!

விவித பாரதி வர்த்தக ஒலிபரப்பில் இப்படி ஒரு வேண்டுகோள் விடுக்கிறார்கள்: ''விவித பாரதி வர்த்தக ஒலிபரப்பில் அறிவிக்கப்படும் விளம்பரங்களில் பொய்யான அல்லது மிகைப்படுத்தப்பட்ட விளம்பரங்கள் இருப்பதாக நேயர்கள் உணர்ந்தால் பின்வரும் முகவரிக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்'' என்று கூறியபிறகு முகவரிக்கு அடுத்து PIN கோடு என் என்று சொல்கிறார்கள். ''பின்'' என்று சொன்னால் ''என்'' என்று சொல்லத் தேவையில்லை. Postal Index Number என்பதுதான் சுருக்கமாக பின் என்று கூறப்படுகிறது.

-அ. பிச்சை

பல்லவ ஜயஸ்தம்பம் கம்பீரமாக வானளாவி நிற்க வேண்டும். அப்போதுதான் பல்லவ வம்சத்துக்கும் தமிழகத்தின் வீரத்துக்கும் நேர்ந்துள்ள களங்கம் நிவர்த்தி யாகும். இதுவே என் கோரிக்கை. என்ன சொல்கிறீர்கள்? நிறைவேற்றுவீர்களா?''


''நிறைவேற்றுகிறோம்'', ''நிறைவேற்றுகிறோம்'' என்று ஏக காலத்தில் பல குரல்கள் ஒலித்தன.


''மகேந்திர பல்லவேந்திரர் வாழ்க! வீர மாமல்லர் வாழ்க!'' என்ற ஜய கோஷங்களும் முழங்கின.

மகேந்திர பல்லவர் இன்னொரு தடவை எல்லோரையும் பார்த்து, ''மறுமுறையும் உங்களுக்கு என் இருதயத்தில் பொங்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார்.

அப்போது, முதல் அமைச்சர், ''பிரபு! ஒரு விஷயம். தங்கள் கோரிக்கையை வெளியிட்டபோது, இங்குள்ள நாங்கள் அனைவரும் அதை நிறைவேற்றி வைப்பதாக ஒப்புக் கொண்டு கோஷித்தோம். ஆனால் முக்கியமாகத் தங்கள் கோரிக்கையை நிறைவேற்றி வைக்க வேண்டிய இருவரும் சும்மா இருந்தார்கள். குமார சக்கரவர்த்தியையும் சேனாபதி பரஞ்சோதியையுந்தான் சொல்கிறேன். அவர்கள் மௌனமாக இருந்தது எங்களுக்கு அர்த்தமாகவில்லை'' என்றார்.

''மாமல்லனும் பரஞ்சோதியும் ஏற்கெனவே எனக்கு அவ்வாறு வாக்களித்துச் சபதம் கூறியிருக்கிறார்கள். அதனாலேதான் இப்போது சும்மா இருந்தார்கள். அவர்கள் செய்த சபதத்தை நிறைவேற்றி வைக்க நீங்கள் அவர்களுக்கு ஒத்தாசை செய்ய வேண்டும். சபையோர்களே! நான் மாமல்லனோடு ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டியதிருக்கிறது. அதனுடைய முடிவை உங்களுக்கும் நான் தெரிவித்தாக வேண்டும். சற்று நேரம் எங்களுக்கு அவகாசம் கொடுப்பீர்களா?'' என்று கேட்டார் மன்னர். (தொடரும்)


படிப்படியாக உயர்ந்து
முன்னேற்றமடைந்த அவருக்குத் தெரியும்...
...அழகான ஆடைகளும் அதற்கு உதவின என்று !
MAFATLAL GROUP
AIYARS-M. 458 TM




''மதன் மஹல்''

நகர்வலம்



சலவைக்கல் வலம்புரி விநாயகர்



புனகப்பிரவாகம்

காளிதாசனுக்கு 'மேக விடு தூது' இயற்றத் தூண்டுதலாயிருந்த ராமகிரி நாகபுரியிலிருந்து ஜபல்பூர் போகும் வழியில்தான் இருக்கிறது என்னும் விவரம் தெரிய வரவே, அங்கே போய்விட்டுப் பிறகு ஜபல்பூர் செல்வது என்று திட்டமிட்டேன். ராம்டேக் என்னும் பெயரில் வழங்கும் ராமகிரிக்கு மன்ஸார் என்னும் இடத்தில் பாதை பிரிகிறது.

மலையேறி அண்மையில் ஏற்படுத்தப்பட்ட காளிதாசனது நினைவுச்சின்னத்தை அடைந்த பொழுது வெய்யில் எரித்துக் கொண்டிருந்த வானத்திலிருந்து இரண்டொரு தூற்றல்கள் விழுந்தன. அண்ணாந்து பார்த்தேன். திட்டுத் திட்டான மேகங்கள்!

சாபம் காரணமாக அன்பு மனைவியைப் பிரிந்து வாழ்ந்த காளிதாசனது யக்ஷன், பிரிவுத் துயரில் வாடினாலும் நாட்டின் பூகோளத்தையும், பருவ நிலைகளையும் நன்றாக அறிந்து வைத்திருந்து எப்படிப் போகவேண்டும் என்று வழியும் சொல்லி அனுப்பினான் மேகங்களுக்கு. நானும் என்னைக் காளிதாசனாக நினைத்துக் கொண்டு அவற்றுக்குச் சென்னைப் பக்கம் போகுமாறு வழி சொல்லி அனுப்பினேன். இன்றுவரை வராததால் அத்தனை அழகாக நான் வழி சொல்லி அனுப்பியதாகக் கொள்ளலாம்!

சல சலக்கும் நதியும்

காளிதாசனது நினைவுச் சின்னம் அவனுடைய மூன்று காவியங்களையும் மூன்று நாடகங்களையும் பிரதிபலிப்பதாக ஆறு பட்டை வடிவமாக அமைந்துள்ளது. இன்னொரு புறம் மலையுச்சியில் அமைந்துள்ள ராமலக்ஷ்மணர்களது கோயில், லவ — குசர்களுக்கும் சந்நிதி கொண்டதாக விளங்குகிறது.

இங்கு ஒரு பெரிய வராகம் கல்லில் செதுக்கப்பட்டு நிற்கிறது. பாவமே செய்யாதபுண்ணியசாலிகள் தான் இதன் வயிற்றுத் துவாரம் அடி வழியாகப் புகுந்து புறப்படலாமாம். சிறிது தீய நோக்கம் கொண்டவர்களாயிருந்தாலும், இதன் வயிற்றுப் பக்கம் அழுத்தி ஆளைப் பதம் பார்த்து விடுமாம். இப்படி ஓர் ஐதிகம் நிலவுகிறது. இதற்குள் இதுவரை யாருமே புகுந்து புறப்பட்டதாக வரலாறு இல்லை. யாருக்குத் தைரியம் வரும்?

ராம்டேக்கிலிருந்து ஆறு மைல் தொலைவில் கின்லே என்று ஓர் ஏரி பசுமை மூடி போர்த்திருக்கும் மலைகளுக்கிடையே எழிற் சின்னமாகக் காட்சி தருகிறது.

ஜபல்பூர் எல்லையை அடைந்து பஸ் நின்ற போது, ஓரிடத்தில் ஜே, ஜே என்று கூட்டம். ஒருபுறம் காந்திஜியின் நினைவுச் சின்னம்; மறுபுறம் 'பிஸினஹாரி மந்திர்' என்று ஒரு கோயில். மா அரைத்து அதில் வந்த கூலியைக் கொண்டு ஒரு கிழவி கோயில் கட்டினளாம். 'இத்தனை பெரிய கோயிலா? அப்படியானால் எவ்வளவு மா அரைத்திருக்க வேண்டும்' என்று கணக்குப் போடத் தொடங்கி விடுவோம். புதுப்பிக்கப் பெற்ற இந்த ஜைனர் கோயிலில், இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களின் சிலைகளும் இருக்கின்றன.

ஊர் நெருங்க நெருங்க எங்கே தங்குவது என்ற பிரச்னை என்னை ஆட்கொண்டது. சக பிரயாணிகளை விசாரித்ததில் சரியான பதில் ஏதும் கிடைக்கவில்லை.


நான் பஸ்ஸிலிருந்து கீழே இறங்கக் கூட இல்லை. படியில் பாதிக் காலும் பூமியில் பாதிக் காலுமாக இருந்த பொழுது, ஒருவர் என்னை நெருங்கி வந்து, "தங்களுக்காக ஜீப் கொண்டு வந்திருக்கிறேன், வாருங்கள்!" என்றார். பக்கத்தில் நின்ற பையன் என் பெட்டி—படுக்கைகளை வாங்கிக் கொண்டான். ஏதோ ஆள் மாராட்டம் என்று என் மனம் சொன்னாலும், இந்த இருட்டு வேளையில் வலிய வந்த வசதியைச் சும்மாவிட்டு விடக் கூடாது என்று துணிந்து ஜீப்பில் ஏறி விட்டேன்.

என்னை இறக்கி விட்ட வீட்டில் ஸ்ரீசேது ரத்தினம் என்னை வரவேற்று ஆசார உபசாரம் செய்தார். சென்னையை விட்டு நான் நாகபுரிக்குப் பயணப்பட்ட போது ரயிலில் அறிமுகமானவர் அவர். "ஜபல்புரில் சந்திக்கலாம்" என்று சொல்லியிருந்தார். ஏதோ உபசார வார்த்தை என்று அதைக் கருதியிருந்த எனக்கு இப்போது வியப்பான வியப்பு; மகிழ்ச்சியிலும் மகிழ்ச்சி!

"நீங்கள் உளவுத்துறை அதிகாரியா, என்ன? உங்கள் ஆசாமிகள் என்னை எப்படிக்



காக்கை உட்கார்ந்தாலும் அசைந்த பாறை



ஸ்ரீ சேது ரத்தினம்

சலவைக்கல் மலையும்

கண்டு பிடித்தார்கள்?" என்று கேட்டேன்.

"அது என்ன பிரமாதம்? உங்களை ரயிலில் சந்தித்த பொழுதே எடை போட்டு விட்டேன், சென்னைத் 'தட்டுச் சுற்று' உடையை விட மாட்டீர்கள் என்று! வருகிற தேதி தெரியும். ஆகவே அடையாளம் சொல்லி அனுப்புவது எனக்குச் சிரமமாக இல்லை!" என்றார்.

நண்பர் ஸ்ரீ சேது ரத்தினம் அவர்கள் ஊருக்கெல்லாம் ஒளி தரும் மின்வாரியத்தில் துணைச் செயலாளராகப் பணியாற்றுகிறவர். தமிழ்நாட்டின் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர். ஜபல்புரை இண்டு — இடுக்கு விடாமல் எனக்குச் சுற்றிக் காட்டும் பொறுப்பை அவர் ஸ்ரீராம் கோபால் குப்தா அவர்களிடம் ஒப்படைத்தார். இவர் மின் வாரியத்தின் மக்கள் தொடர்புத் துறையில் அங்கம் வகிப்பவர்.

தசரத மன்னனுக்கு, குரு ஸ்தானத்தில் இருந்த ஜாபாலி மகரிஷி இப் பகுதியில் ஆசிரமம் அமைத்து வாழ்ந்ததன் பயனாக, இந்த நகரத்துக்கு ஜபல்புர் என்று பெயர் வந்ததாகச் சிலர் கூறுகிறார்கள். நாத்திகம் பேசி ஆத்திகம் வளர்த்த மகரிஷி இவர்!

ஆனால் இங்கு பாறைகள் அடுக்கடுக்காக மலை போலக் குவிந்திருப்பதைக்கண்டு 'பாறை யூர்' என்று பெயர் வந்ததாகக் கூறுவோர் பலர். 'ஜபல்' என்னும் அரபிச் சொல்லுக்குப் பொருள் பாறை.

இந்த நகரத்தை நர்மதை நதி புனிதமாக்குகிறது. க்வாரி காட், தில்வாரா காட், லமேதா காட், பேடா காட் ஆகியவை இதன் படித் துறைகள்.

ஜபல்புர் சமீப காலத்தில் வளர்ந்த நகரமாகத் தோன்றினாலும் பண்டைய வரலாற்றுச் சிறப்புகளும் பல உடையது. இதிகாசங்களும் புராணங்களும் இத்துடன் தொடர்பு கொண்டிருக்கின்றன.

சரித்திரம் சமைத்த திரிபுரா காங்கிரஸ் நடந்ததே, அது, ஜபல்புரை ஒட்டிய 'தேவர்' என்னும் கிராமத்துக்கு அருகில்தான்.

ரா. வீழிநாதன்

ஜல சக்கரும் நதியும் சலவைக் கல் மலையும்



திரிபுராகரனின் தலைநகரமாக விளங்கிய இந்தப் பகுதியை மௌரியர்களும், சாதவாகனர்களும், பின்னர் குப்த அரசர்களும் ஆண்டிருக்கிறார்கள். சான்றாக இங்கு மௌரியர் காலத்துச்செங்கற்களே கிடைத்திருக்கின்றன.

வேறு சில அரச பரம்பரையினர் பற்றியும் சரித்திரம் பேசுகிறது. கோண்ட் வம்சத்தைச் சேர்ந்த தல்பத் ஷா, மனைவி துர்க்காவதிக்காக கட்டிய அரண்மனை 'மதன் மஹால்' என்ற பெயரோடு மலையுச்சியில் நிற்கிறது. இரண்டு பாறைகளின் மீது நிற்கும் இந்த அரண்மனையில் ஏறி நின்றால் ஜபல்பூர் நகர் முழுவதையும் ஒரு கண்ணோட்டத்தில் காணலாம்; நர்மதை நதியையும் கண்டு மகிழலாம். அருகிலேயே துலாப் பாறை ஒன்று இருக்கிறது. இது காக்கை உட்கார்ந்தாலும் அசைந்த காலம் உண்டு. இப்பொழுது இது அசையாப் பாறை.

தல்பத் ஷாவின் மரணத்துக்குப் பின் முகலாய சக்கரவர்த்தி அக்பர், துர்க்காவதியை அடி பணிய வைக்க ஆஸஃப் கான் என்ற படைத் தலைவனை இரு முறை ஏவி விட்டிருக்கிறான். வீரப் போர் புரிந்து ஆஸஃப் கானை அலறி அழ வைத்த துர்க்காவதி கண்ணில் அம்பு குத்தி விடவே, எதிரியின் கைகளில் சிக்காமல் இருக்க வேண்டுமே என்பதற்காகத் தன் யானைப் பாகனின்வாளைப் பிடுங்கித் தன் வயிற்றில் பாய்ச்சிக் கொண்டு வீர மரணம் அடைந்திருக்கிறாள். அவள் நினைவுக்கு இவ்வூரில் ஒரு சின்னம் இருக்கிறது.

தேவர் என்று மருவியிருக்கும் திரிபுரா இன்று படு குக்கிராமமாகக் காட்சி தருகிறது. ஆயினும் கலைச் செல்வங்கள் தெருவுக்குத் தெரு சிதறிக் கிடக்கின்றன. இங்கு வாழும் மக்களைக் காட்டிலும் சிற்பச் சிறப்புக்களின் எண்ணிக்கையே அதிகம் என்று கூறினால் மிகையாகாது. அத்தனையும் எத்தனை போர்களுக்கு இலக்காகிக் கையும் காலும் போய்க் கிடக்கின்றன என்பதைக் காணும் போது கண்களில் நீர் சுரக்கிறது.

ஜபல்பூரிலிருந்து இருபது கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் பேடா காட் பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத இடம். நர்மதை இருபுறமும் சலவைக்கல் மலைகள் அழகு செய்ய ஒய்யாரமாகக் காட்சி தருகிறாள். படகிலே முகப்பு வரைக்கும் போய் வரலாம். தண்ணிலவு பொழியும் முழு நிலவிலே சலவைக் கற்கள் புரியும் வண்ண ஜால வித்தைகளுக்கு ஈடு இணை கூற இயலாது. ஓர் இடத்தில் மலைகள் நீண்டு குறுகி வளர்ந்து வளைந்து பல நீர்ப் பிரிவுகளை உண்டாக்கியிருக்கின்றன. எங்கே போக வேண்டும் என்று திசை தெரியாமல் தப்பி விடுவதும் உண்டாம். அதனால் இந்த இடத்துக்கு 'பூல் புலையான்' (திசை மயக்கம்) என்று பெயர் வைத்திருக்கிறார்கள்!

இரு மலைகளும் நெருங்கிக் காட்சி தரும் ஓர் இடத்தைக் 'குரங்குத் தாவு' என்று கூறி மகிழ்கின்றனர். நர்மதையிலே முதலைகளும் காணப்படுவதுண்டு என்று படகோட்டி கூறியதும் பின்னோடு வந்த ஸ்ரீ குப்தா அவர்கள், ''உன் மர முதலையை எங்கேய்யா விட்டு வைத்திருக்கிறாய்?'' என்று கேட்டுக் குட்டை உடைத்தார்.

பேடா காட்டில் சிறிது முன்னேறிச் சென்றால், ஓரிடத்தில் நர்மதை, மலையிலிருந்து பள்ளத்தில் விழும் காட்சியைக் காணலாம். நீர் விழும் பாங்கு ஒரு புகை மண்டலத்தை எழுப்பினாற் போலத் தோன்றுகிறது. அதற்கு 'துவான் தார்'—'புகைப் பிரவாகம்' என்று பெயரிட்டு அழைக்கின்றனர்.

ஜபல்பூரில் பழம் பெருமை படைத்த கோயில்கள் பல உள்ளன. அவற்றில் குப்தேசுவரர் கோயில் குறிப்பிடத் தக்கது. இயல்பாக உருவாகியிருக்கும் மலைக் குகையில் குடி கொண்டிருக்கும் குப்தேசுவரரைக் காணக் குனிந்து வளைந்து செல்ல வேண்டும். ஆம், வணங்கும் முறையை ஆண்டவனே சொல்லித் தருகிறாற் போல் அமைந்திருக்கிறது கோயில் அமைப்பு.

நர்மதை நதி நீரைப் பயன்படுத்தி மத்தியப் பிரதேசம் மின்சார விநியோகத்தில் தன் நிறைவு பெற்றிருக்கிறது. அண்டை மாநிலங்களுக்கும் மின்சக்தி அளித்து உதவுகிறது.

மின்துறை வாரியம் 'வித்யுத்நகர்' என்ற பெயரில் தன் ஊழியர்களுக்குக் குடியிருப்பு மட்டும் கட்டிக் கொடுக்கவில்லை; கும்பிடக் கோயிலையும் கட்டித் தந்திருக்கிறது. திருச்சிராப்பள்ளி உச்சிப் பிள்ளையார் கோயிலின் சிற்றுருவமாகக் காட்சி தரும் இக் கோயிலில் வீற்றிருக்கும் ஆனைமுகத்தான் வலம்புரி விநாயகர்; சலவைக் கல்லால் ஆனவர். இவர் வழிபாட்டுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் அர்ச்சகருக்கு வீடு வாசல், ஊதியம் ஆகியவற்றையும் மின்வாரியமே கவனித்துக் கொள்கிறது.

ராணுவத் தளவாடங்களின் மத்திய கேந்திரமாக விளங்கும் ஜபல்பூரில் பல மாநில மக்களும் பணிபுரிவதனால், அவர்கள் தனித்த பண்பாட்டைக் காக்கவும், பாரதத்தின் பண்பாட்டைப் போற்றவும் சங்கங்கள் அமைத்து நடத்த அரசின் சார்பிலேயே நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் விசேஷம் என்னவென்றால் ஒரே தெருவில் வரிசையாக இடம் ஒதுக்கியிருக்கிறார்கள். ஒருவர் விழாவில் மற்றவர் கலந்து கொள்ளும் வாய்ப்பை நல்குவதால் இதைப் பயன்படுத்திக் கொண்டு ஒற்றுமையைப் பேண வழி இருக்கிறது. தமிழர்களைப் பொறுத்த வரையில் தென்னிந்திய சங்கம், கமரியா நாடக சங்கம், பஜனைக்குழு ஆகியவை திறம்பட இயங்கி நற்பணி ஆற்றி வருகின்றன.

''இந்த ஊரைப் பற்றி உங்கள் அநுபவம் என்ன?'' ஸ்ரீ சேதுரத்தினத்திடம் கேட்டேன்.

''கோடையில் தண்ணீர் வேண்டும்! குழாயோ வெந்நீரைச் சொரியும்! குளிர் காலத்தில் வெந்நீர் தேவை, அப்போது ஐஸ் வாட்டர் வரும்! வெய்யில் குளிர் இரண்டுமே அளவுக்கு மிஞ்சி!''

'சரியாகத்தான் எடை போட்டு வைத்திருக்கிறார் மனிதன்!' என்று குளிரிலே வெடவெடத்துக் கொண்டிருந்த நான் எண்ணினேன். ஆனாலும் அவரது குழந்தை சிரஞ்சீவி வாசுதேவனின் அன்பு என் மனத்துக்கு வெதுவெதுப்பூட்டி இதமளித்ததால் ஜபல்பூரின் கடுங்குளிரை நான் லட்சியம் செய்யவில்லை.

புகைப்படங்கள்: அரவரசன்



புள்ளியிட்ட கோட்டினூடே வெட்டவும்.

பக்கத்திலுள்ள கூப்பனை வெட்டி எடுங்கள்
அதில் உங்கள் பெயரையும், முகவரியையும்
ஆங்கிலத்தில் பூர்த்தி செய்து, கூப்பனில் உள்ள
முகவரிக்கு போஸ்ட் செய்யுங்கள். (தபாலில்
அனுப்புங்கள்) உங்களுக்கு ஒரு விசேஷ
தள்ளுபடிச் சீட்டு அனுப்பப்படும். அந்தச் சீட்டை
உங்கள் டீலரிடம் கொடுங்கள். அவர் பட்டியல்
விலையைவிட ரூ. 1.50 குறைந்த விலையில்
ஹேலோ வெயில் ஆஃப் லவ் டால்க்
எகானமி சைஸ் டப்பா ஒன்று கொடுப்பார்.
இந்த விசேஷ சலுகை குறிப்பிட்ட காலத்திற்கு
மட்டுமே உண்டு. எனவே முந்துங்கள்.
இன்றே கூப்பனை தபாலில் சேருங்கள்.

COUPON

K

To
Halo Veil of Love Talc D.O.
C/o Colgate-Palmolive (India) Pvt. Ltd.
12-A Ritchie Street, Madras 600 002.

Dear Sirs,
I would like to have my Halo Veil of Love Talc discount voucher sent to :

Name ____________________

Address ____________________

____

HT.G.2 TM

தலைவர் தரிசனம்-11



1951-ம் ஆண்டில் நான் சென்னை அரசினர் கமபக் கல்லூரியில் (அன்றைய அரசினர் முகம்மதிய கல்லூரி) இன்டர் மீடியட் வகுப்பில் சேர்ந்தேன். அப்போதிருந்தே அப்துஸ் ஸமத் அவர்களுடன் நெருங்கிப் பழகி அவர் நட்பைப் பெறும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. என்னை விடச் சில ஆண்டுகள் வயதில் மூத்தவரான ஸமத் அதே ஆண்டில் புதுக் கல்லூரியில் இன்டர் மீடியட் வகுப்பில் சேர்ந்திருந்தார். அவருடைய சொந்த ஊர் நண்பர்கள் என் கல்லூரி விடுதியில் தங்கிப் படித்ததால் அவர்களைச் சந்திக்க அடிக்கடி வருவார். அது மாத்திரமல்ல; கல்லூரி மாணவர்களுக்கிடையே

ஏ.கே.ஏ. அப்துல் ஸமத்

நடக்கும் பேச்சுப் போட்டிகளில் தொடர்ந்து முதல் பரிசைத் தட்டிக்கொண்டு போகும் வீரராக இருந்ததால் அப்போதே மாணவர்களிடையே மிகவும் பிரபலமாகியிருந்தார்.

நண்பர் ஸமத் இத்தகைய சொற்போர்களில் வாங்க ஆரம்பித்த கோப்பைகளையும் கேடயங்களையும் பார்வையாக வைக்க அந்த நாளைய புதுக் கல்லூரி முதல்வர் பிராங்கோ ஒரு தனி கண்ணாடி அலமாரியே செய்ய நேர்ந்ததாம்.

அப்துஸ் ஸமத் அவர்களின் ஆரம்ப நாட் கல்வி சில ஆண்டுகள் தடைப்பட்டு நின்றது. காரணம், அவர் தம் தந்தையார் அப்துல் ஹமீத் பாகவி அவர்களுக்குத் திருக் குர்-ஆன் தமிழ் மொழிபெயர்ப்புப் பணியில் பத்து ஆண்டு காலத்துக்கு மேலாக உதவியாளராகப் பணியாற்றத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார். அந்த மாபெரும் இலக்கிய நயம்மிருந்த மார்க்கப் பணி முடிந்தவுடன் மீண்டும் தம் கல்வியைத் தொடர விரும்பினார். வயதை மறந்தே விரும்பினார். 'முதியோர் கல்வித் திட்டத்தின் கீழ் தான் நான் வருவேன்' என்று அந்த நாட்களில் வேடிக்கையாக அவரே சொல்லுவார்.



தனியே படித்து நல்ல மதிப்பெண்களுடன் மெட்ரிக் பரீட்சை பாஸ் செய்து பல கல்லூரிகளுக்கு விண்ணப்பம் போட்டார். பச்சையப்பன் கல்லூரியில் இவருக்கு ஒரு ரசமான அனுபவம். திரு கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அங்கே முதல்வராக இருந்த நேரம். ஸமத் இன்டர் மீடியட் வகுப்புக்கான 'இன்டர்வியூ' கார்டுடன் பிரின்ஸிபால் அறைக்குள் நுழைந்தார். பிரின்ஸிபால் இவரை ஏற இறங்கப் பார்த்து விட்டு, "பையன் எங்கே? அழைத்து வரவில்லையா ?" என்று கேட்டார்.

ஸமத் தாடி வேறு வளர்த்திருந்தார். வயது மிகுதியாலேயே அந்தக் கல்லூரியில் அவருக்கு இடம் கிடைக்கவில்லை. புதுக் கல்லூரி அவருக்கு இடம் கொடுத்தது.

இங்கே முதல் நாள் இவருக்கு வேறு விதமான அனுபவம். வகுப்பில் நுழைந்ததும் இவரை ஒரு பேராசிரியர் என்று நினைத்து மற்ற மாணவர்கள் எல்லோரும் எழுந்து நின்றார்கள். வயதுக்கும் தாடிக்கும் கிடைத்த மரியாதை என்று சூழ்நிலையை ரசித்துக் கொண்டே இவர் நேராகக் கடைசி வரிசையில் போய் அமர்ந்தார்.

பிறகு ஒரு சந்தர்ப்பத்தில் பச்சையப்பன் கல்லூரியிலேயே நடந்த சர்வகலாசாலை மாணவர்கள் பேச்சுப் போட்டியில் ஸமத் பிரமாதமாகப் பேசி முதற் பரிசைப் பெற்றபோது முதல்வர் கிருஷ்ணமூர்த்தி "உனக்கு அன்று இந்தக் கல்லூரியில் இடம் கொடுக்காமல் இருந்ததற்கு இப்போது நான் வேதனைப்படுகிறேன்" என்றாராம். இதற்குச் சில ஆண்டுகள் கழித்துக் கிருஷ்ணமூர்த்தி அவர்களும் ஸமத் அவர்களும் சென்னை சர்வகலாசாலை செனட்டில் அங்கத்தினர்களாகச் சேர்ந்து பணியாற்றினார்கள்.

இன்டர்மீடியட் படிப்பை முடித்துக் கொண்டு நாங்கள் இருவரும் மாநிலக் கல்லூரியில் பி.ஏ. ஹானர்ஸ் வகுப்பில் சேர்ந்தோம். இஸ்லாமிய வரலாற்றைப் பாடமாக எடுத்துக் கொண்டோம். என் தந்தையார் உடல் நலம் பாதிக்கப்பட்டதால் நான் இடையே விட்டுவிட்டேன். ஸமத் பி. ஏ. ஹானர்ஸ் பட்டம் பெற்றுச் சட்டக் கல்லூரியிலும் ஓர் ஆண்டு படித்து நடுவில் விட்டார். அரசியல் வேகம் அவரை இழுத்து விட்டது.

இவருடைய நாவன்மை இவர்பால் பல அன்பர்களை ஈர்த்தது. இவர் தந்தையார் மொழிபெயர்த்த திருக்குர் — ஆன் தமிழ் வடிவத்துக்கு முஸ்லிம் சமுதாயத்தில் நல்ல வரவேற்பு. அதைத் தொடர்ந்து, திருக்குர் - ஆன் மகாநாடுகள் பல இடங்களில் ஏற்பாடாயின. ஸமத் பாரதத்திலும் வெளி நாடுகளிலும் இத்தகைய மகாநாடுகளில் கலந்து கொள்ளத் தொடங்கினார்.

சொல்பவர்: **கே.ஏ. வஹாப்**

நெடுஞ்சாலை அழைக்கிறது!

அநேக ஆண்டுகளுக்குப் பிறகு பாடசாலை நாட்களில் எனக்குத் தெரிந்த ஒரு நண்பனை அகஸ்மாத்தாகச் சந்தித்தேன். "ஹல்லோ...சௌக்கியமா? என்ன வேலையில் இருக்கிறாய்?" என்று குசலம் விசாரித்தேன்.

"ஹைவேஸ் டிபார்ட்மெண்ட்" என்றான்.

"அங்கென்ன க்ளார்க்கா, டைப்பிஸ்டா?" என்றேன்.

அவன் இலேசாகப் புன்னகைத்துக் கொண்டே, "க்ளார்க்காவது மண்ணாங்கட்டியாவது...நான்தான் ஹைவேஸில் இருக்கிறேன் என்று சொன்னேனே!" என்றான்.

சில கண நேரங்கழித்துத்தான் புரிந்து கொண்டேன். 'வேலையில்லாமல் நடுத்தெருவில் நிற்கிறேன்' என்பதைத்தான் அவன் அவ்வளவு நயமாகச் சொல்லியிருக்கிறான் என்பதை.

— உதகை நா. மனோகரன்

ஸமத் அவர்களின் நாவன்மைக்கு அவருடைய எழுதும் திறமையும் ஈடு கொடுத்தது. 'மணிவிளக்கு' சஞ்சிகையில் அவர் கருத்துத் தெளிவுடன் பல விஷயங்களை விளக்க ஆரம்பித்தார். இப்போது அவர்தாம் 'மணிவிளக்கி'ன் ஆசிரியர்.

காயிதே மில்லத் இந்த வளர்ந்து வரும் திறமைசாலியைக் கவனித்தார். அக்கறை காட்டினார். இடையே நட்பு வளர்ந்தது.

அன்றைய 'திராவிட நாடு' இதழ்களைத் தொடர்ந்து படித்ததன் மூலம் ஸமத் அவர்களுக்கு அறிஞர் அண்ணாவிடம் மரியாதை தோன்றி மலர்ந்தது. மீலாத் மேடைகளில் இதுவரை முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தாம் பேசுவது என்ற மரபை மாற்றி மற்ற சமுதாயத்தினருக்கும் பேச வாய்ப்புக் கொடுத்து ஒருவித சமரச உணர்ச்சியைத் தோற்றுவித்தார்.

யூனியன் முஸ்லிம் லீகும் திராவிட முன்னேற்றக் கழகமும் இணைந்து செயலாற்றினால் சமூகத்துக்குப் பயனேற்படும் என்று இவர் நம்பினார். ஆனால் காயிதே மில்லத் அவர்களுக்குக் கழகத்தின் திராவிட நாட்டுப் பிரிவினைக் கோரிக்கையும் நாத்திக வாதமும் ஏற்றுக்கொள்ளக் கூடியனவாக இல்லை. அவர் சற்றுத் தயங்கினார். காயிதே மில்லத் அவர்களும் அண்ணா அவர்களும் சந்தித்துப் பேசினால் நிலைமை தெளிவாகும் என்று ஸமத் நம்பினார். இதற்கு உதவியவர் கலைஞர் கருணாநிதி.

அன்று பேச்சினிடையே அண்ணா அவர்கள் இருமியபோது காயிதே மில்லத் தாமே எழுந்து உள்ளே போய் ஒரு குவளைத் தண்ணீரையும் கஸ்தூரி மாத்திரையையும் எடுத்து வந்து சாப்பிடும்படி வேண்டிய பரிவுணர்ச்சி அங்கிருந்தவர்கள் அத்தனை பேர் மனத்திலும் அப்படியே நின்றுவிட்டது. இவ்விதம் ஆரம்பித்த நட்பு தழைத்து வளர்ந்தது. 1967 தேர்தலில் கட்சி ரீதியான தொடர்புக்கு வழி வகுத்தது.

அப்துல் ஸமத் அவர்களை அரசியல் துறையில் புகுத்தியவர் பக்கர் அவர்கள். பக்கர் இப்போது எம். எல். ஸி.யாக இருக்கிறார். அரசியலில் புகுந்த ஸமத்தைத் தம் பிரதம சீடராக ஏற்றுக் கொண்டவர் காயிதேமில்லத்.

ஸமத் அவர்களின் தந்தையார் அந்த நாட்களில் தேசிய காங்கிரஸின் கொள்கைகளில் லயித்தவர். ராஜாஜி அவர்களுடன் பல சுற்றுப் பயணங்களை மேற்கொண்டவர். பிறகு திரு குர்-ஆன் மொழிபெயர்ப்புப் பணிக்காக அரசியலைத் துறந்தவர் அவர். காயிதே மில்லத்தோ ராஜாஜி அவர்களின் ஒத்துழையாமை இயக்கப் பேச்சைக் கேட்டதன் விளைவாகக் கல்லூரிப் படிப்பை இடையில் விட்டவர்.

ராஜாஜி அவர்களே ஒரு பொதுக்கூட்டத்தில் ஸமத் அவர்களுடன் பங்கு கொண்டு 'ஸமத் போல் நல்ல தமிழில் என்னால் பேச முடியாது' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

பொதுவாக மேடைக்கு ஸமத் அவர்கள் பேச வந்து விட்டாலே ஒருவிதக் கலகலப்புத் தோன்றும். புதுப் புதுக் கருத்துக்களுடன் பிரச்னைகளை அணுகுவார். அவர் உருவாக்கிப் பிரயோகிக்கும் சொற்றொடர்களும் புதிது புதிதாக இருக்கும்.

தந்தையார் அப்துல் ஹமீத்பாகவி, மாநிலக் கல்லூரியில் இவருக்கு ஆசிரியராக இருந்த புகாரி சாஹிப், அரசியல் ஆசான் காயிதே மில்லத் ஆகிய மூவரிடமிருந்தும் இவர் கற்றுக்கொண்டது நல்லொழுக்கம், லட்சியப் பிடிப்பு.

காயிதே மில்லத் அகில இந்திய முஸ்லிம் லீக் தலைவராகவும், தமிழகக் கிளையின் தலைவராகவும் ஒருங்கே செயல்பட்டபோது சில நண்பர்கள் ஸமத் தமிழகக் கிளையின் பொறுப்பை ஏற்க வேண்டும் என்று விரும்பினார்கள். காயிதே மில்லத் அவர்களே ஸமதை வற்புறுத்தினார். இவரைத் தேர்ந்தெடுக்கக் கூட்டத்துக்கு நாள்கூடத் தீர்மானிக்கப் பட்டது.


ஆனால் இவருடைய ஒரே லட்சியம், காயிதே மில்லத் ஜீவியவந்தரா யிருக்கும் வரை அவர்தான் இரண்டு பொறுப்புக்களையும் வகிக்க வேண்டும் என்பது. காயிதே மில்லத் சொல்வதையும் தட்ட முடியவில்லை. இவரை அப்போது இந்தப் பிரச்னையிலிருந்து காப்பாற்றியது ஒரு வெளிநாட்டுப் பிரயாணம். சமீப காலத்தில்தான் தமிழகக் கிளையின் தலைமைப் பதவியை ஏகோபித்த முடிவின்படி ஏற்றுக் கொண்டார் ஸமத்.

மதுவிலக்கு ரத்தானபோது இவர் மனம் மிகவும் வேதனைப்பட்டது. ஆளும் கட்சிக்குத் தோழமைக் கட்சியைச் சேர்ந்தவரானாலும், அவர் கொள்கையின் அடிப்படையில் வெளிப்படையாகவே கண்டித்தார். மீண்டும் மதுவிலக்கு அமுலானபோது இவரைப் போல் ஆனந்தப்பட்டவரும் யாருமில்லை.

1964ம் ஆண்டு முதல் தொடர்ந்து ராஜ்ய சபை உறுப்பினராக இருக்கும் ஸமத் முஸ்லிம் சமுதாயக் கல்வித் துறைகளிலும் நிறைய அக்கறை காட்டுகிறார். தாம் இண்டர்மீடியட் படித்த அதே புதுக் கல்லூரியில் இப்போது அவர் நிர்வாகத் தலைவர்.

எளிய வாழ்க்கை, உயர்ந்த சிந்தனை, பரந்த அனுபவம், சான்றோர்களிடம் மரியாதை எல்லாம் சேர்ந்து எங்கள் தலைவர் ஸமத் அவர்களை உருவாக்கியிருக்கின்றன.

கேட்டு எழுதியவர்: **கோமதிஸ்வாமிநாதன்**



பொதுமக்களைக் கவர்ந்து, அவர்களைக் கூவி அழைக்க, அந்தப் பதினைந்து வயதுப் பையனை ஐந்தடி மேடை மீது நிறுத்துவார்கள். சும்மா நிறுத்தமாட்டார்கள்...! சுமையுடன்தான்! என்ன சுமை? மலைப்பாம்பு!

அந்தப் பையன் மலைப் பாம்பைக் காலை முதல் மாலை வரை சுமந்தபடி, ''ஐயா வாங்க! அம்மா வாங்க! தம்பீ, வா! தாத்தா, வாங்க!'' இப்படிக் கூப்பிடவும் வேண்டும்!

வாய் வலிக்கும்; கழுத்து வலிக்கும். கொஞ்ச நேரம் சோர்ந்து மௌனமாக நின்றால், முதுகில் பிரம்படி விழும்! 'டேய்! சத்தம் போட்டுக் கூப்பிடுடா!... இதுக்குத் தாண்டா உன்னை வெச்சிருக்கோம்!' என்று அதட்டுவார்கள். ஒரு நாள் முழுதும் நின்று கத்தினால் ஒரு வேளை சோறும், நாலணா காசும் கிடைக்கும். ''இப்படித்தான் என் வாழ்க்கை தொடங்கியது'' என்றார் ஷேக் மைதீன்.

இன்று சென்னையில் பழைய வண்ணாரப் பேட்டைவாசியாக இருக்கும் ஷேக் மைதீனைப் பெயர் சொல்லிக் கேட்டால் பலருக்குப் புரியாது. 'புலி பாஷா' என்றால், உடனே தெரியும்!

வனவிலங்குகளுடன் போரிடுவதே இவருடைய முக்கிய பிழைப்பாகிவிட்டது.

''பதினைந்து வயதில் மலைப் பாம்பைத் தோளில் தாங்கித் தெருவில் போவோர் வருவோரைக் கூவி அழைத்தது எதற்கு?''—பதில் அவரிடமிருந்தே வருகிறது:

''பலப் பல ஊர்களில் நடக்கும் திருவிழாக்களில், சர்க்கஸ் கூடாரம் போல் அமைத்து உள்ளே கூண்டில் காட்டு மிருகங்களை அடைத்து வைத்திருப்போம். அவற்றைப் பார்க்கத்தான் அழைப்பேன். இதற்குக் கட்டணம் வசூலிப்பது வழக்கம். இப்படி காசி முதல் ராமேசுவரம் போய்வந்திருக்கிறோம்.''

இவர் தொடர்பு கொண்டிருந்த மினி மிருகக் காட்சி சாலைகளுள் வாசுதேவன் என்பவர் நடத்திய ஒன்றில்தான் அதிக காலம் பணியாற்றியுள்ளார்.

உருக்கி வார்த்த இரும்பு போன்ற வலுவான உடற்கட்டுடன் விளங்கும் இருபத்தெட்டு வயது நிறைந்த புலி பாஷா, ஓர் அசாதாரண மனிதர்.

சேலம் ஆத்தூரைச் சேர்ந்த புலிகோவிந்தன் என்பவரிடம் பல வருடங்கள் சீடனாக இருந்து, வன விலங்குகளிடம் பழகக் கற்றார். மிருகங்களுக்கு இரை போடவும், கூண்டில் மிருகங்களைக் குளிப்பாட்டவும் தெரிந்து கொண்டார். நாளடைவில் பயம் அறவே நீங்கிவிட்டது.

''எந்தெந்த மிருகங்களுடன் நீங்கள் பயமின்றிப் பழகுவீர்கள்?''

''என் குரு புலி கோவிந்தன், புலிகளுடன் கட்டிப் புரண்டு சண்டை போடுவார். சிங்கம் அவருக்குச் செல்லப் பூனை மாதிரி... புலியை வீட்டில் குட்டியிலிருந்து வளர்ப்பவர். அதனால் புலி கோவிந்தன் என்று பெயர் வந்தது. அவரிடம் மிருகங்களுடன் சண்டை போடக் கற்றேன்.''

''மிருகங்களுடன் எதற்காகச் சண்டை போடுகிறீர்கள்?''

''சினிமாப் படங்களில், பெரிய கதாநாயகர்கள் போடும் மிருகச் சண்டைக்கு மிருகங்களைப் பழக்குவேன். நடிகர்களுக்குப் பயிற்சியும் அளிப்பேன். அநேகமாக ஆபத்தான 'குளோஸ் அப்'புகளுக்கு நான்தான் 'டூப்'! என் முகத்தை மட்டும் காட்டமாட்டார்கள்!''

''அப்படி மிருகங்களுடன் சண்டையிடும் படங்கள், அடிக்கடி தயாராவதில்லையே?''

''சினிமா எங்களுக்கு முக்கியமான பிழைப்பு அல்ல! நான் கரடிக் குஸ்திக்காரன். சிறிய சர்க்கஸ்களில், விசேட அழைப்பின் பேரில் தான் போய், கரடிக் குஸ்தி செய்வேன்.''

''அபாயம் நிறைந்த தொழில்தான்.....''

''ஆமாம்; ஆபத்தான கட்டங்களை நிரம்ப சந்தித்திருக்கிறேன். பம்பாயில் சினிமா நடிகர்களுக்காக ஒத்திகை செய்து காட்டிய போது சிங்கம் என் நெஞ்சில் அறைந்து விட்டது. பேச்சுமூச்சற்றுக் கிடந்தேன். செத்துப் பிழைத்தேன் என்றே சொல்லலாம். கன்யாகுமரியில் கரடி குஸ்தியின்போது என் குதிகால் நரம்பு அறுந்தது: முழங்காலில் உள்ள வடு சிறுத்தை பிறாண்டியபோது ஏற்பட்டது. புலிச் சண்டையின்போது வலது கை ஆள்காட்டி விரல் எலும்பு முறிந்து விட்டது. முதுகில் உள்ள நீண்ட கோடு புலி நகம் கீறியதால் ஏற்பட்டது! மலைப் பாம்பு பல தடவைகள் கடித்திருக்கிறது. ஆனால் விஷம் கிடையாது.

''என் பிழைப்பே, நித்திய கண்டம் பூரண ஆயுசுங்க! அல்லாதான் என்னைக் காப்பாற்றி வருகிறார்!'' என்கிறார் புலி பாஷா சிரித்துக் கொண்டே.

பேட்டி: ஏ. சீனிவாசன்

பொன்னியின் புதல்வர்



36. பொன்னியும் பொருனையும்

சுந்தா

காவிரி தென்பெண்ணை பாலாறு - தமிழ்க்
கண்டதோர் வையைப் பொருனைநதி

— பாரதியார்

ஆனந்த விகடனுடன் தொடர்பு கொண்டதற்குச் சில வாரங்களுக்கு முன்னால், அதாவது 1928 ஜூன் மாத இறுதியில் ஒரு நாள் மாலை, நவசக்தி அலுவலகத்திலிருந்து வெளியே புறப்பட்ட கல்கி, மனம் போனபடி காலைப் போகவிட்டுச் சென்னைத் தெருக்களில் நடந்து கொண்டிருந்தார். அன்று காங்கிரஸ் கூட்டம் ஏதும் இல்லை; பொழுது போக்குக்கு நல்ல நிகழ்ச்சிகளும் இல்லை. அப்படிப் போய்க் கொண்டிருக்கையில், ஒரு ஹாலின் வாசலில், ''ஸ்ரீமான் டி.கே.சிதம்பரநாத முதலியார் தமிழின் தனித் தன்மை பற்றிப் பிரசங்கம் செய்வார்'' என்று எழுதிய பலகை ஒன்றைக் கண்டார். முதலியார் ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்தவர் என்பதும், மேல் சட்டசபை உறுப்பினர் என்பதும் கல்கிக்குத் தெரியும். நவசக்தியின் நிருபராகச் சட்டசபை நடவடிக்கைகளைக் கவனிக்கச் சென்றபோது அவரை நாலைந்து தரம் தள்ளியிருந்து பார்த்ததுண்டு. ஜஸ்டிஸ் கட்சியினர் என்பதாலும், விதேசித் துணியும் ஜரிகைத் தலைப்பாகையும் அணிந்தவர் என்பதாலும், அவர்மீது கொஞ்சம் வெறுப்புக் கொண்டதும் உண்டு.

எதற்கும் அந்த முதலியார் எப்படித்தான் பேசுகிறார் என்பதைக் கேட்கலாமே என்று கல்கி எண்ணினார். அக்காலத்தில் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களும், காங்கிரஸ் தலைவர்களில் பெரும்பாலோரும், ஆங்கிலத்தில் ''லெக்சர்'' செய்வதுதான் வழக்கம். அவர்களுக்கு மாறாக ஒரு ஜரிகைத் தலைப்பாக்காரர், தமிழில் பேசுகிறார், அதுவும் தமிழின் தனித்தன்மை பற்றிப் பேசுகிறார் என்றால் ?

கல்கி உள்ளே போய் ஓர் ஓரமாக உட்கார்ந்து கொண்டார். நாலைந்து டை, கோட்டு ஆசாமிகள் புடைசூழ முதலியார் நடந்து வந்தார். ஜரிகைத் தலைப்பாகைக்குக் கீழே அறிவுக் கண்ணாடி போன்ற நெற்றி; அன்பு ஒளி வீசும் கண்கள்; அடர்ந்த மீசையினூடே விரிந்து பரவிய புன்னகை. ஒரு பக்கம் இலேசாகச் சாய்ந்து நடந்து மேடை மேல் அமர்ந்த அவரைக் கண் கொட்டாமல் கல்கி பார்த்துக் கொண்டிருந்து, எவ்வளவு ஜோராய் இருக்கிறார் என்று மனத்துக்குள் சொல்லிக் கொண்டார். முதலியார் நிதானமாய் எழுந்து நின்று, ஆடையின் ஆடம்பரத்துக்கு நேர்மாறாக, மிக எளிய தமிழில் சாதாரணமாய் உரையாடுகிற பாணியில் பேசத் தொடங்கியதும் கல்கியின் மனத்தில் ஆனந்த அலைகள் எழுந்தன.





★ பொன்னியும் பொருனையும்.

★ "டி. கே. சி. கல்கி இடையே நட்பு தொடங்கிய இடம் எங்கள் வீடு தான் என்பதில் மகிழ்கிறேன்."

- பெ. நா. அப்புசுவாமி







★ ரசிகமணியும், கவிமணியும்.
★ உணர்ச்சிப் பார்வையும், அறிவுப் பார்வையும்.
★ திருக்குற்றாலம் - திருநெல்வேலியின் பெருமைகளுள் ஒன்று.

வெள்ளைக்காரனுக்கு வால் பிடிப்பவர்களில் ஒருவர் என்று கல்கி நினைத்துக் கொண்டிருந்தவர், எடுத்த எடுப்பிலேயே, வெள்ளைக்காரன் ஒருவன் வாழைப் பழத்தைத் தின்னத் தெரியாமல், சுளையை எறிந்துவிட்டுத் தோலியைச் சுவைத்ததாக ஒரு கதை சொல்லிச் சபையோரைச் சிரிக்க வைத்தார். அந்தக் கதையைப் பற்றிக் கொண்டு, ஆங்கில மோகம் கொண்டவர்களைக் கேலி செய்தார். ''வெள்ளைக்காரன் தோலைச் சுவைக்கிற கணக்குத்தான் நம்மவர்கள் ஆங்கிலத்தைச் சுவைக்கிற அழகு'' என்றார். இந்நாட்டில் ஆங்கிலத்தைப் புகுத்த காரணமாய் இருந்த மெக்காலேயை, ''என்னலே'' என்று திருநெல்வேலித் தமிழில் கூப்பிட்டு ஏசினார். பிறகு தமிழ்ப் பண்டிதர்களைச் சிண்டைப் பிடித்து இழுத்து, அரும்பத உரை அகராதியை அவர்கள் கட்டிக் கொண்டு அழுவதையும், வழக்கொழிந்த சொற்களை அள்ளிக் கொட்டி உயிருள்ள தமிழை வதைப்பதையும் வயிற்றெரிச்சலுடன் எடுத்துச் சொன்னார். மக்களுடைய நெஞ்சிலே பிறந்து நாவிலே தவழ்ந்து வருவதுதான் தமிழ் என்றார். அதைத் தொடர்ந்து தமிழின் ஒலி பாவங்களை விளக்கினார். எப்படி ஒரு சின்ன ஓசை வித்தியாசத்தினால், ஒரே ஒரு எழுத்து வித்தியாசத்தினால், வெவ்வேறு உணர்ச்சிகளைத் தமிழில் வெளிப்படுத்த முடிகிறது என்பதை உதாரணங்களுடன் சொன்னார்:

அவன் வந்தான் என்கிறோம். அதோடு ஒரு ஆவைச் சேர்த்து விட்டால்போதும், வந்தானா என்கிற கேள்வி உண்டாகி விடுகிறது. இங்கிலீஷிலே இதை இவ்வளவு எளிதாய் மாற்றிப் போட முடியாது. **He came** என்கிறதைக் கேள்வியாய்க் கேட்க வேண்டும் என்றால், **Did he come?** என்று சுற்றி வளைத்து மூக்கைத் தொட வேண்டும். வந்தானா என்று கேட்பதற்குப் பதிலாக, வந்தானே என்று கேட்டால், பாவத்தில் ஒரு வித்தியாசத்தை உண்டு பண்ண முடிகிறது. அதற்கு, வந்தான் என்று பதில் சொன்னால் ஒரு பொருள்; வந்தானே என்றால் வேறொரு பொருள்...

நமது கவிகளிலே, தமிழின் இதய ஒலியை நன்றாய் அறிந்தவன் கம்பன். கம்ப ராமாயணத்திலே ஒரு பாட்டை எடுத்துக் கொண்டு, அதைத் திரும்பத் திரும்பப் பாடிப் பார்த்தால், நமக்குத் தமிழின் இதய ஒலி தெரிய வரும். டக் டக்கென்று உணர்ச்சியோடு நாடி அடிக்கிறதைக் கேட்கலாம்.

உதாரணமாக ஒரு பாட்டைச் சங்கராபரண ராகத்தில் வளைத்துக் குழற்றிப் பாடிக் காட்டினார் முதலியார்.

கேட்கக் கேட்கக் கல்கிக்கு வியப்பும் உணர்ச்சியும் மேலிட்டன. தாம் அது வரை எண்ணிக் கொண்டிருந்த எண்ணங்களே, மேடையிலிருந்து சொற்களாய் மாறி வருவன போல் அவருக்குத் தோன்றியது. தமிழின் இதயமே முதலியாரின் வாக்கின் வழியே ஒலித்து, தம் இதயத்தில் எதிரொலி செய்வது போல் இருந்தது. எங்கேயோ எப்போதோ அவருடன் நெருங்கிப் பழகி, பின்னர் அது விட்டுப் போனது போல், ஏதோ புரிந்தும் புரியாததுமான நினைவுகள் அலையலையாய் வீசின.

இதோ முதலியார் மேடையை விட்டு இறங்கிச் செல்கிறார். இவரைப் பின்தொடர்ந்து இவரைச் சிநேகம் செய்து கொண்டால் என்ன? ஆனால் எளிமையைப் பற்றி மேடையில் பேசியவர், நடப்பில் அதற்கு மாறாக இருந்தால் என்ன செய்வது ? தம்மை அலட்சியம் செய்தால் அவமானமாய் இருக்குமே ?

முதலியாரை நெருங்கத் துணியாமலே வீட்டை நோக்கி நடந்தார் கல்கி. வீட்டுக்குப் போனதும் முதல் காரியமாய், தம் கைப் பெட்டியைத் தூக்கி வைத்துக் கொண்டு, கேள்வி பாவங்களைப் பற்றி அந்தப் பேச்சாளர் சொன்னதை ஒரு குறிப்பாக எழுதினார். பின்னர் அதை, நவசக்தியின் ஜூலை நாலாம் தேதிய இதழில், தமது "உதிர்ந்த மலர்கள்" பத்தியில் வெளியிட்டார்.

அதற்குச் சுமார் நாலாண்டுகளுக்குப் பிறகு டி.கே.சி.யும் கல்கியும் சந்தித்து உள்ளம் கலந்த நண்பர்களானார்கள். அந்த நட்பின் தொடக்கத்தை பெ.நா. அப்புஸ்வாமி சொல்லட்டும் :

திருநெல்வேலியில் சின்னஞ் சிறு குழுக்களிடையே, தமிழ் மணம் கமழும் தமது புலமையை, வாய்ப்புக் கிடைத்த அளவுக்குச் சற்றே பரப்பி வந்த டி. கே. சிதம்பரநாத முதலியார், சென்னைக்கு வந்து, இந்து சமய அறக்கட்டளை ஆட்சித்துறை ஆணையாளராகப் பதவி ஏற்றார். நண்பர் (பேராசிரியர்) வையாபுரிப் பிள்ளையோடும் என்னோடும் தமிழ் இலக்கிய வளர்ச்சி பற்றிப் பலகால் அவர் பேசுவதுண்டு. அப்போதெல்லாம் 'ஆனந்தவிகடன்' பத்திரிகையில் 'கல்கி' என்னும் ஒருவர் மிக அழகான தமிழில், சுவைபட எழுதி வருகிறார் என்று, அடிக்கடி அவர் சொல்லுவார். சிற்சில வேளைகளில் சுவையான பகுதிகளை அவர் எங்களுக்குப் படித்துக் காட்டியதும் உண்டு. ஆதலால், எங்கள் இருவருக்கும் அவரைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்னும் எண்ணம் தோன்றி வளர்ந்து வந்தது.

ஒரு நாள் நண்பர் வையாபுரிப் பிள்ளையும் நானும் எங்கள் வீட்டில் பேசிக் கொண்டிருக்கையில், இரண்டு இளைஞர்கள் வந்தார்கள். தாங்கள் இன்னார் என்பதை அறிவித்துக் கொண்டார்கள். ஒருவர் 'கல்கி', மற்றொருவர் 'துமிலன்'...

அந்நாளில் நான் குடியிருந்த சித்திரக் குளத் தெருவில் உள்ள வீட்டில் வாரந்தோறும் ஒரு கூட்டத்தை நடத்தி வந்தேன். தமிழில் ஆர்வம் உடைய பலர் — புலவர்கள், எழுத்தாளர்கள், பேராசிரியர்கள், பத்திரிகையாசிரியர்கள், இசைவல்லுநர்கள் போன்றவர்கள் — ஒரு சில பெண்களும் கூட — அங்கே வந்து பல விஷயங்களைப் பற்றி இனிமையாக ஏழு எட்டு மணி நேரம் பேசி விவாதிப்பதுண்டு.

அக் கூட்டம் தொடங்கிய போது, சுமார் பத்துப் பேரே இருந்தோம். பின்பு, இருபது முப்பதாக அந்தத் தமிழ் அன்பர்கள் பெருகி விட்டார்கள். வேறு பலரைப் போலவே, கல்கி, துமிலன், வாசன் ஆகியோரும் அந்தக் கூட்டத்துக்கு வாரந்தோறும் தவறாமல் வருவார்கள்.

டி. கே. சி. முதலியாரைக் கல்கி நெருங்கிப் பழகியதும், அவர்களோடு அத்துணை சிறப்பான நட்புக் கொண்டிருந்ததும், தமிழுலகம் நன்கு அறிந்த செய்திகள். அவ்விரண்டும் தொடங்கிய இடம், பச்சைப் பசேல் என்ற நீரை உடைய ஒரு சிறிய குளத்தின் கரையில் உள்ள எங்கள் வீட்டு மாடிதான் என்பதை நான் நினைத்துப் பார்க்கும்போது, அந்த நாளில் நாங்கள் வாழ்ந்த வாழ்க்கை எத்துணை சிறந்ததாக இருந்தது என்பதை எண்ணி மகிழ்கிறேன். தமிழின் வளர்ச்சிக்காக அப்போது அங்கே எத்தனையோ மனக்கோட்டைகள் கட்டப்பட்டன; எத்தனையோ கனவுகள் காணப்பட்டன. அவற்றில் சில நன்கு உருப்பெற்று நனவாகியதைக் காணும் போது என் மனம் பூரிக்கிறது.

(இலங்கைத் தமிழ்ச் சங்கத்தின் "சுடர்" 1967)

டி.கே.சி.யை நண்பராய் அடைந்ததால் உண்டான மகிழ்ச்சியையும் பெருமையையும், சில மாதங்களுக்குப் பின் கல்கி, தமது வாசகர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

சமீபத்தில் எனக்கு ஏற்பட்டிருக்கும் புதிய நண்பர்களில் டி. கே. சி. ஒருவர். கல்விச் சீர்திருத்தம் முதலிய பல விஷயங்களில் என்னை விடத் தீவிர அபிப்பிராயம் கொண்டவர் இவர் என்பதைக் கண்டபோது, மிக்க வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தேன். ஆனால், என்னை நேரில் தெரிந்து கொள்வதற்கு முன்பு, இவர் எனக்கு ஒரு பெரிய தீங்கு செய்ய முயன்றார். சர்வகலாசாலையில் தமிழ்ப்பாட நிர்ணய போர்டில் இவர் ஓர் அங்கத்தினர். இவரும் (இன்னொருவரும்) என்னுடைய கதைப் புத்தகம் ஒன்றை (சாரதையின் தந்திரம்) மேற்படி சர்வகலாசாலையில் பாடப் புத்தகமாக வைக்க வேண்டும் என்று சிபாரிசு செய்தார்கள். புத்தகத்தைப் படித்திராத காரணத்தால் மற்ற அங்கத்தினர்கள் இதை ஒப்புக் கொண்டார்கள்.....


1. கேசத்தை ஷாம்புவால் சுத்தம் செய்யுங்கள்.
2. நரை முடியின் மீது க்ளீம் ஹேர் டையை சமமாகப் பரப்புங்கள். சிறிது நேரம் அப்படியே இருக்கட்டும்.
3. நன்றாக நீரால் கழுவி, ஷாம்புவால் சுத்தம் செய்யுங்கள்.
4. கண்ணாடியில் பாருங்கள். நீங்கள் எவ்வளவு இளமையுடன் தோன்றுகிறீர்கள்!
உங்கள் கேசத்தை மீண்டும் இளமையுடன் விளங்க வைப்பது எவ்வளவு எளிது பாருங்கள்.
புதிய க்ளீம் ஹேர் டை உபயோகிக்க எளிதானது. இது சமமாகப் பரவி, விரைவில் செயலாற்றுகிறது. உங்கள் கேசத்திற்கு இயற்கையான வண்ணமும் பளபளப்பும் அளிக்கிறது. இது கரைந்து போகாது; மங்காது—பல முறை கேசத்தை சுத்தம் செய்த பிறகு கூட. உங்களுக்குச் சிறந்தது—க்ளீம் பர்மனென்ட் ஹேர் டை.
புதிது
GLEEM
PERMANENT HAIR DYE
NATURAL BLACK
க்ளீம்
பர்மனென்ட் ஹேர் டை
இயற்கையான கருமை & கருமை கலந்த பழுப்பு.
சிறப்பான வண்ணம் பெற க்ளீம் ஷாம்பு உபயோகியுங்கள். பிரபல கேச அலங்கார நிபுணர்கள் சிபாரிசு செய்வது.
Geoffrey Manners & Co., Ltd.
GHD-1-A

நான் பள்ளிக்கூடத்தில் படித்த காலத்தில் 'டெக்ஸ்ட் புக்' ஆசிரியர்களுக்கு மாணாக்கர்கள் கொடுத்த சாபங்கள் எல்லாம் நிறைவுக்கு வந்தன. மேற்படி போர்டாரின் மனத்தில் புகுந்து அவர்கள் ஆலோசியாமல் செய்த தீர்மானத்தை மாற்றிவிட வேண்டும் என்று குல தெய்வங்களை எல்லாம் வேண்டிக் கொண்டேன். தெய்வங்கள் கருணை புரிந்தன. சர்வகலாசாலைப் பண்டிதர்கள் பின்னால் புத்தகத்தைப் படித்தபோது தீர்மானத்தை மாற்றி விட்டார்கள். 'காங்கிரஸ் ஸ்பெஷலில் கோர சம்பவம்' என்னும் கதைதான் அவர்களுக்கு முக்கியமான முட்டுக்கட்டையாய் இருந்தது என்று அறிந்தேன்.

(ஆ. வி. 1-8-'32)

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, டி. கே. சி.யை இன்னும் நன்றாகத் தெரிந்த பிறகு, அவருடைய கம்ப ராமாயணப் புலமை பற்றி இப்படிக் கல்கி எழுதினார் :

கம்பனுடைய கவிதை சம்பந்தமாக, தமிழ்ப் புலவர்கள் முதல் நம் போன்ற சாமானியர்கள் வரையில், நிராட்சேபமாக ஒப்புக் கொள்ளக் கூடியவாறு அபிப்பிராயம் சொல்ல உரிமை உள்ளவர் ஒருவர் உண்டென்று சொன்னால், அவர் ஸ்ரீமான் டி.கே. சிதம்பரநாத முதலியார்தான். கம்பன் பாட்டு ஒன்றின் நயங்களை நன்கு அறிந்து அனுபவிப்பதற்குக் குறைந்தது மூன்று நாள் வேண்டும் என்பது அவருடைய மதம். இந்த முறையை அனுசரித்துத் தமது வாழ்நாளில் பெரும் பகுதியைக் கம்பன் பாட்டை அனுபவிப்பதில் செலவிட்டு, கம்பன் கவிதையின் வைப்பு முறையை (டெக்னிக்) பரிபூர்ணமாய் அறிந்தவராதலின், பாட பேதங்களினால் ஏற்படும் கோளாறுகளை அவரால் வெகு எளிதில் சரிப்படுத்த முடியும். "இந்தப் பாட்டு கம்பன் பாட்டாய் இருக்க முடியாது" என்பார். அவருடைய நண்பர்கள் பின்னால் சோதனை செய்து, சில ஏட்டுப் பிரதிகளில் அந்தப் பாட்டு இல்லை என்பதைக் கண்டு பிடிப்பார்கள்.

டி. கே. சி. அவர்களுக்குக் கம்பனைப் பற்றி எழுதுவதில் நம்பிக்கை கிடையாது. எழுத்தின் மூலம் கம்பன் பாட்டில் உள்ள நயங்களில் சிறு பகுதியைக் கூட எடுத்துக் காட்ட முடியாது என்று அவர் சொல்லுவார்.

(ஆ. வி. 6-5-'34)


சிதம்பரநாத முதலியார், கல்கிக்குப் பதினேழு வயது மூத்தவர். தென்காசி வட்டத்தில் உள்ள கடவாக்கத்திக் கிராமம், அவருடைய குடும்பத்துக்குச் சொந்தம். திருக்குற்றாலத்தின் பக்கத்திலும் நிறைய நிலபுலன்கள் அந்தக் குடும்பத்துக்கு உண்டு.

திருச்சியில், கல்கி அரைகுறையாய்ப் படித்த அதே தேசியப் பள்ளியில் டி.கே.சி. முழுமையாய்ப் படித்தார். பிறகு சென்னையில் உயர் கல்வி; பி.ஏ. பி. எல். பட்டங்கள். அவர் சட்ட மாணவராய் இருக்கையில், ஒரு நாள் மாலை, சுப்பிரமணிய பாரதியார், அவருடைய விடுதிக்கு வந்து, தமது, "வந்தே மாதரம் என்போம்" என்ற பாடலை ஆவேசத்துடன் பாடினார். "தமிழ்க்கவி உயிர்த்தெழுந்துவிட்டது" என்று டி. கே. சி. யும் நண்பர்களும் பாராட்டிச் சொன்னார்களாம். அதைக் கேட்டு "பாரதியாரின் முகத்தில் ஆனந்தமும் எக்களிப்பும் கழித்தோடிப் பிரகாசித்தன."

(கல்கி இதழ் 12-9-'47)

1908ல், டி. கே. சி. பிச்சம்மாள் அண்ணியை மணந்தார், அவர்களுடைய ஒரே மகன் தீத்தாரப்பன், தந்தையின் முகத்தழகையும் அகத்து அழகையும் கொண்டிருந்தார்.

பி. எல். தேறியபின் டி. கே. சி. திருநெல்வேலி வண்ணாரப்பேட்டையில் தமது சொந்த வீட்டில் குடியமர்ந்து, வழக்கறிஞராய்ப் பதிவு செய்து கொண்டார். ஆனால் வக்கீல் தொழிலில் மனம் செல்லவில்லை. வீட்டு முகப்பில் தொங்



சென்னைக்கு அருகிலிருக்கும் நங்கநல்லூரில் சர்வமங்களா நகரில் பூமியின் அடியிலிருந்து கண்டு பிடிக்கப்பட்ட ஓர் ஆலயமும் சில தெய்வ மூர்த்திகளும் சுமார் ஆயிரத்து ஐந்நூறு வருஷங்களுக்கு முந்தியவை என்று புராதன பொருளாராய்ச்சி இலாகாவினரால் மதிக்கப்படுகிறது. அவ்விடத்திலேயே ஒரு பெரிய ஆலயம் அமைத்து அதில் லக்ஷ்மீநரசிம்ம ஸ்வாமி, நவநீத கிருஷ்ணர் முதலிய மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்யும் முயற்சி நடைபெற்று வருகிறது.

இந்த உத்தமப் பணியில் பங்கு கொள்ள விரும்புகிறவர்கள் நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி: செயலாளர், ஸ்ரீ கிருஷ்ண பக்த ஜன சபா, நெ. 4, 3வது தெரு (பக்தவத்சலம் நகர் தென் பகுதி), சர்வமங்கள நகர், சென்னை-61.

கிய தொழிற் பலகையை உள்ளே எடுத்து வைத்துவிட்டு, கவிதையை, குறிப்பாகக் கம்பன் கவிதையை ரசிப்பதையே வாழ்க்கை முறையாகக் கொண்டார்.

ரசிகமணி டி. கே. சி.யின் பெருமையைக் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் வெண்பா ஒன்று அழகாகச் சொல்கிறது :

கன்னித் தமிழே போல், கம்பன் கவியே போல்
மன்னும் பொதிகை மலையே போல்-பன்னுநம்
நாடு மகிழச் சிதம்பர நாத நண்பா,
நீடு நீ வாழ்க நிலைத்து.

கவிமணியின் கவிதைதான், டி.கே.சி.யும் ராஜாஜியும் நட்புக் கொள்வதற்குக் கருவியாய் இருந்தது. அப்புஸ்வாமி வீட்டில், டி. கே. சி.யைச் சந்தித்த சிறிது காலத்துக்கெல்லாம், அவரைத் தமது இலக்கியத் தலைவராய் ஆக்கிக் கொண்ட கல்கி, தமது அரசியல் தலைவரான ராஜாஜியுடன் அவரை இணைத்து வைக்க வேண்டும் என்று முயன்று கொண்டிருந்தார். இவரைப் பற்றி அவரிடமும், அவரைப் பற்றி இவரிடமும் கல்கி அடிக்கடி சொல்வதுண்டு. ஆனால் வெகு நாள் வரை அவர்கள் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்ய முடியாமல் இருந்தது. கடைசியில் ஒரு நாள், கவிமணியின், ''கருணைக் கடல்'' பாடல்களை, ரசிகர் கூட்டம் ஒன்றில் டி.கே. சி. பாடிக் காட்டிக் கொண்டிருந்தபோது, அந்தக் கூட்டத்துக்கு ராஜாஜியைக் கல்கி கூட்டிச் சென்றார். அந்தக் கணமே, இரு முனை நட்பு மும்முனை நட்பாயிற்று.

டி. கே. சி.யின் அன்றையக் கவிதை வாசிப்பைப் பற்றி, ராஜாஜி என்ன நினைத்தார் என்பதைப் பல ஆண்டுகளுக்குப் பிறகு, சொ. முருகப்பாவின் சமூகத் தொண்டு பற்றிய கட்டுரை ஒன்றில் கல்கி குறிப்பிட்டார் :

டி. கே. சி. படித்து முடித்து விட்டுச் சென்ற பிறகு ராஜாஜி கூறியதாவது : ''டி. கே. சி. யைப் போல் கவிதையில் ஆசை கொண்ட இன்னொருவரை நான் பார்த்ததே இல்லை. டி. கே. சி.யைப் போல் கவிதை அழகு இதுதான் என்பதைத் தாமும் உணர்ந்து மற்றவர்களுக்கும் எடுத்துச் சொல்லக் கூடிய இன்னொருவரையும் நான் கண்டதில்லை.''

(''யார் இந்த மனிதர்கள்?'' நூலில் ''சமூக ஊழியர் இருவர்'')

அந்த மும்முனை நட்பு பல ஆண்டுகளாய் வளர்ந்த பிறகு, ராஜாஜியின் நட்பு நெறி பற்றிய குறிப்பு ஒன்றில் கல்கி சொன்னார் :

ரஸிகமணி டி. கே. சி. அவர்கள் எப்பொழுதும் காங்கிரஸ் வாதியாய் இருந்ததில்லை. சில காலம் ஜஸ்டிஸ் கட்சியில் இருந்ததுண்டு. உத்தியோகம் பார்த்ததுண்டு. ஆயினும் சுமார் பத்து வருஷங்களுக்கு முன்பு ரஸிகமணியும் ராஜாஜியும் சந்தித்து இலக்கியம் — கவிதை சம்பந்தமாகப் பேசியவுடனே நெடுங்காலத்து நண்பர்களைப்போல் நெருக்கமாகி விட்டார்கள்.

''புணர்ச்சி பழகுதல் வேண்டா
உணர்ச்சிதான் —
நட்பாங் கிழமை தரும்''

என்னும் வள்ளுவர் பெருமான் அருள் வாக்கினுக்கு ரஸிகமணி — ராஜாஜியின் நட்பு ஒரு சிறந்த உதாரணம் என்று சொல்லலாம்.

மகாத்மா காந்தி சென்னைக்கு விஜயம் செய்திருந்த போது, ரஸிகமணியை மகாத்மாவுக்கு ராஜாஜி அறிமுகம் செய்து வைத்தார். அப்போது, ''அறுபது பிராயத்துக்குப் பிறகு இவரோடு நான் சிநேகமானேன். எனினும் இவர்தான் இன்றைக்கு என் சிநேகிதர்கள் எல்லாரிலும் அத்தியந்த சிநேகிதர்'' என்றார். (நாட்டுக்கு ஒரு புதல்வர் - பாகம் 5)

ராஜாஜியும் டி.கே.சி.யும் உண்மையாய் இணைந்த உத்தம நண்பர்களாய் இருந்தார்கள் என்பதில் ஐயமில்லை. ஆயினும் அவர்களுடைய இணைப்பு வியப்பானதே. அவர்களிடையே பொதுவாய் இருந்தது இலக்கியம் ஒன்றுதான். அதிலும்கூட ரசிகமணியின் பார்வை உணர்ச்சிப் பார்வை; - ராஜாஜியின் பார்வை அறிவுப் பார்வை. டி.கே.சி. அவர்களுக்கு அரசியலில் அக்கறையே கிடையாது; அவர் ஜஸ்டிஸ் கட்சியில் இருந்த போதும் அதில் உண்மையான ஈடுபாடு கொண்டிருக்கவில்லை. — ராஜாஜியோ மிக மிகத் தீவிரமாய் அரசியலில் ஈடுபட்டவர். முட்டாள்களுடனும் பரிவுடன் பழகுவார் ரசிகமணி; மூளைக் குறைவானவர்களைக் கண்டாலே பிடிக்காது மற்றவருக்கு. யாருடனும் எதைப் பற்றியும் அதிகமாய்த் தர்க்கம் செய்யமாட்டார் டி.கே.சி. நேர்மாறாக ராஜாஜி, வாதச் சிலம்பம் என்றால் சளைக்காமல் விளையாடுவார். யாரையும் தோற்கடிக்கக் கூடாது என்பது டி. கே.சி.யின் பண்பு. தோற்கடிக்க வேண்டியவர்களைத் தோற்கடிக்கத்தான் வேண்டும் என்பது மற்றவரின் கொள்கை. நடந்ததை எண்ணி டி. கே.சி. மகிழ்

வார். அல்லது வருந்துவார்; ராஜாஜியோ இனி நடக்க வேண்டியதையே எண்ணித் திட்டம் இடுவார்.

இப்படி எல்லாம் வேற்றுமைகள் இருந்தும், அன்பும் அறிவும் ஒன்றை ஒன்று போற்றிப் பேணியதால், அதிசயமான நட்பு ஒன்று தழைத்தது. அது தழைத்து நிலைக்கச் செய்தவர் கல்கி.

இந்த இரண்டு சான்றோர்களும், கல்கியின் வாழ்க்கையில், வேறு உற்றார் யாரையும்விட அதிகமாய் ஊடாடி இருந்தார்கள் — வாழ்க்கையில், உணர்ச்சியில், சிந்தையில் இதன் காரணமாய் இந்த வரலாற்றில் வேறு யாரையும்விட அதிகமாய் இவ்விருவரும் இடம் பெறுகிறார்கள்.

சமயம் வாய்த்தபோதெல்லாம் இவர்களைப் பற்றிக் கல்கி புகழுரைகளைப் பொழிந்து கொண்டேயிருந்தார். அவை வெவ்வேறு அத்தியாயங்களில் கமழ்கின்றன. இந்த அத்தியாயத்தில் டி.கே.சி.யைப் பற்றியதான ஒரு புகழுரையை மட்டும் பார்ப்போம்:

''தமிழர் பண்பாடு'' என்பதாக ஒன்று இருப்பதாய்ச் சொல்கிறார்கள். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் மக்கள் அறிவிலும் ஒழுக்கத்திலும் வினயத்திலும் படிப்படியாக மேன்மை அடைந்து வந்திருக்கிறார்கள் அல்லவா? அந்தச் சமுதாய மேன்மைக்குத்தான் ''தமிழர் பண்பாடு'' என்று பெயர். அத்தகைய தமிழர் பண்பாட்டை நேரிலே பார்க்க வேண்டும் என்று யாராவது விரும்பினால், ''இதோ பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியாரைக் காட்டி விடலாம்.

(கல்கி இதழ் 20-12-'43)

''பண்பாடு'' என்ற சொல்லை ஆக்கி அளித்தவரே டி.கே.சி.தான். அதற்கு முன்னால், ''கல்சர்'' என்ற ஆங்கில வார்த்தைக்குக் ''கலாசாரம்'' என்பதே மொழிபெயர்ப்புச் சொல்லாகப் புழங்கி வந்தது. ரசிகமணியின் சொல்லைக் கொண்டே அவருக்குக் கல்கி சிறப்பானதொரு புகழ்மாலையைத் தொடுத்து விட்டார்.

பொதுவான தமிழ்ப் பண்பாட்டின் உருவாய் டி.கே.சி. விளங்கினார் என்பது உண்மையே; ஆனால் அந்த உருவிலே தனியான திருநெல்வேலிப் பண்பாட்டின் சாயலும் படிந்திருந்தது. ஒவ்வொரு மாவட்டத்துக்கும் அதனதன் இயற்கைவாசி, வரலாற்றுப் போக்கு போன்ற காரணங்களால் ஒரு தனிப் பண்பாடு உண்டு என்பது போல் திருநெல்வேலிக்கும் உண்டு. அது எவ்விதமானது என்பதைத் தமிழ் அன்பர் க.சி. கமலையா, ''திருநெல்வேலிச் சீமை'' என்னும் கட்டுரை ஒன்றில் விரிவாக எடுத்துச் சொல்லிவிட்டு அந்தப் பண்பாட்டின் உருவகமான டி. கே. சி. பற்றியும் குறிப்பிடுகிறார்:

திருநெல்வேலிச் சீமை மக்களிடம் கவிதைப் பண்பு உண்டு. நாணயத்தைச் சுண்டிப் பார்ப்பது போல் கவிதையை அலசிப் பார்க்கும் திறன் உண்டு. ரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் இதற்கு ஒரு நல்ல சான்று. நல்ல கவிதையை உள்ளம் உருகப் பருகுவார். கவிதை என்ற பெயரில் உலவும் போலியை உதைத்துத் தள்ளுவார். இந்த ஒன்றில் மட்டும் இரக்கம் இல்லாதவர்.

(நமது பண்பாடு நூல்)

நெல்லை நாகரிகத்தின் விளக்கமாய்த் திகழ்ந்த ரசிகமணியைப் பொருநையின் புதல்வர் என்றே வர்ணிக்கலாம். அவருடைய தோழமையினால் பொன்னியின் புதல்வர் தமது தஞ்சைப் பண்பாட்டுடன் நெல்லைப் பண்பாட்டையும் சேர்த்துக் கொண்டார். அந்தச் சங்கமத்தின் புனல் வளத்தில் விளைந்த நற்பயிர்கள் எத்தனையோ! (தொடரும்)





A Record of India's Aspirations

The Times of India Group of Publications has an amazing range of periodicals. Of these, The Illustrated Weekly of India, Femina and Filmfare offer highly stimulating and informative reading.

The Illustrated Weekly of India

is Asia's largest selling pictorial journal. This colourful and provocative weekly covers all areas of human activity - industry, trade, politics, social problems and people.

femina

presents a balanced interpretation of the aspirations of the Indian woman today, her new and challenging role in the development of her country, her day-to-day problems and experiences.

FILMFARE

represents the largest film industry in the world. It reports and analyses new trends and assesses its future. This colourful and scintillating magazine highlights the glamorous personalities, the intrigues and exciting life of moviedom.

THE TIMES OF INDIA PUBLICATIONS

என்னால் முடிந்தது; அவனால் முடியவில்லை!

ஜெயலட்சுமி

சிந்தையில் ஒன்றிப் போயிருந்தார் வாஞ்சிநாதன்.

வடாம் பிழிகிற அச்சைக் கையில் எடுத்துக் கொண்டு அவரருகில் வந்தாள் செண்பகம்.

''தபால்காரர் போயாச்சா?''

''இருக்காது. இன்னிக்குத் திங்கட்கிழமை யாச்சே...! வரத் தாமதமாகும். நீ போய் வேலையைப் பாரு. வந்தால் கொண்டு வந்து கொடுக்கறேன்'' என்றார் வாஞ்சிநாதன் மனைவியின் பக்கம் திரும்பாமலேயே.

''என்ன அதிசயமடி இது! இப்படியா ஒரு பிள்ளை இருக்கும்?'' என்று பொருமிக் கொண்டே உட்பக்கம் சென்று விட்டாள் செண்பகம்.

''பிள்ளை ஐ.ஏ.எஸ். படித்து விட்டுப் பெரிய கலெக்டர் உத்தியோகம் பார்க்கிறதாக நினைப்பு. என்னு மாதா மாதம் ஆயிரக் கணக்கிலே மணியார்டர் வந்து கொண்டிருக்கு பாரு'' என்று உள்ளே மருமகள் மல்லிகா இண்டல் செய்வது இங்கே உட்கார்ந்திருந்த வாஞ்சிநாதனின் காதில் விழுந்தது. அவருக்கு இப் பேச்சைக் கேட்டதும் உடல் மட்டுமல்ல, உள்ளமும் கூனிக் குறுகித்தான் போயிற்று. ஆனால் என்ன செய்வது?

தொடைக்குக் கீழே ஒளித்து வைத்திருந்த கடிதத்தை மீண்டும் எடுத்துப் படித்தார். நெஞ்சம் பதறியது. இந்தக் கடிதம் தரக் கூடிய அதிர்ச்சியைச் செண்பகம் தாங்குவாளா?

பதினேந்து வருடங்களுக்கு முன்பு. நாகராஜனுக்குப் பன்னிரண்டு வயது. முரளிக்கு ஒன்பது வயது. அவருடைய ஒன்றுவிட்ட அண்ணு ராமதுரை திடீரென்று விஜயம் செய்தார். வசதி உள்ளவராதலால் அமர்க்களத்துக்குக் குறைவில்லே. அவருக்குத் தகுந்தபடி விருந்தோம்பல் செய்ய முடியாமல் திக்குமுக்காடினார்கள் வாஞ்சிநாதனும் செண்பகமும். எஸ். எஸ். எல். ஸி. கூட பாஸ் செய்யாமல் ஏதோ ஒரு ஜவுளிக் கடையில் கணக்கு எழுதிக் கொண்டிருப்பவர் வாஞ்சிநாதன். இரண்டு குழந்தைகளையும் மனைவியையும் காப்பாற்ற முடியாமல் தவித்துக் கொண்டிருந்தார். அவரால் எப்படி ராமதுரையைச் சிறப்பாக உபசரிக்க முடியும்?

தம்பியும் அவன் மனைவியும் படுகிற சிரமங்களை ராமதுரை புரிந்து கொண்டிருந்திருக்க வேண்டும். திடீரென்று அந்தக் கேள்வியை அவர் வாஞ்சிநாதனைப் பார்த்துக் கேட்டார்.

''வாஞ்சி! ரொம்பச் சிரமப் படுகிறாய் போலிருக்கிறதேடா?''

''புதிதாக எதுவுமில்லே அண்ணு!'' அசட்டையாகப் பதிலளித்தார் வாஞ்சிநாதன். உண்மையை மற்றவர்களிடம் சொல்லி என்ன பலன் கிடைத்து விடப் போகிறது என்கிற எண்ணம் அவருக்கு.

'பத்தாயிரம் ரூபாய் தருகிறேன். ஒரு சின்ன மளிகைக்கடை வைத்துப்பாரேன். ஒவ்வொருத்தன் எப்படி வாரிக் கொட்டுகிறான்...''

வியப்புடன் ராமதுரையின் முகத்தைப் பார்த்தார் வாஞ்சிநாதன்.

''ஏண்டா, சந்தேகமாகவா இருக்கிறது? கண்டிப்பாகத் தருகிறேன். நீ அதைத் திருப்பிக் கொடுக்க வேண்டாம். முரளியை எனக்கு ஸ்வீகாரம் கொடுத்து விடு. போதும்..''

''அண்ணு!'' தூக்கி வாரிப்போட்டது வாஞ்சிநாதனுக்கு.

''ஏண்டா ... இப்படிப் பதறுகிறாய்? அண்ணன் — தம்பிகள் ஸ்வீகாரம் கொடுத்துக் கொள்வதில்லையா என்ன? உனக்கு விருப்பமில்லையென்றால் வேண்டாம். விட்டு



பணம் பேசுகிறது!



அரபு நாடுகளில் எண்ணெய்க் கிணறுகளின் சொந்தக்காரர்கள் தங்கள் குழந்தைகளுக்கு 'ஒன்று, இரண்டு' என்றுச் சொல்லிக் கொடுப்பார்களா?

'ஒரு மில்லியன், இரண்டு மில்லியன், மூன்று மில்லியன்' என்று ஆரம்பிப்பார்கள்!

[illegible] - பாரி

விடு. இதனால் உனக்கும் நல்லது. எனக்கும் நல்லது என்று எனக்குத் தோன்றியது. அதனால்தான் கேட்டேன்.''

பதில் பேசத் தோன்றாமல் உட்கார்ந்திருந்தார் வாஞ்சிநாதன்.

''எதற்கும் செண்பகத்திடம் கேட்டுப் பாரு!'' ராமதுரை எழுந்து வெளியே சென்று விட்டார்.

''எவ்வளவு தைரியம்? பணம் இருந்து விட்டால் எதை வேண்டுமானாலும் பேசி விடலாம் போலிருக்கிறது!'' உள் அறையிலிருந்து வெளிப்பட்ட செண்பகம் கேட்டாள்.

''என்ன சொல்கிறாய், செண்பகம்?''

''உங்க அண்ணு சொன்னதை யெல்லாம் நானும் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன்.''

''அவர் தப்பாக என்ன சொல்லி விட்டார், செண்பகம்?''

''இன்னும் இதைவிடத் தவறாக என்ன கேட்டுவிட முடியும்? அவரிடம் பணம் இருக்கிறது. நம்மிடம் இல்லை. நாம் கேட்டால் அவர் கொடுத்து விடுவாரா? பணத்தைவிட மட்டமாகப் போச்சா குழந்தைகள்? அதிர்ஷ்டம் வந்தால் பணமும் தானே ஓடி வரும். ஆனால் குழந்தைகள்? பத்து மாதம் சுமந்து பெற்ற என் பிள்ளையைக் கேவலம் காசுக்காகக் கொடுத்து விடுகிற அளவுக்கு எனக்குக் காசாசை இல்லை.'' சரமாரியாகப் பொழிந்து விட்டு உள்ளே போய்விட்டாள் செண்பகம்.

வாஞ்சிநாதனின் உத்தியோகத்தில் படிப்படியாக ஏற்பட்டு வந்துள்ள கூடுதலான வருவாய் இருபது ரூபாய்தான். அதில் எப்படியோ அரைப் பட்டினியும் முழுப்பட்டினியுமாக அவர்கள் காலத்தை ஓட்டி வந்தார்கள். மூத்தவன் நாகராஜன் இருபதாவது வயதில் எஸ். எஸ். எல். ஸி. தேர்வு பெற்றான். வேலை வேட்டை நடத்தினான். ஏதோ ஒரு கம்பெனியில் நூற்றிருபது ரூபாய் சம்பளத்துக்கு வேலை கிடைத்தது. வேலைக்குப் போகத் தொடங்கி ஆறு மாதங்களுக்குள்ளாகக் காதலிக்கக் கற்றுக் கொண்டு விட்டான். கல்யாணம் செய்து வைத்து விட்டார் வாஞ்சிநாதன். இங்கே ஏகாதசி என்றால் அங்கே சிவராத்திரிதான். கேட்கவும் வேண்டுமா? உடுத்தியிருந்த புடவையோடு வந்து சேர்ந்தாள் மருமகள் மல்லிகா.

முரளி பதினாறு வயதிலேயே எஸ். எஸ். எல். ஸி. தேர்வு பெற்றான். அவனைக் கல்லூரியில் சேர்த்துப் படிக்க வைக்க ஆசைப்பட்டாள் செண்பகம். இந்த அழகில் வாஞ்சிநாதனுக்குப் பக்கவாத நோய் வந்துவிட்டது. படுத்த படுக்கையானார். இருந்த வேலையும் போயிற்று. ஜவுளிக் கடை முதலாளி இரக்கப்பட்டு ஐயாயிரம் ரூபாய் கொடுத்தார். செண்பகம் துணிந்து முரளியைக் கல்லூரியில் சேர்த்துவிட்டாள். முரளி பி. ஏ. தேர்வு பெற்றுவிட்டு வேலை தேடிச் சென்னைக்குப் போனான். மருமகள் மல்லிகா இரண்டு குழந்தைகளைப் பெற்றெடுத்தாள்.

'கொடிது, கொடிது; வறுமை கொடிது!' அதனால்தானோ என்னமோ மல்லிகா, கொஞ்சம் கொஞ்சமாக மனிதத் தன்மையிலிருந்து மாறி மிருகத் தன்மைக்கு வந்துவிட்டாள். அவளுக்குக் குடும்பம் என்றால் கணவன்—மனைவி குழந்தைகள் மட்டும்தான் என்பது கொள்கையாகிவிட்டது. மாமியாரும் மாமனாரும் தன் குடும்பத்துக்குத் தேவையற்றவர்கள் என்று தோன்றி விட்டது. அதனால் அவர்களைத் தன் வீட்டிலிருந்து அப்புறப்படுத்த வாய்ச் சொற்களையே ஆயுதமாகக் கொண்டாள். விளைவு...?

வாஞ்சிநாதனுக்கும் செண்பகத்துக்கும் வீடு நரகமாயிற்று. இந்த நரகத்திலிருந்து விடுதலை பெறத் துடித்தார்கள் இருவருமே. அந்த விடுதலை முரளியின் மூலமாகக் கிடைக்கும் என்றும் நம்பினார்கள். 'இன்னமும் வேலை கிடைக்கவில்லை' என்ற செய்தியாவது வந்து கொண்டிருந்தது. அடுத்த இரண்டு மாதங்களில் அதுவும் நின்றுவிட்டது. மகன் பெரிய படிப்புப் படித்திருக்கிறான். சென்னைக்குப் போனவுடனேயே அவனுக்கு வேலை கிடைத்து விடும். உடனே அவன் வீடு பார்த்துவிட்டுத் தங்களை வரச் சொல்லிக் கடிதம் எழுதிவிடுவான். உடனே புறப்பட்டு விடலாம் என்று செண்பகம் நிச்சயமாக நம்பிக் கொண்டிருந்தாள். ஒவ்வொருநாளும் அப்படியொரு கடிதத்தை முரளியிடமிருந்து எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தாள். நாட்களும் விரைந்து கொண்டேயிருந்தன. ஆனால் கடிதம் மட்டும் வரவேயில்லை.

ஆறு மாதங்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த முரளியின் கடிதம் இன்று வந்து விட்டது. நல்ல காலம், அது வாஞ்சிநாதனின் கையில் கிடைத்தது. அதைத்தான் அவர் எவ்வளவு ஆவலோடு பிரித்தார்! படித்தார் ! ஆனால் அதிலிருந்த வாசகம் ?

'செண்பகத்தினால் . இந்த அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ளவே முடியாது' என்று தோன்றவே ஒளித்து வைத்தார்.

மதியத் தூக்கம் கலைந்து அவர் கண்களைத் திறந்தபோது அவர் வைத்த இடத்தில் முரளியின் கடிதம் இல்லை.

மறு நாள் காலை. சில நூறு ரூபாய் நோட்டுக்களைக் கணவரின் கையில் கொடுத்தாள் செண்பகம். எத்தநாளிலோ ஓர் அவசரத்துக்கு இருக்கட்டும் என்று சேமித்து வைத்த பணம்.

''எதற்கு, செண்பகம்?''

''சென்னைக்கு இரண்டு டிக்கெட் வாங்கி நம்மை இன்னைக்கு ரயிலேற்றி விட்டு விடும்படி கோடி வீட்டு வேம்புகிட்டே சொல்லி யிருக்கேன் !''


பெண்மைக்குரிய மென்மையுடனும்
நறு மணத்துடனும் திகழுங்கள்
புதிய பெடல் ஷவர்—
அன்றலர்ந்த வசந்த மலரின்
அருமையான நறு மணமும்,
மென்மையும் கூடிய டால்க்.
COLGATE
Petal Shower
புதிய
பெடல் ஷவர் மட்டுமே
இவ்வளவு
குறைவில்
நறுமணங்கமழும்
மென்மையைத்
தருகிறது.

PST G.I TM

''என்ன உளர்றே? உனக்கு என்ன பைத்தியமா பிடிச்சிருக்கு ?''

''இது வரைக்கும் பிடிக்கலே. இனி மேலும் பிடிக்காமல் இருக்கிறதுக்குத்தான் சென்னைக்குப் போகிறோம்.''

''முரளியோட கடிதாசைப் படிச்சுட்டே போலேயிருக்கே !''

''ஆமாம். குளத்தங்கரைக்குப் போறப்போ தபால்காரரைப் பார்த்தேன். உங்களிடம் ஒரு கடிதாசு கொடுத்ததாகச் சொன்னர். சாலப்பிறையிலிருந்து எடுத்துப் படிச்சேன்.''

'' அதுக்கப்புறம்கூடவா சென்னைக்குப் போகலாம் என்கிறாய் ?''

'' சென்னை அவனுக்கு மட்டும்தான் சொந்தமா ? அவன் அழைச்சால்தான் போகணுமா ?''

''எங்கே போறது ?''

''இதோ.... இந்த விலாசத்துக்குப் போகணும்'' என்று கூறிச் செண்பகம் ஒரு துண்டுக் காகிதத்தை அவரிடம் நீட்டினள்.

''இது.... இது... யாரு...புரியலையே?''

''பெரிய பண்ணை வீட்டு ஜானகியோட மாமா !''

''அவர்கள் வீட்டுக்குப் போய்?''

''வேலை பார்க்கப் போகிறேன்.''

''வேலையா? நீயா? உனக்கு என்ன தெரியும் ?''

''எனக்கு ஒண்ணுமே தெரியாதா ?''

''நன்ருகச் சமையல் பண்ணுவே!''

'' அதைத்தான் செய்யப் போகிறேன், அங்கே போய் ! யார் கேட்டாலும், 'முரளி உடனே புறப்பட்டு வரச் சொல்லி எழுதியிருக்கான்'னு சொல்லுங்கோ.''

ரயில் சென்னையை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. குழந்தை மாதிரி ஜன்னல் அருகில் உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள் செண்பகம்.

'' செண்பகம் !''

''என்ன?''

''புரியாமல்தான் கேட்கிறேன். முரளியின் கடிதாசைப் படிச்சதும் உனக்குக் கொஞ்சம்கூட வருத்தமாயில்லையா ?''

'' அதெப்படி இல்லாமல் இருக்கும் ?''

'' இவ்வளவு அமைதியா உன்னுலே எப்படி இருக்க முடிஞ்சுது ? அன்னைக்கு எங்க அண்ணு அவனை சுவிகாரம் கேட்டபோது எத்தனை கோபம் வந்தது உனக்கு ? அதே பிள்ளையைத்தானே இன்னைக்கு ஒருத்தி உன்னைக் கேட்காமலே உன்னிடமிருந்து பறிச்சுண்டுட்டாள்? இப்போ உனக்கு வருத்தமா இல்லையா ?''

''இருக்குதான். ஆனல் இதுலே என் குற்றம் எதுவும் இல்லையே ! நான் காசுக்காக என் பிள்ளையைத் தாரை வார்த்துக் கொடுத்துவிடவில்லையே. வறுமையைக் கண்டு நான் பயப்படலே. காசைக் கண்டு மயங்கிடவும் இல்லே. அது -என்னுலே முடிஞ்சுது. அவனுலே அது முடியலே. அவன்தான் கோழை. வெட்கப்பட வேண்டியதும் வருத்தப்பட வேண்டியதும் அவன்தான். நாமல்ல, அவன் எந்த மதத்துக்கு வேண்டுமானுலும் போய்க்கட்டுமே ! பத்து மாசம் சுமந்து, பெத்தது நானில்லேன்னு ஆயிடுமா? அந்த உரிமையை யாராலும் தட்டிப் பறிக்க முடியாது இல்லையா? எனக்கு அது போதும்'' என்ற செண்பகம் புடவைத் தலைப்பால் கண்களில் கசிந்த ஈரத்தைத் துடைத்தாள்.

''அந்தக் கடிதாசியை எங்கே வைச்சிருக்கே ?

''எங்கேயும் வைக்கலே. இழிச்சு வெந்நீர் அடுப்பிலே போட்டுட்டேன்.''

'' ஏன்?''

''யார் கண்ணிலேயும் பட்டுவிட வேண்டாம்னுதான். ஊர் வாய் சும்மாயிருக்காது. பெரியவனைத் தூத்தும். எதுக்கு அப்படி...?''

வியப்பில் வாஞ்சிநாதன் பேசவில்லே.

ரயில் வேகமாகச் சென்று கொண்டிருந்தது.

அந்த இடம்தான் !

யமுனை நதிக் கரையோரம். ஒரு புகழ்பெற்ற சீக்கிய குரு. ஒரு பாறையின் மீது அமர்ந்த வண்ணம் சமய நூலொன்றில் மூழ்கி யிருந்தார். அவருடைய சீடன் ரகுநாதன் பணம் படைத்தவன். அவன் அவருக்காக ஒரு பரிசைக் கொணர்ந்து, ''என்னுடைய இந்தச் சாதாரணமான அன்பளிப்பை குருவே தங்கள் மனம் ஒப்புக்கொள்ளாதென்றே நினைக்கிறேன்'' என்ருன், தயக்கத்துடன். அப்புறம் தான் கொண்டு வந்த ஒரு ஜோடித் தங்க வளையல்களை அவருக்கு முன்பாகப் பிரித்துக் காட்டினன். குரு ஒரு வளையலை எடுத்துப் பார்க்கும்போது, அதில் பதிக்கப்பட்டிருந்த விலையுயர்ந்த கற்கள் ஜொலித்து மின்னின. அந்தக் கணம், அவர் கையில் சுழன்றுகொண்டிருந்த தங்க வளையல் நழுவி, நீருக்குள் விழுந்து மறைந்தது. அதிர்ச்சியடைந்த ரகுநாதன் சட்டென்று தண்ணிருக்குள் குதித்தான். குரு மறுபடியும் அமைதியாகப் புத்தகத்தில் மூழ்க ஆரம்பித்தார். நீருக்குள் மூழ்கிய வளையல் தண்ணீரோடு கலந்து எங்கோ சென்று விட்டது. வெகு நேரம் கழித்து வெளியே சொட்டச் சொட்ட நனைந்தவனுகக் களைப்புடன் வந்தான், ரகுநாதன். ''குரு! அந்த வளையல் எந்த இடத்தில் விழுந்ததென்று தாங்கள் சொன்னுல் அதை என்னுல் இப்பொழுதே தேடி எடுக்க முடியும்...'' என்ருன் பணிவோடு. குரு, அவன் கொண்டுவந்த இன்னொரு தங்க வளையலையும் எடுத்து ஆற்றில் வீசி எறிந்து, ''அதோ அந்த இடம்தான்'' என்ருர்.



ரவீந்திரநாத் தாகூர் எழுதிய 'Fruit gathering' என்ற நூலிலிருந்து.

உதகை நா. மனோகரன்.

மனதில் மலர்ந்திருப்பவள்



10-4-75, 1-வது வருஷாப்திகம்
எண்ணிறைந்த மேன்மை படைத்து எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்க் கண்ணிறைந்த ஜோதியாய் — அன்புடனும் பண்புடனும் மகிழ்வித்த

இனிய

யோகாம்பாள்

R. D. ராஜன்
ராம்ஜி, திலக், குமார், லதா
பம்பாய்

காட்சி 21

(மாசிலாமணி வீடு. பாத்திரங்கள்: மாசிலாமணி, தாமஸ், ஆரோக்கியசாமி, ஃபாதர் அருமைநாயகம்.)

மாசிலாமணி (உரத்த குரலில்): பேசாதே. அயோக்யா! என்னடா நினைச்சே நீ? இவனை அழைச்சுட்டுப் போயிடலாம்னு பார்க்கிறியா? பிசாசு, போடா வெளியிலே!

ஆரோக்கியசாமி: நான் உங்களுக்குப் பணம் தரேன்னு சொல்லலே. உங்களைப்பற்றி ஊர்லே நல்லா விசாரிச்சுக்கிட்டுத்தான் வந்தேன். நீங்க கட்டற கோயிலுக்குப் பணம் தரேன்னுதான் சொன்னேன்.

மாசி: தரித்திரமே! சனியனே! உங்கிட்ட பணம் வாங்கிக் கோயில் கட்டினா, கோவில் இடிஞ்சு என் தலை மேலேயே விழுந்திடும்! பாதிரியாரைப் பத்தி எங்கிட்டே வந்து பொய் பேசறியே. உன் நாக்கை அப்படியே துண்டு துண்டாய் வெட்டிப் போடுவேன். போடா வெளியிலே!

ஏறுமயிலேறி விளையாடு முகமொன்று
வாடா தியாகராஜா! (ஆரோக்கியசாமியைப் பார்த்து) நீ போடா!
ஈசருடன் ஞானமொழி பேசு முகமொன்று
டேய், தியாகராஜா! பயப்படாம வாடா! (ஆரோக்கியசாமியைப் பார்த்து) உன் கையை வெட்டிப்புடுவேன்! சீ, தூ! உன் பணமும் நீயும் நாசமாய்ப் போக!
கூறுமடியார்கள் வினை தீர்க்கும் முகமொன்று
வாடா தியாகராஜா!

(அவன் அவரை நெருங்கி அவர் தரும் விபூதியை வாங்கிக் கொஞ்சம் இட்டுக் கொள்கிறான்.)

குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகமொன்று

ஆரோ: ஸார்... இவன்....

மாசி: பேசினே கொன்னுப்புடுவேன்!

மாறுபடு சூரரை வதைத்த முகமொன்று...

ஆரோ: இவன் தாமஸ் தியாகராஜன். மதம் மாறிய கிறிஸ்டியன். உங்களை இவன் ஏமாத்தியிருக்கணும்னு நினைக்கிறேன்.

மாசி (தழுதழுத்த குரலில்): நிஜமாகவா?

ஆரோ: தாமஸ்! பாதிரியார் மேல் சத்தியமா இவருக்குப் பதில் சொல்லு!

தாமஸ்: ஆமாங்க, என் பேர் தாமஸ் தியாகராஜன்.

மாசி: தாமஸ் தியாகராஜன் இல்லே?

தாமஸ்: நீங்க அப்படி நினைச்சுட்டீங்க. மதம் மாறினவனைக் கண்டா வெட்டிப் போட்டுடுவேன்னு சொன்னீங்க. நான் மதம் மாறினவன். எங்கே எனக்கு இடம் கொடுக்க மாட்டீங்களோன்னு பயந்துதான் உண்மையை மறைச்சுட்டேன்.

மாசி: அவரு... பாதிரியார் கூட உண்மையைச் சொல்லவில்லையே!

தாமஸ்: அவர் சொல்ல வந்தார். நீங்க அவரைப் பேச விடாம அவசரமா ரயிலைப் பிடிக்கப் போயிட்டீங்க.

மாசி: என்ன அவசரமா இருந்தா என்ன? சொல்லி யிருக்க முடியாதா? பாதிரியார் உண்மையை மறைச்சுட்டார். முருகா! நான் என்ன செய்வேன்? இந்த உலகத்திலேயே உனக்கப்புறம் நான் நம்பினது அந்தப் பாதிரியாரைத்தானே. இனிமே நான் யாரைடா நம்புவேன்? அவரே உண்மையை மறைச்சுட்டாரே! டேய், நீ என்னை ஏமாத்தினதைப் பத்தி நான் வருத்தப்படலே. அந்தப் பாதிரியார் ஏமாத்திட்டாரே! முருகா! ஷண்முகா! என்னை யாரும் ஏமாத்தலே. உன்னைத்தான்டா ஏமாத்திட்டாங்க. உங்கிட்டத்தான் பொய் சொல்லிட்டாங்க. பாதிரியார் வந்து உண்மையை மறைச்சுட்ட இடமாப் போச்சே இது. முருகா! உன் படம்தான் இங்கே இருக்கு. நீ இல்லே. எப்போ அந்தப்பாதிரியார் உண்மையை இங்கே மறைச்சுட்டாரோ அப்பவே நீ இந்த இடத்தை விட்டுப் போயிட்டேன்னு எனக்குத் தெரியும். நமசிவாயம்! அந்தக் கோவத்திலே இந்த அயோக்யனை எமதர்மன் மாதிரி என்கிட்ட அனுப்பிச்சியா? உன் இஷ்டம்! நடக்கிறது நடக்கட்டும். நான் இனிமே இங்கே இருக்க மாட்டேன். நான் முருகனைத் தேடிப் போறேன்.

ஆறுமுகமான பொருள் நீ அருள் வேண்டும்.



ஆதிஅருணாசலம் அமர்ந்த பெருமானே!

(அழுதபடியே வெளியே ஓடுகிறார்.)

ஆரோ: உம்.... வா!

தாமஸ்: போலீஸ்லே மாட்டிக்க நான் பயப்படலே ஸார். ஒரு நல்ல மனுஷன் என்னாலே இவ்வளவு வேதனைப்பட்டுக்கிட்டுப் போறாரே, அதை நினைச்சு வருத்தப்படறேன். இன்னொரு நல்ல மனுஷனை இவர் சந்தேகப்பட நான் காரணமாயிட்டேனே, அதை நினைச்சு வருத்தப்படறேன்.

ஆரோ: உம், வா! ஏதாவது திமிறினா என் கிட்ட பிஸ்டல் இருக்குது!

தாமஸ்: வாங்க ஸார். உங்க பிஸ்டல் என்னை என்ன செய்யும்? நான் ஏற்கெனவே செத்துட்டேனே!



''முருகா! ஷண்முகா! என்னே எல்லாரும் ஏமாத் தலே. உன்னேத்தான்டா ஏமாத்திட்டாங்க! உன்கிட்டத் தான் பொய் சொல்லிட்டாங்க!''



''அவருடைய பக்தி நெறி, மூட நம்பிக்கை, உண்மை வெறி-இதை யெல்லாம் கொடுத்தே அவரை விலைக்கு வாங்கிட்டேன்!''

(ஆரோக்கியசாமி அவனைப் பிடித்து இழுத்துக் கொண்டு புறப்படும் சமயம் அருமைநாயகம் வருகிறார்.)

அரு: ஆரோக்கியசாமி! எப்படி இவனே... தாமஸ்! மாசிலாமணி இல்லேயா? அந்தச்சமயத்திலே இவர் வந்து...

தாம: அவர்தான் நம்ம மேலே சந்தேகப் பட்டு இவர் கிட்ட என்னே ஒப்படைச்சுட்டார், ஸார்!

ஆரோ: எஸ்... இந்த வியாபாரத்தையும் முடிச்சுட்டேன். எதுக்குமே ஒரு விலே உண்டு. அந்தப் பக்தருக்கும் ஒரு விலே இருந்தது.

அரு: தோமஸைப் பணம் கொடுத்து வாங்கி னீங்க. வக்கீலைப் பதவியைக் கொடுத்து வாங்கினீங்க. இவரை, இந்தப் பக்தரை என்ன கொடுத்து வாங்கினீங்க?

ஆரோ: அவருடைய பக்தி வெறி, மூட நம்பிக்கை உண்மைநெறி — இதையெல்லாம் கொடுத்தே வாங்கிட்டேன். எதிர்பார்த்தை விட சல்லிசா வியாபாரம் முடிஞ்சிருக்கு.

தாமஸ்: நான் மதம் மாறினவன்னு அவர் கிட்டச் சொல்லிட்டார். நாம ரெண்டு பேரும் பொய் சொன்னதா அவர் நினேச்சு வெறுத்துப் போயிட்டார், ஃபாதர்!

ஆரோ: கரெக்ட்! எல்லோரையும் நான் வாங்கிட்டேன், மிஸ்டர் அருமை நாயகம்! ரெக்கார்ட்ஸ் அடங்கிய என் பெட்டியைக் கொடுக்கிறீங்களா?

(அருமைநாயகம் சாட்சியங்கள் அடங்கிய பெட்டியை ஆரோக்கியசாமியிடம் கொடுக் கிறார்.)

ஆரோ: தாங்க்யூ. நான் ஜெயிச்சுட்டேன் மிஸ்டர் அருமைநாயகம்! ஜெயிச்சுட்டேன்! நான் இப்ப பெருந்தன்மையையும், கௌரவத்தையும் விலைக்கு வாங்கப் போறேன். நீங்க சொல்லீங்களே அந்தக் கௌரவத்தைத் தான்! இவனேக் கொடுத்து அதை வாங்கப் போறேன்.

அரு: இவனேப் போலீஸிலே ஒப்படைக் கறதுலே உங்களுக்குக் கௌரவம் வந்துடுமா?

ஆரோ: வராது. நிச்சயமா வராது. அத னுலேதான் இவனே பிஷப்பிடம் ஒப்படைக்கப் போறேன். பிஷப்பைப் பார்த்து 'மைலார்ட்! நம்ம ப்ரீஸ்ட் ஒருத்தராலே தப்பிச்ச குற்ற வாளியை நம்ம சர்ச்சே கண்டுபிடிக்கக் கொடுத்தா நம்ம சர்ச்சுக்கு நல்ல பேர் கிடைக்கும். அதனுலே இவனே நான் பிடிச் சதா யாருக்கும் தெரிய வேண்டாம். நீங்க பிடிச்சுக் கொடுத்ததா இருக்கட்டும்'னு சொல்லப் போறேன். பெருந்தன்மை வருமா, வராதா?

அரு: ஹிஸ் லார்ட்ஷிப் பிஷப் மட்டும் உங்களேப் பத்தி உயர்வா நினேச்சா போதுமா?

ஆரோ: போதாது. நான் இந்த மாதிரி செய்தேன்னு வெளியிலே எல்லோருக்கும் தெரியணும். அதனுலே போகும்போதே நியூஸ் பேப்பர்களுக்கெல்லாம் சொல்லிடு வேன். நாளைக்கே செய்திகள் வரும். ''ஆரோக்கிய சாமி குற்றவாளியைப் பிடித்தும் தாமே போலீஸிடம் ஒப்படைக்காமல் பிஷப்பிடம் ஒப்படைத்து விட்டார். தாம் கண்டுபிடித்ததாகத் தெரிய வேண்டாம். சர்ச்சுக்கே அந்தப் பெருமை சேரட்டும் என்றும் கூறிவிட்டார். இவரல்லவோ பெருந்தன்மையானவர்!'' எப்படி நியூஸ்? பிஷப்கிட்டேயும் பேர். மக்கள்கிட்டேயும் நல்ல பேர். பெருந்தன்மையையும் கௌரவத்தையும் வாங்கப் போறேன்னு ஒத்துக்கிறீங்களா?

அரு: எஸ். ஒத்துக்க வேண்டிய நிலைமையிலேதான் நான் இருக்கேன். ஆனாலும் இன்னமும் சொல்றேன், உங்களாலே உண்மையை விலைக்கு வாங்க முடியாது.

ஆரோ: நான்தான் எல்லோரையும் வாங்கிட்டேனே?

அரு: என்னை வாங்கலியே? உண்மையை நிரூபிக்க இன்னமும் நான் முயல்வேன்!

ஆரோ: நான் உங்களை வாங்கல்லேன்னு ஒத்துக்கிறேன். ஏன் வாங்கல தெரியுமா? ஏன்னு, இப்ப நீங்க தேவையில்லாத பொருள். கொசுறு! நான் பெரிய லெவல்லே வியாபாரம் பண்றவன். கொசுறு எனக்குத் தேவையில்லே.

கெட்டுடக் கூடாதுன்றதுக்காக எவ்வளவோ பாடு பட்டிருக்கீங்க.

ஆரோக்கியசாமி: மை லார்ட்! இட் ஈஸ் நத்திங். சர்ச்சுக்கு என் கடமையைத்தான் செய்துக்கிட்டிருக்கேன்.

பிஷப்: நீங்கதான் இவனைப் பிடிச்சுக் கொடுத்தீங்கன்னு போலீஸுக்குக் கூடச் சொல்ல வேண்டாம்னு சொன்னீங்களே, அதைத்தான் என்னுலே ஒத்துக்க முடியலே.

''ஆத்திரத்திலே சாமின்னு கூடப் பார்க்காமே ஆரோக்கியசாமி என்னைக் கட்டிட்டார்.''





காட்சி 22

(பிஷப் இடம். பாத்திரங்கள்: பிஷப், அருமைநாயகம், தாமஸ், ஆரோக்கியசாமி, வெங்கட்.)

பிஷப்: உங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுனே தெரியலே. சர்ச்சுக்கும், கிறிஸ்டியானிட்டிக்கும் இருக்கிற நல்ல பெயர்

''இதைச் சொல்லி நீ விழிக்கிறதைப் பார்க்கணும்னு நினைச்சேன். பார்த்துட்டேன். திருப்தியாயிருக்கு!''

போலீஸாரிடம் நான் உண்மையைச் சொல்லித்தான் ஆகணும்.

ஆரோ: மை லார்ட்! உங்க இஷ்டம்.

பிஷப்: அடடா! எத்தனை பெரிய மனசு உங்களுக்கு!

ஆரோ: உங்க ஆசீர்வாதம்தான் காரணம். ஆண்டவனின் ஓர் எளிய ஊழியன் நான்!

தாமஸ்: என்னைப் போலீஸிலே ஒப்படைக்கறதுக்கு முன்னுலே நான் ஒரே ஒரு தடவை கடவுள் கிட்டே பிரார்த்தனை பண்ணிக்க அனுமதி கொடுப்பீங்களா?

பிஷப்: கடவுள் தான் உன்னை மன்னிக்கணும்.

பிரார்த்தனை பண்ணு; உன் பாவங்களையும், ஆண்டவனிடம் ஒப்புக்கொள்.

ஆரோ: மை லார்ட்! நான் புறப் படட்டுமா?

பிஷப்: காட் பிளெஸ் யூ!

(அவர் தாமஸுடன் உள்ளே போக, ஆரோக் கியசாமி வெளியே செல்லத் திரும்புகிறார். அப்போது வெங்கட் வருகிறான்.)

வெங்: மிஸ்டர்! உங்களைத்தான் தேடிக் கிட்டிருக்கேன். வெளியிலே கார் நின்னது. அதனாலேதான் நீங்க இருப்பீங்கன்னு வந் தேன். இந்த வெங்கட்டை அலட்சியப் படுத்தினீங்க. நல்லா மாட்டிக்கிட்டீங்க.

ஆரோ: என்ன சொல்றே நீ? மிரட்டறியா? நீ போலீஸ்லே போய் என்ன சொன்னாலும் யாரும் உன்னை நம்ப மாட்டாங்க. இடியட்!

வெங்: ம்... போலீஸ்லே போய் நான் ஏன் சொல்றேன்? டேப் ரிக்கார்டர், போடோ வின் லெட்டர் எல்லாம் போலீஸ் கிட்டே பேசும்!

ஆரோ: அதெல்லாத்தையும்தான் உங் கப்பா என்கிட்டக் கொடுத்திட்டாரே?

வெங்: அங்கேதான் நீங்க ஏமாந்தீங்க! உங்க கிட்டக் கொடுத்தது எல்லாம் நகல்கள். ஒரிஜினல் இல்லே தெரியுமா?

ஆரோ: என்னது?

வெங்: எங்கப்பாவுக்கே தெரியாதே! உனக் கெப்படித் தெரியும்? நீங்க என் கிட்ட கேட்ட துலே சரி. ரமாவைக் கல்யாணம் பண்ணி வெச்சுடுவீங்கன்னு நம்பி, அன்னிக்கு ராத் திரி மூணு மணி வரைக்கும் கண் விழிச்சு எல்லாத்துக்கும் காப்பி எடுத்தேன். டேப் ரிக்கார்டிங்கையும் டேப்லே காப்பி எடுத்தேன்.

ஆரோ: அப்புறம்!

வெங்: எங்கப்பாவுக்குத் தெரிஞ்சா வம் பாப் போயிடும்னு நகல்களை யெல்லாம் இந்தப் பெட்டியிலே வெச்சு, இரும்புப் பீரோ விலே வெச்சுட்டேன். ஒரிஜினல் எல்லாம் நான் வெச்சுகிட்டேன். நீங்க ரமாவை எனக் குக் கல்யாணம் பண்ணி வைச்சவுடனே உங்ககிட்ட கொடுத்திடலாம்னு நினைச் சேன். நீங்க என்னடான்னா எங்கப்பாவையே விலைக்கு வாங்கிட்டீங்க. நான்தான் விலைக்கு வரேன்னு சொன்னேனேல்லியோ? ஏன் ஸார் எங்கப்பாவை விலைக்கு வாங்கினீங்க? இப்ப முழிக்கிறீங்க.

ஆரோ: அப்போ இதெல்லாம் நகல்கள் தானா? அசல் சாட்சியங்களை எங்கே வைச் சிருக்கே?

வெங்: ஃபாதர் அருமைநாயகத்திடம் கொடுத்துட்டேன். ரமாவுக்குத்தான் கல் யாணம் ஆயிடுத்தே! இட் ஈஸ் ஆல் ஓவர்! என்னை ஏமாத்தின உங்களைப் பழிவாங்க ஃபாதர் கிட்டே அதையெல்லாம் கொடுத் துட்டேன்! அவரு அவற்றை எடுத்துக்கிட்டு இங்கேதான் வந்துக்கிட்டிருக்கார். உங்க மானம் கப்பலேறப் போவுது. நல்லா வேணும்! இதைச் சொல்லி நீங்க விழிக் கிறதைப் பார்க்கணும்னு நினைச்சேன். இப்ப திருப்தியா யிருக்கு. நன்னு முழி! போ! சாவு!

(வெங்கட் போகிறான். ஆரோக்கியசாமியும் அவசரமாகக் கிளம்புகிறார். பிஷப், தாமஸை அழைத்துக் கொண்டு உள்ளே யிருந்து வருகிறார். அப்போது துப்பாக்கி வெடிக்கும் சத்தம் கேட்கிறது.)

பிஷப்: உம்... வா... போலீஸுக்குப் போகலாம்.

தாம: நான் தயார்தாங்க.

(அருமைநாயகம் தள்ளாடி வருகிறார்.)

தாம: ஃபாதர்! உங்களுக்கு என்ன? ஏன் இப்படி?

அருமைநாயகம்: நான் சொல்றதை முதல்லே சொல்லிடறேன். குறுக்கே பேசா தீங்க.... ப்ளீஸ்... இந்தப் பொட்டலத்திலே ஒரிஜினல் சாட்சியங்கள் எல்லாம் இருக்குது... வெங்கட் கொடுத்தான்... ஆரோக்கியசாமி கிட்டே இருக்கிறது காப்பிதான்... இது தான் ஒரிஜினல்... தாமஸ்! இதை வெச் சுக்கோ... உண்மையை இதை வெச்சு நிரூ பிச்சுடு. நீ நிரபராதின்னு நிரூபணம் ஆயிடும். தாமஸ்... மை லார்ட்! நான் உண்மைக்காக உழைச்சேன்னு இனிமே உங்களுக்குப் புரிஞ் சுடும்.

தாம: ஏன் இப்படிச் சொல்றீங்க?

அரு: நான் இங்கே வர்றபோது வாசல்லே ஆரோக்கியசாமி என்கிட்டேயிருந்து இதைப் பிடுங்கப் பார்த்தார். நான் கொடுக்கலே. ஓடி வந்தேன்.... சுட்டுட்டார். ஆத்திரத்திலே சாலைன்னு கூடப் பார்க்காமச் சுட்டுட்டார். ஜனங்கள் எல்லாம் அவரைப் பிடிச்சுட் டாங்க. கான்ஸ்டபிள் ஒருத்தர் கிட்டே ஒப்படைச்சுட்டாங்க. பாவம் ஆரோக்கிய சாமி... நீ வாஸ் நாட் ஸச் எ பேட் மேன். கடவுள் அவரை மன்னிப்பார்... லார்ட்! ப்ளீஸ் ஃபார்கிவ் தட் மேன்!

(கீழே இறந்து விழுகிறார். ஆரோக்கியசாமி யைச் சிலர் பிடித்து வருகிறார்கள்.)

பிஷப்: தாமஸ்! இவரைப் போய்த் தப்பா நினைச்சுட்டேனே! வாட் எ ஷேம்! தாமஸ்! உண்மைக்கு விலையே கிடையாதுன்னு இவர் தம் வாழ்க்கையிலே நிரூபிச்சுக் காட்டிட் டார்!

தாம: இல்லீங்க... உண்மைக்கும் ஒரு விலை உண்டுன்னுதான் நிரூபிச்சிருக்கார். உண்மை யின் விலை ஒரு நல்ல மனிதனுடைய உயிர்!

பிஷப்: தாமஸ்! கொஞ்சம் இரு. என் மனசைத் தெத்திக்கவும் அறியாமையினாலும் அவசரத்தினாலேயும் நான் செய்த பாவத்தை ஆண்டவன் மன்னிக்கவும், நான் இப்ப ஒரு காரியம் செய்யணும்: கொஞ்சம் இரு.

(உள்ளே போனவர் முன்பு அருமைநாயகம் கழற்றித் தந்த பாதிரியார் உடைகளுடன் திரும்பி வருகிறார்.)

ஃபாதர்! இதை அணிய உங்களுக்கு எல் லாத் தகுதியும் உண்டு.

(உடையை அருமைநாயகத்தின் மேல் போர்த் தக் குனிந்தவர் நிமிர்ந்து நிற்கிறார்.)

இல்லே. இல்லே... இதைவிட அதிகமாகவே உங்களுக்குத் தகுதி உண்டு!

(தம்முடைய பிஷப் பட்டையையும் ஜபமாலை யையும் தொப்பியையும் கழற்றி அருமை நாயகத்தின் உடல்மீது வைக்கிறார்.)

மை லார்ட்! யூ டிஸர்வ் திஸ், மை லார்ட்!

(முற்றும்)

வட்ட மேஜை

தேவநாகரி ஸௌராஷ்டிரர்களின் சொந்த எழுத்து! என்ன அபத்தமான பேச்சு!

தமிழ் மொழியின் வரி வடிவம் தமிழ். தெலுங்கு மொழியின் வரிவடிவம் தெலுங்கு. மலையாள மொழியின் வரிவடிவம் மலையாளம். வங்காள மொழியின் வரிவடிவம் வங்காளம். ஸௌராஷ்ட்ர மொழியின் வரி வடிவம் ஸௌராஷ்டிரம்தான். தேவநாகரி இந்தியாவின் பொதுச் சொத்து. ஏன், ஆசியாவின் பொதுச் சொத்தும் ஆகலாம். எந்த மொழியினரும் தேவநாகரியினைக் கையாளலாம். எழுத்தே இல்லாத மொழியினருக்குத் தேவநாகரி ஒரு வரப்பிரசாதம். இதனை உணராது தேவநாகரி எந்தன் சொத்து என விளம்புவது பேராசையிலும் பேராசை. கொப்ளான் லெஷ்வனுக்கு இந்த ஆசை வேண்டாமே!

மதுரை—1
14—3—75 டி.வி. குபேந்திரன்

(இது சம்பந்தமான விவாதம் இத்துடன் முற்றுப் பெறுகிறது. ஆர்.)

வேலூர் ஆஸ்பத்திரி பற்றிய 'கார்ட்டூன்' சித்திரமும் தங்கள் தலையங்கமும் வரவேற்கத் தக்கவை. தமிழக மந்திரிகள் அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் எந்தச் சிக்கலுமின்றி செல்ல முடிகிறது. என்னைப் போல் நடுத்தரக் குடும்பஸ்தனுக்கு மதராஸில் கிடைக்காத சிகிச்சை வேலூரில்தான் கிடைக்கிறது. இந்த ஆஸ்பத்திரியை வேறு மாநிலத்துக்குப் போகலாம் என்று சொல்வது தரக் குறைவான பேச்சு.


சென்னை—17
21—3—75 ராமச்சந்திரன்

சென்ற 23-3-75 இதழில் தாடா சுப்பிரமணியம் அவர்களின் ''ஒரு நாள் கழிகிறது'' கதையே அல்ல. தமிழ் நாட்டில் தறி செய்யும் ஒவ்வொரு நெசவாளியும் ஒரு நாளை எப்படிக் கழிக்கிறான் என்பதை உள்ளங்கை நெல்லிக் கனி எனக் காட்டியிருக்கிறார். திரு தாடா சுப்பிரமணியத்துக்கும் தரமான கதைகளை வெளியிடும் கல்கிக்கும் பாராட்டு.

குருசாமி பாளையம்
21—3—75 எஸ். ஏ. அங்கமுத்து

கடந்த 18—3—75 செவ்வாய்க்கிழமையன்று நான் எனது வேலை முடிந்து (பகல் இரண்டு மணி முதல் இரவு பத்து மணி வரையிலான இரண்டாவது ஷிப்ட் வேலை) வீடு திரும்புகையில் இரவு 10:15 மணி சுமாருக்கு அண்ணாதுரை சமாதி பக்கம் வந்து கொண்டிருந்தேன். சுமார் நாற்பது சிறுவர்கள் கையில் அவரவருடைய பைகளைச் சுமந்து கொண்டும் கண்களிலே தூக்கக் கலக்கத்துடனும் அண்ணாதுரை சமாதியைச் சுற்றிப் பார்க்க உள்ளே நுழைந்து கொண்டிருந்தனர். சிறுவர்களுக்கு வழிகாட்டியாக இரண்டு மூன்று ஆசிரியர்கள் சென்றனர். சென்ற சிறுவர்கள் ஏழு வயது முதல் பத்து வயது வரை உள்ளவர்கள். சிறுவர்கள் நன்றாகத் தூங்க வேண்டிய நேரத்திலா அண்ணா சமாதியைச் சுற்றிக் காண்பிக்க வேண்டும்? அந்த ஆசிரியர்களிடம் நாங்கள் இதுபற்றிக் கேட்டபோது, ஒருவருமே சரியான பதில் சொல்லவில்லை.

சென்னை — 5
22-3-75 மணக்கால் எஸ்.லக்ஷ்மிநாராயணன்



மஹா கும்பாபிஷேகம்


நூற்றெட்டு வைணவ திருப்பதிகளுள் ஒன்றும், ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பட்ட திவ்விய ஸ்தலமுமான திருவல்லிக்கேணியில் கோயில் கொண்டுள்ள ஸ்ரீபார்த்தசாரதிப் பெருமாளுக்கு, சம்ப்ரோக்ஷணமும், புனித கும்பாபிஷேகமும் 23—3—75 அன்று அதிவிமரிசையாக நடந்தேறின. பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடி மஹா கும்பாபிஷேக வைபவத்தைக் கண்டு மகிழ்ந்தனர். வேதகோஷங்களும், திருவாய்மொழிப் பாடல்களும் ஒருபுறம் முழங்க, மறுபுறம் 'கோவிந்தா' என்னும் பக்தர்களின் கோஷம் எழ, திருவல்லிக்கேணி தெய்வீகக் களையோடு விளங்கியது.

பேட்டை பிரகஸ்பதி ஸ்ரீராகவபட்டர் மூலஸ்தானப் பெருமாளுக்கு, சம்ப்ரோக்ஷணம் செய்து ஆராதன நிவேதனங்களை நடத்தினர்.




ரோட்டரி, லயன்ஸ் போன்று ஜயன்ட்ஸ் என்பதும் சமூகத் தொண்டு புரிய ஏற்பட்ட ஓர் அகில உலக ஸ்தாபனம். அதன் ஓர் அங்கம் சென்னையில் தொடங்கப் பட்டுள்ளது. அங்குரார்ப்பண நாளிலேயே நங்கநல்லூரில் ஒரு 'கிளினிகல் லாபரேட்டரி'யைத் தமிழக ஆளுநர் கே. கே. ஷாவைக் கொண்டு தொடங்கி வைத்துள்ளனர்.

பொழுதே நீ போகாய்




1 பதினாறு நெருப்புக் குச்சிகளைக் கொண்டு இந்தமாதிரி ஒரு வடிவம் அமைத்துக் கொள்ளுங்கள். இனி இதிலிருந்து நான்கு நெருப்புக் குச்சிகளை மட்டும் எடுத்து விட்டு நான்கு முக்கோணங்களே மீதி இருக்கும்படி செய்யுங்கள்!

2



நெருப்புக் குச்சியில் இன்னொரு விளையாட்டு. 12 குச்சிகளை இப்படி அடுக்கி கொள்ளுங்கள். இரண்டு குச்சிகளை மட்டும் நீக்கி விட்டால் மீதி இரண்டு சதுரங்கள் இருக்க வேண்டும்.



ooooooooooooooooooooooooooooooooooooooo


3 பதினாறு கட்டங்களுள்ள ஒரு சதுரம் வரைந்து கொள்ளுங்கள். நான்கு சிவப்புக் காய்களையும், நான்கு நீலக் காய்களையும் எடுத்துக் கொண்டு இதில் எட்டுக் கட்டங்களில் வைக்க வேண்டும். ஒரு நிபந்தனை. ஒரே நிறமுள்ள இரண்டு காய்கள் அடுத்தடுத்தோ, நேர் கோட்டிலோ குறுக்கு வெட்டாகவோ, மேலிருந்து கீழோ இருக்கக் கூடாது.


ooooooooooooooooooooooooooooooooooooooo

4 வீட்டில் செஸ் போர்ட் இருந்தால் எடுத்துக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் ஒரு காகிதத்தில் 8x8=64 கட்டங்கள் வரும்படி ஒரு சதுரம் வரைந்து கொள்ளுங்கள். எட்டுக் காய்களை எடுத்து எட்டுக் கட்டங்களில் வைக்க வேண்டும். ஒரு விஷயம். நேராகவோ, குறுக்கு வெட்டாகவோ மேலிருந்து கீழோ எந்த வரிசையிலும் ஒன்றுக்கு மேற்பட்ட காய்கள் இருக்கக் கூடாது.

ooooooooooooooooooooooooo

5 கையை எடுக்காமல் ஒரே கோடாகக் கீழ்க்கண்ட படங்களை வரைய முடியுமா? வரைந்த கோட்டின் மேல் மீண்டும் போகக் கூடாது. கோட்டைக் குறுக்கே வெட்டுவதில் தவறில்லை.





6 ஒரு சிறு பெருக்கல் கணக்கு. இதன் விடையைக் கண்டுபிடிக்கக் குறைந்தபட்சம் எவ்வளவு நேரம் ஆகிறது உங்களுக்கு?

1 x 2 x 3 x 4 x 5 x 6 x 7 x 8 x 9 x 0

—எம். சிவசுப்பிரமணியம்



மாஜிஸ்டிரேட் அன்று கோர்ட்டுக்கு வந்தபோது வழக்கத்தைவிட அதிக நேரமாகி விட்டது. வக்கீல்களும் கட்சிக்காரர்களும் போலீஸ் அதிகாரிகளும் காத்திருந்ததைப் பார்த்த மாஜிஸ்டிரேட், "இன்று கைக் கடிகாரத்தை மேஜையின்மேல் வைத்துவிட்டு மறந்து வந்து விட்டேன். நேரம் தெரியவில்லை" என்றார்.

சிறிது நேரத்துக்கெல்லாம் மாஜிஸ்டிரேட் வீட்டுக்கு ஒருவன் வந்து, மாஜிஸ்டிரேட் தம் கைக்கடிகாரத்தை வாங்கிவரும்படி அனுப்பியதாகக் கூறினான். வீட்டு வேலையாள் சிறிது தயங்கவும், "மேஜையின் மேல் வைத்திருப்பதாகச் சொன்னார் அய்யா. சீக்கிரம் கொண்டுவா" என்றான் அந்த ஆள் அதிகாரமாக. அவன் கூறியது போல் மேஜையின் மீது கடிகாரத்தைப் பார்த்த வேலையாள் சந்தேகம் நீங்கப் பெற்றவனாகக் கடிகாரத்தை ஆள் வசம் கொடுத்தான். கடிகாரத்தைப் பெற்றவன் கம்பி நீட்டிவிட்டான்!

— எஸ். என். ராஜாராம்

ஆதாரம்: கோர்ட் உலகம்

oooooooooooooooooooo



'கீல்' விடவில்லை!

பிரான்ஸ் நாட்டில் லில்லி என்ற நகரில் பத்தாவது மாடியிலிருந்த தன் வீட்டிலிருந்து கீழே விழுந்த ஒரு பத்து வயதுப் பையன் எழுந்திருந்து 'லிப்ட்'டில் ஏறித் திரும்ப வீட்டுக்கும் போய்விட்டான்! —ஹிம்மத் - கே. ஆர்.



பத்தில் ஒரு பங்கு!

தமிழ்நாட்டுக் கோவில்களில் தேங்காய் உடைப்பவர்கள் உடைத்த தேங்காயின் துண்டுகளை எடுப்பது வழக்கமில்லை. ஆனால் திருவனந்தபுரத்தில் சிதறிய துண்டைப் பிரசாதமாக எடுத்துக் கொள்கிறார்கள். உடைத்த தேங்காயில் பத்தில் ஒரு பங்கைப் பிரசாதமாக எடுத்துக்கொள்ளலாம் என்று கூறும் அறிவிப்பு திருவனந்தபுரத்தில் பழவங்காடி என்னுமிடத்தில் பிள்ளையார் கோவிலில் காணப்படுகிறது.

நுங்கு சர்பத்!


திருவனந்தபுரத்தில் உள்ள ஒவ்வொரு வெற்றிலைப்பாக்குக் கடைக்கும் எதிரே பனங்காய்கள் மலையாகக் குவித்து வைக்கப்பட்டுள்ளன. அவர்கள் நுங்கைத் தனியாக வெட்டிக் கொடுப்பது இல்லை. வாழைப்பழத்தை 'மிக்ஸி'யில் போட்டு அரைத்துக் கூழாக்கி அதனுடன் நுங்கையும் சேர்த்துச் சர்பத் செய்து தருகிறார்கள். மிகவும் சுவையாக இருக்கிறது.

- மு. இரவீந்திரன்


××××××××××××××××

விடைகள்:


① ②




③



④




⑤



6. கடைசி எண்ணை மட்டும் கவனித்தால் போதும். விடையை ஒரு நொடிக்குள் கூறிவிடலாமே!

எண்ணெய் இல்லாத காரணத்தால் ஐரோப்பிய நாடுகளும், இங்கிலாந்தும் அரேபிய நாடுகள் இழுத்த இழுப்புக்கெல்லாம் போகவேண்டியிருக்கிறது என்பதைச் சித்திரித்து இப்படி ஒரு கார்ட்டூன் வந்திருக்கிறது 'டைம்' பத்திரிகையில்.

- தகவல்: கே. ஆர்.



ஏழைமையைக் காப்போம்!

"அயல் நாடுகளில் அரசாங்கங்கள் ஏழைகளுக்கு உதவுகின்றன. நமது நாட்டில் ஏழைகள் அரசாங்கத்துக்கு உதவுகிறார்கள்!"

என். ஏ. பல்லிவாலா - தம்மத் - பாபு



"சரி சரின்னுண்டே தலையாட்டறதை இன்னுமா நிறுத்தவில்லை? நான் பேச்சை நிறுத்தி அஞ்சு நிமிஷம் ஆச்சு....!"

"!!!!!!!!!"

ஓர் இரவு நேரத்துப் பாஸஞ்சர் வண்டி!...

வாசவன்

ராமு பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தான்.

மாட்டுத் தொட்டிக்குத் தண்ணீர் விட்டாயிற்று. பம்ப் செட் இறைத்துத் தோட்டத்துக்குப் போய்க் கத்திரிப் பாத்திகளுக்குத் தண்ணீர் பாய்ச்சியாயிற்று. பாட்டி கொழுந்துப் பிரண்டையாய்க் கொண்டு வரும்படி நேற்றிரவு கடுமையாய் நோட்டீசு விட்டிருந்தாள். கத்திரிச் செடிக்குத் தண்ணீர் விட்டுவிட்டுத் திரும்பும் வழியில், கோனார் வீட்டுத் தோட்டத்து வேலியிலிருந்து கொழுந்துப் பிரண்டையாய்க் கொண்டு வந்தாயிற்று. மாமாவுக்கு வெந்நீரும் போட்டாகி விட்டது. அவர் இப்பொழுது குளிக்க வரமாட்டார். அவர் வாசல் கொட்டகையில் சிவில் கோர்ட், கிரிமினல் கோர்ட் எல்லாம் நடத்திவிட்டுக் குளிக்க வரும்பொழுது சில சமயங்களில் மத்தியானம்கூட ஆகிவிடும். அதற்காக ராமு நினைத்த நேரங்களில் வெந்நீர் போட்டு விட முடியாது. அவர் எப்பொழுது வேண்டுமானாலும் குளிக்கத் தோதாக, அதிகாலையிலேயே வெந்நீர் தயாராகிவிட வேண்டும். மகாராஜன் வீட்டு வெந்நீர் ! எவ்வளவு நேரம் அடுப்பில் காய்ந்தால் என்ன ? சர்க்கார்ப் புறம்போக்கு மரங்கள் இருக்கும் வரையில் விறகுக்குப் பஞ்சம் ஏது ?

வெந்நீர் அடுப்பில் ஒரு விறகைத் திணித்து விட்டுத் தலைநிமிர்ந்த ராமுவுக்கு, அடுத்த வேலை காத்துக் கொண்டிருந்தது.

மாமாவின் பூஜைக்குப் பூ எடுக்க வேண்டும்.

''ராமு !......'' மின்னல் நீளமாய் ஓடி நெஞ்சைப் பிரகாசமாக்குகிற மாதிரி ஒரு குரல். அவன் எல்லோருக்கும் நொண்டி ராமுதானே ? இப்பொழுது அவன் யாருக்கு வெறும் ராமு ?

பூக்குடலையுடன் நந்தியாவட்டைச் செடியை நெருங்கிக் கொண்டிருந்த ராமு, தன் இதயத்தை நோக்கிப் பூவாய் வந்து வருடிய குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.

பானு! மாமாவின் இரண்டாவது பெண். அவள் பெரிய வளர்த்தி இல்லை. கொஞ்சம் குள்ளக் கத்திரிக்காய்தான். அதற்காக அவளை ஒரே பார்வையில் அலட்சியப்படுத்தி விட முடியாது. அப்படி ஒரு வசீகரம் அவளுக்கு. அவள் ஒரு போதை ! அவள் இன்னும் சேலைக்கு வரவில்லை. எப்பொழுதோ வந்திருக்க வேண்டியவளை, பட்டாமணியம் மாமா தாவணிக்குள் ஒரு குழந்தையாக ஒளித்து வைத்திருக்கிறார்.

அது கிடக்கட்டும். 'டேய் நொண்டி!' என்று குப்பையைக் கூட்டி எறிகிற மாதிரி எப்பொழுதுமே அவனை அலட்சியமாகக் கூப்பிடுகிற பானு, இப்பொழுது 'ராமு' என்று அழகாகப் பெயரைச் சொல்லி, அப்படிச் சொல்லுகிற குரலில் அன்பையும் இழைய விடுகிறாளே !

''ராமு! இந்தாடா காப்பி.....!'' என்று தாவணி மறைவுக்குள்ளிருந்து கையை வெளியே எடுத்தாள். அதில் காப்பி இருந்தது.

அவன் அதிர்ச்சி அடைந்தவனாய்ப் பின்னால் நகர்ந்து. ''என்னடி, இதெல்லாம் ? வீட்டிலே இருக்கிறவா கண்ணைக் கட்டிட்டு எனக்குக் காப்பி கொண்டு வந்திருக்கியா? நான் குடிக்கமாட்டேன். எடுத்துண்டு போ!'' என்று பொரிந்தான்.



பானுவுக்கு வழக்கம்போலக் கோபம் வந்திருக்க வேண்டும். ஆனால் அப்பொழுது வரவில்லை. ராமு! ''உனக்கு மாடு மாதிரி உழைக்க மட்டும்தான் தெரியும்னு நினைச்சேன். உனக்குக் கோபிக்கக்கூடத் தெரிகிறதே!'' அதைத் தொடர்ந்து அரும்பு வெடித்த மாதிரி ஒரு சிரிப்பு. பிறகு அந்தச் சிரிப்புக்கணைத் திரை போடுகிற மாதிரி ஒரு பெருமூச்சு. அடுத்து அவனை அனுதாபத்தில் அள்ளிக் கொள்கிற ஒரு குளிர் பார்வை. ''ஏண்டா, ராமு! இந்த ஆத்துக்காக உழைச்ச உழைச்ச நீ ஓடாத் தேஞ்சு போயிண்டு

இருக்கே! உன் உழைப்புக்குப் பணம்தான் கொடுக்கலே. போறு. வேளா வேளைக்குச் சாப்பாடாவது போடறுளோ ? இந்த நன்றிகெட்டவா மாதிரி நானும் முகத்தைத் திருப்பிண்டு போகாமே உன்னை நோக்கி அனுதாபமும், ஆறுதலுமா வந்திருக்கிறேனே இதனுலேதான் நீ எறிஞ்சு விழறயா ?..... காப்பி ஆறிப் போறது. முதல்லே குடி. பிறகு எரிஞ்சு விழலாம்'' என்று காப்பித் தம்ளரை அவனிடம் நீட்டினுள்.

''என்னைக் கண்ட போதெல்லாம் மத்தவர் களைவிட அதிகமாகக் கரிச்சுக் கொட்டற உனக்கு, இப்போ என்னடி இவ்வளவு கரி சனம் ?''

''போதுண்டா நிறுத்து !'' என்று பட படத்தான் பாலு. அப்பொழுது குபீரென்று நெருப்புப் பிடித்துக் கொண்டதைப் போல் அவன் முகம் ஒரேயடியாகச் சிவந்திருந்தது. ஆனல் அந்தச் சிவப்பு ஒரு கணத்தில் குத்து விளக்கின் சுடராய் அடங்கிக் குளிர்ந்தது.

'' ராமு! நான் ஒன்னு கேட்கிறேன். பதில் சொல்லு. நேத்துச் சாயங்காலம் மொட்டாய் இருந்த இந்த நந்தியாவட்டை இன்னிக்கு மலர்ந்து சிரிக்கிறதே. அதுக்குக் காரணம் என்ன?'' என்று கேட்டாள்.

''எனக்கு என்னடி தெரியும்?'' என்று மலங்க மலங்க விழித்தான் ராமு.

''இப்போத் தெரிஞ்சுக்கோ. மொட்டுக்குப் புழுக்கம் தாங்கல்லே. அது அப்படியே விம்மி வெடிச்சிடுத்து. அது மாதிரி மொட்டாய் மூடிக் கிடந்த என் மனம், இன்னிக்கு விம்மி வெடிச்சிடுத்து. எல்லோருமே உன்னை மனிதனு நினைக்கலே. மாடா நினைக்கிறு. உன் முதுகு ஒடிஞ்சிடற மாதிரி பாரத்தை ஏத்தறு. இந்தக் கொடுமையை நினைச்சுப் பார்த்ததும் என் மனம் படார்னு வெடிச்சுடுத்துடா, ராமு....... !''

''காரணம் ?''

''புரியலையாடா ! மொட்டு ஏண்டா பூவா வெடிக்கிறது ?''

''அதை எல்லாம் யாருடி கண்டா ?''


''நீ மாடா மட்டும் இல்லேடா ராமு! சிந்திக்கத் தெரியாத மண்டுவாகவும் இருக்கே! மொட்டு மலர்ந்துட்டா, பிறகு அது செடிக்கு இல்லே. அது பறிக்கிறவர்களை எதிர்பார்த்து ஏங்கிண்டு இருக்கு!''

''அது மாதிரி.....?''

''போடா !'' என்று அலுப்போடு சிரிக் கிருள் பாலு. அந்தச் சிரிப்பு ராமுவைக் குளவியைப் போல் கொட்டாமல் அவன் உள்ளத்தில் தென்றலாய்த் தடவுகிறது.

''ராமு! காப்பி ஆறிப் போயிண்டே இருக் குடா. காலையிலே இருந்தே நீ குலைப் பட் டினியா இருக்கே. வாங்கி வாயிலே ஊத் திண்டுதான் பேசேன்!'' அவள் குரல் குளிர்ந்து. அவள் கண்களிலும் அது பெயர்க் கிறது.

இது வரை பிறருடைய வெப்பத்திலேயே வியர்க்க வியர்க்க ஓடிப் பழக்கப்பட்டுவிட்ட ராமுவின் மனத்தில், அந்தப் புதிய குளிர்ச்சி இனிய வருடலாக நிறைகிறது.



அவன் காப்பியை வாங்கி மடமடவென்று குடித்தான். ஆறின காப்பிதான். ஆனால் அதற்குள் ஓர் உள்ளம் இருக்கிறது. அது என்னமாய் ருசிக்கிறது?

அவன் ருசியில் ஈரமான உதடுகளை நாக்கால் தடைத்துக் கொண்டே தலைநிமிர்ந்த பொழுது, அவள் ஒரு சிரிப்புடன் காப்பித் தம்ளரை வாங்கிக் கொண்டாள். பிறகு எதுவும் பேசாமல் நடந்தாள்.

கோவிந்து திண்ணையில் உட்கார்ந்து, ஒரு மாத இதழைச் சுவாரசியமாகப் படித்துக் கொண்டிருந்தான்.

"கோவிந்து....!" என்று அழைத்துக் கொண்டே அவனை நெருங்கிய ராமு, தயங்கித் தயங்கி, "உன்னண்டை ஒண்ணு கேட்கணும்டா" என்றான்.

"கேளேண்டா!"

"நேத்து வரை எரிஞ்சு எரிஞ்சு விழுந்த ஒரு பெண், இன்னிக்குத் திடீர்னு குழைஞ்சு சிரிச்சுப் பேசினா, என்னடா அர்த்தம்?" என்று ஆர்வத்துடன் கேட்டான் ராமு. பிறகு, "எப்படித் தெரியுமோ, சிரிச்சா? தூரத்திலே மழை வருகிறபோது ஒரு மின்னல் தூக்கி அடிக்குமே, அது மாதிரி அவள் சிரிச்சா. அந்தச் சிரிப்பு மின்னலிலே நான் கண் கூசி நின்றபோது, 'சோ'ன்னு மழை கொட்ட ஆரம்பிச்சிடுத்து. நான் கண்ணைத் திறந்து பார்க்கிறேன். வெளியே மழை இல்லே. என் மனசுக்குள்ளேதான் அந்த மழை பெய்து கொண்டிருந்தது. என் பிறவியின் கோணல் நிமிர்ந்துவிட்ட மாதிரி இருந்தது. என் மனசிலே இருந்த கரி, புகையை எல்லாம் துடைச்சு ஒரு விளக்கேற்றி வைச்ச மாதிரியாகவும் இருந்தது...." என்று உற்சாகமாக விவரித்தான்.

"எனக்கு விளங்கிடுத்து" என்று பலமாகத் தலையாட்டினான் கோவிந்து.

"என்னடா?"

"அவள் உன்னைக் காதலிக்கிறாடா!"

"நானும் அப்படித்தாண்டா நினைச்சேன்" என்று மகிழ்வோடு தலையை உருட்டினான் ராமு. இனி அதிக நேரம் இங்கே நிற்க முடியாது. வெந்நீரை விளாவி வைப்பதற்காக மாமா அவனைத் தேடிக் கொண்டிருப்பார்! "நான் வரேண்டா, கோவிந்து!" என்று கிளம்பினான்.

கொல்லைக் கதவை யாரோ தாழிட்டு விட்டார்கள். இனி தலைவாசல் வழியாகத்தான் வீட்டுக்குள் போயாக வேண்டும். வாசலில் பட்டாமணியம் மாமா இருந்தால் வேறு வினையே வேண்டாம். 'கவர்னர் துரை எங்கே உலாவப் போயிட்டு வரார்!' என்று அவர் பிடித்துக் கொள்வார். இன்று கவர்னர் துரை வகையாக மாட்டிக் கொள்ளத்தான் போகிறார்.

தலைவாசல் பக்கம் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு நடந்தான் ராமு.

திண்ணைக்கு வெளியே தெருவில் பாதியை அடைத்துக் கொண்டு ஒரு நீளமான கீற்றுக் கொட்டகை. மாமாவின் தர்பார் அங்கே தான் அட்டகாசமாக நடந்து கொண்டிருக்கும். ராமு கொட்டகையின் மறைவில் போய் நின்றுகொண்டு மாமாவின் தர்பாரை நோட்டம் விட்டான்.

மாமா வழக்கம்போலத் தன் பரங்கிப் பழத் தொந்தி தெரிய ஈஸிசேரில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். அவர் எதிரே தரையில் ஊர்ப் பெரிய மனிதர்கள் உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பின்னால் சற்றுத் தள்ளி, கோபாலன் நின்று கொண்டிருக்கிறான்.

அங்கே பெரிய மனிதர்கள் எல்லாம் ஒன்று கூடியிருப்பதால் என்னவோ நடக்கிறது. அல்லது நடக்கப் போகிறது.

ராமு மறைவை விட்டு வெளியே வராமல் தர்பாரைக் கூர்ந்து பார்த்தான்.

ஆறுமுகம் சேர்வை தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "பட்டாமணியம்! கோபாலன் யார்? உங்க தங்கையின் பிள்ளை. பஞ்சாயத்துத் தேர்தலிலே உங்க பிரியத்துக்குப் பெரிதும் பாத்திரமான ராமசாமித் தேவரைத் தலைவராக நிறுத்தி வைச்சீங்க. அவரை விட அந்தப் பதவிக்கு மிகவும் தகுதியான ஆண்டிச்சாமி அம்பலத்தைக் கோபாலன் ஆதரிச்சான், உழைச்சான். ஆண்டிச்சாமி அம்பலம் ஜெயிச்சுட்டார். உங்க ஆளான ராமசாமித் தேவர் தோற்று விட்டார். அந்தத் தோல்வியை நீங்க உங்க தோல்வியாக நினைச்சீங்க. அதுக்குக் காரணமான கோபாலனை உறவுப் பிள்ளைன்னுகூடப் பார்க்காமல் தூக்கி எறிஞ்சுட்டீங்க. தேர்தல் வரும் போகும். அதுக்காக உறவை முறிக்கலாமோ?" என்று பெரிய பீடிகை போட்டார்.

பின்னால் நின்று கொண்டிருந்த கோபாலன் இப்பொழுது முன்னால் வந்து நின்றான். அவன் மாமாவைத் திரும்பிப் பார்க்கவில்லை. மற்றப் பெரிய மனிதர்களைப் பார்த்தான். "விவகாரத்தை மேலே வளர்க்க வேண்டாம்... பானுவை நான் விரும்புகிறேன். அவளும் என்னை விரும்புகிறாள். நாங்கள் அப்படி விரும்புகிறதை இப்போ என் முகத்தில் விழிக்கத் தயாராக இல்லாத இந்த மாமாவும் அப்போ அபாரமா விரும்பினார். பானுவை எனக்குத் தர முடியுமா, முடியாதா? எனக்கு ஒரே வார்த்தையிலே பதில் தெரியணும். கேட்டுச் சொல்லிடுங்கோ" என்று படபடத்தான்.

"ஆயிரம் பேர் வந்து கேட்டாலும் உனக்குப் பானுவைத் தரமுடியாது. அவளுக்கு நான் வேறு வரன் பார்த்திண்டிருக்கேன்!" — சத்தம் போட்டே பழகிவிட்ட மாமா இப்போது மெதுவான குரலில், கொஞ்சம் கூடப் பதற்றம் இல்லாமல் கூறினார்.

அதைக் கேட்டதும் திணறலாக வந்த பெருமூச்சைக் கற்பூரமாகக் கரைத்துக் கொண்டு, தனக்காக வழக்காட வந்து தோற்றுப்போன பெரிய மனிதர்களைப் பார்த்தான் கோபாலன். "உங்களுக்குக் கொடுத்த சிரமத்துக்காக என்னை மன்னிச்சிடுங்கோ. பட்டாமணியம் மாமா உறவுக்குத்தான் கட்டுப்படலே. ஊருக்காவது கட்டுப்படுவார்னு பார்த்தேன். அவர் அங்கேயும் வழுக்கிண்டு போயிடுறார். வாங்கோ போகலாம்!" என்று கூறிக் கொண்டே காற்றைப்போல் விரைந்தான்.

VOLTAS

முன்னிற்பவர் தரும் முதன்மையான சிக்கனம்— எப்படி?




(ரகசியம்: அதிக உறுதிப்பாடு, இயக்கும் செலவு குறைவு)

கிரிஸ்டல் டிலக்ஸின் விலையைக் கண்டு மலைக்காதீர்கள், முழுவதும் கேளுங்கள்; பின்னர் கூறுங்கள்.

கிரிஸ்டல், நீண்ட காலம் உழைப்பதற்காகக் கவனமுடன் உருவாக்கப்பட்டுள்ளது. நம்பகமான, நிரந்தர உறுதிப்பாட்டுக்காக. இதன் வெளிப்புற கேஸிங் எந்தப் பருவ நிலையாலும் பாதிக்கப்படாத வண்ணமும் உட்புற அமைப்பு துருப் பிடிக்காத வண்ணமும் அமைக்கப் பட்டுள்ளன. அதோடு ஒவ்வொரு பாகமும், அதிர்ச்சியைத் தாங்கும் வண்ணம் நன்கு பரிசோதிக்கப் பட்டுள்ளது. எனவே தொல்லைகள் இல்லை; நேரமும் மிச்சம்.

மற்றொரு சிறப்பம்சம்: கிரிஸ்டல், குறைந்த மின் விசையில் இயங்குகிறது. எனவே உங்களுக்குள்ள மின்விசை வரம்புக்குள் இதைத் தினமும் அதிக நேரம் இயக்கலாம்.



தவிர, கிரிஸ்டல் அதிவிரைவாகக் குளுமையும் சுகமும் தருகிறது. காற்றோட்டம் ஒரே சீராக இருக்கும். அறையில் எங்குமே குளுமை குறைந்திடாது. கண்ட்ரோல்களை இயக்குவது எளிது.

விற்பனைக்குப் பின்னர், நெ.1 கிரிஸ்டல் பெறும் உடனடி, நம்பகமான சேவை முதல் தரமானது.

சுருங்கச் சொன்னால், சிறப்புகளிலும் முன்னிற்பது, சிக்கனத்திலும் முன்னிற்பது கிரிஸ்டல். அதோடு, உங்கள் உடலும் உள்ளமும் குளிர உற்ற துணை— நெ.1 ஏர்கண்டிஷனர்.

வோல்டாஸ் கிரிஸ்டல்

வோல்டாஸ் — குளுமை தருவதையே குறிக்கோளாய்க் கொண்டவர்கள்.

வோல்டாஸ் லிமிடெட், பம்பாய் • கல்கத்தா • சென்னை • புது டில்லி • பெங்களூர் • லக்னோ • பாட்னா • அகமதாபாத் • சிகந்தராபாத் • கொச்சி • கான்பூர் • ஜாம்ஷெட்பூர்.

உங்கள் பகுதியில், எங்கள் அதிகாரம் பெற்ற விற்பனையாளர் யாரென அறிய அருகாமையிலுள்ள வோல்டாஸ் அலுவலகத்துடன் தொடர்பு கொள்க.

CMY-127-224 TAM

பெரிய மனிதர்கள் துண்டை உதறிக் கொண்டு எழுந்தார்கள். கோபாலனைப் பின் பற்றி நடந்தார்கள். அவர்களுக்கு இங்கிதம் தெரியும். 'போய் வருகிறோம்' என்று சொல்லிக் கொள்ளவும் தெரியும். ஆனால் பட்டாமணியத்திடம் அதை ஏன் விரயமாகச் செலவழிக்க வேண்டும்? அதனால்தான் அவர்கள் மௌனமாகப் போகிறார்கள்.

'ஒரு பொடிப் பயல்! கடைந்த மோரில் வெண்ணெய் எடுக்கக் கூடிய அதி சாமர்த்தியசாலிகளான ஊர்ப் பெரிய மனிதர்களை எல்லாம் எப்படி மயக்கி வைத்திருக்கிறான்?' என்ற கவலையுடன் ஈஸிச்சேரில் சாய்ந்த பட்டாமணியம் மாமா, கண்களை மூடிக் கொண்டு விட்டார். அவருக்குக் கவலை வந்து விட்டால் இப்படித்தான் கண்களை மூடிக் கொண்டு விடுவார்.

இனிமேல் 'கவர்னர் துரை' கவலையில்லாமல் மாமாவிடம் மாட்டிக் கொள்ளாமல் உள்ளே போய் விடலாம்.

ராமு பூனையைப் போல் பதுங்கிப் பதுங்கி வீட்டுக்குள் நுழைந்தபோது கதவுப் பின்னாலிருந்து கைவளை ஒலித்தது. பெருமூச்சு வந்தது. பிறகு ஒரு முகம் வெளிப்பட்டது.

அது பானுவின் முகம்.

''பானு! நீயா?'' என்று வாயைப் பிளந்த ராமுவுக்குத் தன் மகிழ்ச்சியின் அற்பத்தனம் புரிந்தது. இந்த மகிழ்ச்சிக்குத் தான் தகுதியானவன்தானா என்பதை அவன் இப்பொழுது தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

சுற்றுமுற்றும் பார்த்தான். கதவுப் பக்கம் நிலையாகவே ஓர் இருட்டு இருக்கும். கதவை யொட்டிக் குறுகலான ஒரு நடைபாதை. பிறகு கூடம். மாமியின் நடமாட்டம் கூடத்தோடு சரி. இப்போது அவள் குரல் கொல்லைப் பக்கம் கேட்கிறது. நல்லதாகப் போயிற்று.

''பானு! வெளிக் கொட்டகையிலே உன் அப்பாவும், ஊர்ப் பெரிய மனுஷாளும் உன் அத்தை பிள்ளை கோபாலனும் பேசிண்டு இருந்ததை நீ காது கொடுத்துக் கேட்டயோ?''

''ஊம், கேட்டேன்.''

''கோபாலன் பேசுகிறபோது, 'பானுவை நான் விரும்புகிறேன், அவளும் என்னை விரும்புகிறாள்'னு சொன்னான். அது உண்மையா?''

''அவன் என்னை விரும்புகிறானோ என்னவோ, அவனை நான் விரும்புகிறதாச் சொன்னானே, அது சுத்தப் பொய். அப்போ அங்கே ஊர்ப் பெரிய மனுஷா எல்லாம் இல்லாமல் இருந்தா, நான் அங்கே போய் அவன் பல்லை உதிர்த்துக் கையில் கொடுத்திருப்பேன்...'' என்று ஆத்திரத்துடன் படபடத்தாள் பானு.

''அதுதானே?... கோபாலன் அப்படிச் சொன்னதும் உண்மையிலேயே நான் பயந்து போயிட்டேண்டி பானு!'' என்று நிம்மதியாக மூச்சு விட்ட ராமு, அவள் முகத்தில் ஏக்கமான பார்வை ஒன்றை எழுதி, ''பானு! நான் உன்னைப் புரிந்துகொண்டேன்'' என்றான்.

'' டேய், நொண்டி மாடு! எங்கேடா தொலைஞ்சுட்டே?'' என்று கொல்லையிலிருந்தபடி கூச்சல் போட்டாள் மாமி.

ராமுவுக்கு 'நொண்டி மாடு' என்றும் யார் என்று தெரியாதா? ''இதோ வந்துட்டேன்,



விசாரணையில் வழிந்தது!

''இரவில் எத்தனை மணிக்கு நீங்கள் கைதியைப் பார்த்தீர்கள்?''

''சுமார் மூன்று மணிக்கு.''

''அப்பொழுது அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்ததா?''

''இல்லை.''

''உங்கள் கணவரை அப்பொழுது பார்க்க முடிந்ததா?''

''இல்லை.''

வக்கீலின் முகத்தில் வெற்றிக்கு அறிகுறி தோன்றியது. ''நீங்கள் உங்கள் அருகிலிருந்த கணவரைக் காண முடியாதபோது இவனை மட்டும் எப்படிக் கண்டீர்கள்?'' என்றார் புன்னகை தவழ.

''என் கணவர் அப்பொழுது வீட்டில் இல்லை. வெளியூர் சென்றிருந்தார்'' என்றாள் அந்தப் பெண்மணி. கோர்ட்டில் எழுந்தது சிரிப்பொலி. வக்கீல் முகத்தில் வழிந்தது என்னவோ?

ஆதாரம்: கோர்ட் உலகம் - எஸ். என். ராஜாராம்

மாமி!'' என்று எதிர்க் கூச்சல் போட்டுக் கொண்டே கொல்லையை நோக்கிப் பறந்தான்.

மறுநாள் இரவு. பதினொரு மணிக்குக் குறையாது.

மாமா ஜமாபந்தி எழுதத் நாலுகாக் கச்சேரிக்குப் போயிருக்கிறார். திரும்புவதற்கு நாலைந்து நாட்களாவது ஆகும். மாமிக்கு வந்த வாயுப் பிடிப்பு, மணல்மேட்டுப் பட்டியாளின் எண்ணெய்க்கு மசியவில்லை. கழுத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு பொழுதோடேயே சுருண்டு படுத்து விட்டாள். பாட்டிக்குத் திண்ணையிலே படுக்கை. இரவெல்லாம் தூங்க மாட்டாள். தெருவிலே போகிறவர்களையெல்லாம் நிறுத்தி வைத்து விசாரணை பண்ணாமல் விட மாட்டாள். ராமுவுக்குக் கொல்லையிலே மாட்டுக் கொட்டகையில் படுக்கை. மாட்டு உண்ணி 'மொசு மொசு' என்று இழையும். கொசு 'மொனு மொனு' என்று மொய்க்கும். எதைப் பற்றியும் ராமுவுக்குக் கவலை இல்லை. படுக்கையில் விழுந்தவுடன் தூக்கம் அவனை இரு கரங்களையும் நீட்டி அணைத்துக்கொள்ளும்.

அப்படிப்பட்ட கும்பகர்ணனுக்கு நேற்றிலிருந்து கண்களை மூடினால் தூக்கம் வரவில்லை.

அவன் உடம்பில் உண்ணி இழைகிறது. அவன் முகத்தில் கொசு கடித்துவிட்டுப் பறக்கிறது. இத்தனை தொல்லைகளுக்கும் நடுவே பானுவை நினைக்கும்போது, அந்த உள்ளத்தில் எப்படி ஒரு சுகம் அணைத்துக் கொள்கிறது?

''ராமு!...''

அந்த மெல்லிய குரலைக் கேட்டுப் படுக்கையில் எழுந்து உட்கார்ந்த ராமுவுக்குப் புரிந்து விட்டது. ''பானுவா?'' அவன் குரலில் இன்பப் பரபரப்பு.

''ஆமாண்டா!''

இருட்டில் அவள் முகம் தெரியவில்லை. ஆனால் அதன் இதயம் தெரிகிறது. ''இருட்டில் எங்கேடி வந்தே?'' என்று பாசாங்கான சங்கடத்துடன் ஒரு கேள்வி கேட்டான்.

பானு ஒரு பெருமூச்சுடன் அவன் அருகே உட்கார்ந்து கொண்டு மெதுவான குரலில் பேசினாள்: ''ராமு! எனக்கு இந்த வீட்டிலே இருக்கக் கொஞ்சம் கூடப் பிடிக்கலேடா!''

வாட்டம் நீங்க வட்டமான யோசனை!



மின்வெட்டைக் குறைப்பதற்கு ஒரு திட்ட வட்டமான யோசனை:

இரவில் கார் மற்றும் வாகனங்கள் விளக்கும் போடாமல் ஓடுவதன் மூலம் மின்சாரத்தைச் சேமிக்கலாமே!

-ஆர். சுப்பிரமணியம்

''ஏன்மா?''

''நேத்து ஊர்ப் பெரிய மனுஷாளிடத்திலே அப்பா எனக்கு வேறே வரன் பார்த்திண்டிருக்கிறதாச் சொன்னார். அவர் பொய் சொல்ல மாட்டார். வேறே வரன் பார்த்துண்டுதான் இருப்பார். அவர் ஜமாபந்தியை முடிச்சுண்டு ஊர் திரும்புகிறபோது கையோடு ஒரு பையனை அழைச்சுண்டு வந்து நின்னாலும் நிற்பார். அவர் அத்தனை பிடிவாதக்காரர். மனசிலே ஒருவனை நினைச்சுண்டு இன்னொருத்தனுக்கு எப்படிடா கழுத்தை நீட்டுகிறது?''

அவள் உள்ளத்தைத் திறந்து கொட்டத் தொடங்கியிருக்கிறாள். அவளே பேசட்டும்.

''நான் ஓடிப் போகப் போறேண்டா!''

ராமு அதை எதிர்பார்க்கவில்லை. ''என்னடி பேத்தறே?'' என்று அதட்டினான்.

''நான் பேத்தலேடா ராமு! நான் எனக்குன்னு ஒரு வாழ்க்கையைத் தீர்மானிச்சுட்டேன். நீ கூட வரப்போறியா, இல்லையா?''

''மாமாவுக்கு என்னைத் துரோகம் பண்ணச் சொல்றியாடி பாநு!''

''மனுஷனா இருந்தால்தான் துரோகம் பண்ணக்கூடாது. இந்த வீட்டைப் பொறுத்த வரையில் நீ நொண்டி மாடுதானே? மாட்டுக்கு ஏதுடா தர்மம்?''

பாநு உண்மையைத்தானே சொல்கிறாள்? இந்த வீட்டிலே அவனை யார் மனிதனாக நடத்தினார்கள்? அதற்கெல்லாம் சேர்த்துப் பழி வாங்கிக் கொள்ள இப்பொழுது ஒரு நல்ல சந்தர்ப்பம் வந்திருக்கிறது. அதைப் பயன்படுத்திக் கொண்டால் என்ன?

''நானும் உன்னோடு கிளம்பி வந்துடறேன், பாநு! ஆனா எனக்குத் தெக்கு வடக்குத் தெரியாதேடி?''

''உனக்குத் தெரியாவிட்டால் என்னடா? எனக்குத் தெரியும். மணிமங்கலம் ஸ்டேஷனிலே பன்னிரண்டரை மணிக்கு ஒரு பாஸஞ்சர் வண்டி வரும். அதைப் பிடிக்கிற மாதிரி நாம்வேகமாகப் போயாகணும். கிளம்புடா!''

''இதோ கிளம்பிட்டேண்டி!''

இத்தனை காலமாகப் பகல் என்றும் இரவு என்றும் பாராமல் உழைத்த ஒரு மாடு — அதுவும் நொண்டி மாடு — பாநுவின் பின்னால் மனிதனாகிப் போய்க் கொண்டிருந்தது!

மணிமங்கலம் ரயில்வே நிலையம், மங்கிய வெளிச்சத்தில் அழுது வடிந்து கொண்டிருந்தது. ஆனாலும் போர்ட்டர் மணி அடித்தான். வடக்கே போகிற வண்டிக்குக் கை காட்டி சாய்ந்து வரவேற்றது. அழுகைக்கு இடையில் அப்படி ஒரு பரபரப்பு அமைதியாக ஏற்பட்டுக் கொண்டிருந்த அந்தச் சமயத்தில் பாநுவும் ராமுவும் அங்கே போய்ச் சேர்ந்தார்கள்.

''எங்கேடி பாநு போகிறது? டிக்கெட் எடுக்கணுமே! பணம் வைச்சிருக்கியோ?'' என்று கேட்டான் ராமு.

''உனக்கு அந்தக் கவலை வேண்டாம். டிக்கெட் தயாராக இருக்கும்!'' என்ற பாநு, பிளாட்பாரத்தில் கண்ணோட்டம் விட்டாள்.

''பாநு! ஏன் இவ்வளவு நேரம்?'' என்று பரவசப் பரபரப்புடன் கேட்டுக் கொண்டே அவர்களை நோக்கி வந்தான் கோபாலன்.

'இவன் எங்கே வந்து தொலைத்தான்?' என்று தனக்குத் தானே ஒரு கேள்வியைக் கேட்டுக் கொண்டு திணறினான் ராமு.

''பாநு...!'' — உணர்ச்சியோடு வெளிப்பட்டது கோபாலனின் குரல். ''நீ வருவாயோ மாட்டாயோன்னு நான் என்ன மாய்த் தவிச்சுப் போனேன் தெரியுமா? உன்னைக் கண்டதும்தாண்டி உசிரே வந்தது!''

''உனக்கென்ன கோபாலா! ஊரிலே யாரும் சந்தேகப்படக் கூடாதுங்கிறதுக்காக என்னை இங்கே தனியாப் புறப்பட்டு வரும்படி சொல்லிட்டே. இரவிலே நான் எப்படித் தனியே வரமுடியும்? அதற்காக இந்த ராமுவை நான் எவ்வளவு தூரம் தயாரிச்சேன் தெரியுமா?'' என்று சிரித்தாள் பாநு.

'என்ன! நான் தயாரிப்புத்தானா?' என்று அலறியது ராமுவின் மனம். அவர்களுக்கு அவனைப் பற்றிக் கவலைப்பட நேரம் இல்லை.

பாஸஞ்சர் வண்டி வந்துகொண்டிருந்தது.

''பாநு! நம்முடைய வாழ்க்கைப் பிரயாணம் பெரியவர்கள் சம்மதத்தோடு ஆரம்பமாகணும்னு நெனைச்சு ஊர்ப் பெரிய மனிதர்கள் துணையோடு போய் உன்னை எனக்குக் கொடுக்கும்படி உங்க அப்பாவிடத்திலே கேட்டேன். அவர் என்னைத் தூக்கி எறிஞ்சிட்டார். அப்போ அவருக்குத் தெரியாது. அவர் தூக்கி எறிஞ்சது என்னை மட்டும் இல்லை; உன்னையும்தான் என்கிறது. இதைத் தவிர வேறு வழியில்லேங்கற நெருக்கடியான நிலையிலே நாம் வாழ்க்கையைத் தேடி, இந்த இரவு நேரத்துப் பாசஞ்சர் வண்டியிலே போகப் போகிறோம். இதுக்கு உதவியாக இருந்த ராமுவை நாம் என்னிக்குமே மறக்க முடியாது. வண்டி வந்துடுத்து. வா, போகலாம்!'' என்று பாநுவின் கரத்தைப் பற்றிக்கொண்டு நடந்தான் கோபாலன். பெருமூச்சு விட்டுக் கொண்டு வந்த பாசஞ்சர் வண்டியில் அவர்கள் ஏறிக் கொண்டார்கள்.

''ராமு!'' பாநுதான் அழைக்கிறாள்.

ராமு முட்டிக்கொண்டு வந்த கண்ணீரை அடக்கிக் கொண்டு அவளைப் பார்க்கிறான்.

''ராமு! உன் உதவியை நான் எப்போதும் மறக்க மாட்டேன்.''

நாக்கின் நுனியிலிருந்து நன்றி வருகிறது.

''குட் பை!''

சாமர்த்தியங்கள் சிரிக்கின்றன.

ரயில் ஊதிக்கொண்டு நகர்கிறது.

அதன் சக்கரங்களில் காதலித்துத் தோற்றுப்போன ஓர் உள்ளம் நொறுங்கிச் சிதறுகிறது. மாடு — அதுவும் நொண்டி மாடு — அழுகிறது!



அந்தி நேரச் செவ்வானம் என்று பொருள் படும் இம்மலையாளப் படம் மிகவும் அருமையாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இப்படத்தில் ஓர் அதிசயம்! கற்பழிப்பு, வேறு ஆபாசக் காட்சி எதுவும் இல்லை. ஆனால் இது ஒரு 'ஏ' படம். காரணம், திகில் ஊட்டும் கொலைக் காட்சிகள் நிறைய இருக்கின்றன.

வாலிபன் சிவனது வாழ்வில் மூன்று பெண்கள் குறுக்கிடுகின்றனர். முதற் பெண்—ராகினி—ஊமை. சிவன் அவளைக் கண்டதும் காதல் கொள்ளுகிறான். அடுத்தவள் அவனது முறைப் பெண், சுசீலா. மூன்றுமவள் டென்னிஸ் ஆட்டக்காரி ரோஸி. ராகினி, திருமணம் நிச்சயமாகும்போது பாம்பு கடித்து இறந்து விடுகிறாள். சுசீலாவுக்கும், சிவனுக்கும் திருமணம் நிச்சயமான அன்றிரவே கழுத்து நெரிக்கப்பட்டுக் கொல்லப்படுகிறாள். சிவன், பிறகு ரோஸியை மணக்கிறான். அவளும் கழுத்து நெரிக்கப்படும்போது தப்பிவிடுகிறாள். கொலை நடந்தது எப்படி என்பது கடைசிக் காட்சியில் வெளியாகிறது.

ஒரு பெண் உருவத்தில் ஆவி அவ்வப்போது தோன்றி அனைவரையும் அச்சுறுத்துவதும், கழுத்தை நெரித்துக் கொலை செய்வதும் முதலில் புதிராக இருக்கிறது. ராகினியை இழந்த அதிர்ச்சியில் சிவனது மனநிலையில் ஒரு கொடூரம் ஏற்பட்டு விடுகிறது. அவன்தான் ராகினியின் புடவையைச் சுற்றிக்கொண்டு நள்ளிரவில் வலைய வருகிறான். ராகினியாகவே தன்னை எண்ணிக்கொண்டு சக்களத்திகளைக் கொலை செய்கிறான்.

அதிக வசனங்கள் இல்லை; யாருடைய நடிப்பிலும் செயற்கைத் தன்மையோ, அநாவசியமான ஆர்ப்பாட்டமோ இல்லை.

கதாநாயகனாக வரும் மோகனின் தோற்றம் முதல் மார்க் பெற்று விடுகிறது. அமைதியாக நடித்துப் பாத்திரத்துக்கு உயிர் கொடுக்கிறார்.

ஊமைப் பெண் ராகினி, லக்ஷ்மி; சில காட்சிகளிலே மட்டும் வந்து, ஒரு வார்த்தை கூடப் பேசாமல், தாம் ஏற்ற பாத்திரத்தின் தன்மையை நன்கு வெளிப்படுத்துகிறார். சிவன் ராகினியிடம் தன் மனத்தைத் திறந்து காட்டும்போது அவளிடம் முதலில் பயமும், பிறகு நாணமும் கடைசியில் மகிழ்ச்சியும் மௌனமாகவே வெளிப்படுகின்றன. இனம் தெரியாத சோகமும், கள்ளம் கபடமற்ற குழந்தைத்தனமும் லட்சுமியின் நடிப்புக்குக் கட்டியம் கூறுகின்றன.


விதுபாலா ரோஸியாக நன்கு சோபிக்கிறார். மேஜர் ஜானாக வரும் அடூர் பாஸியின் நடிப்பு ஸீரியஸாகவும் தமாஷாகவும் ரசிக்கும்படி இருக்கிறது. சுஜாதா, சுசீலா; சிவனின் முறைப் பெண். சிவன் தன்னை மணக்க விரும்புகிறான் என்று தெரிந்ததும் உண்டாகும் உள்ளப் பூரிப்பை என்னமாய் வெளிப்படுத்துகிறார்!

கே. எஸ். சேது மாதவனின் டைரக்ஷன் படத்தின் தனிச் சிறப்பு. மூன்று பாடல்களும் கேட்க இனிமையாக இருக்கின்றன. கதை எழுதிய பாலு மகேந்திராவே காமிராவை அருமையாக இயக்கியிருக்கிறார். தோப்பில் பாஸி திரைக்கதை, வசனம் தீட்டியிருக்கிறார்.

'ஒரு மானஸிக ரோகியிருடெ அந்திமம்' (ஒரு மன நோயாளியின் முடிவு) என்று மேஜர் ஜான் (ரோஸியின் தந்தை) கடைசியாகக் கூறும் வாக்கியம் படத்தையே படம் பிடித்துக் காட்டுகிறது.

— காந்தன்

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran



Registered No. M. 4322
Registered as a Newspaper in Ceylon

